Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : Issued :

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஜூன் 10, 2011—தொகுதி 3—எண் 2**

**Friday, the 10th June 2011—Volume 3—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

## 10–6–2011

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—** *143-255*

திரு. எம். ஆறுமுகம் *154-168*

*திரு. அ. சவுந்தரராசன் .. .. *169-178, 179-180, 181-185, 186-188*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் .. *175*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு .. *176, 210-211*

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி .. *179*

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் *181*

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி .. *186*

*டாக்டர் வைகைச்செல்வன் .. .. *188-210, 211*

*திரு. விஜயகாந்த் .. .. *211-219*

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் .. *216*

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா .. *169, 219-254*

2. **அறிவிப்புகள்—**

பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் .. தேர்வு— *255-259*

(அ) மதிப்பீட்டுக் குழு *255-256*

பக்கங்கள்

**2. அறிவிப்புகள்—**தொடர்ச்சி

பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு—**தொடர்ச்சி**

(ஆ) பொதுக் கணக்குக் குழு .. .. *256-257*

(இ) பொது நிறுவனங்கள் குழு .. .. *257-258*

(ஈ) அவை உரிமைக் குழு .. .. *258-259*

**3. அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் .. *259-260*

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. ..** *260-262*

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042 – வைகாசி 27

## 2011 ஜூன் 10, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு*
*ஐந்துடன் மாண்டது அமைச்சு"*

அஞ்சாமையும், குடிபிறப்பும், காக்கும் திறனும், கற்றறிந்த அறிவும், முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் திருந்தப் பெற்றவரைக் கொண்டதே சிறந்த அரசு ஆகும்.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

### 1. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப் பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*"1. தமிழகத்தில் வாழும் சுமார் 8 இலட்சம் பழங்குடி மக்களுக்கு தனித் துறை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

[திரு. ப. டில்லி பாபு] [2011 ஜூன் 10

*2. பழங்குடி மக்களுக்காக இந்திய அரசு அமலாக்கிய வன உரிமை பாதுகாப்புச் சட்டம், 2006—ஐ தமிழகத்தில் அமலாக்குவது குறித்தும்;*

*3. தமிழ்நாடு முழுவதும் மலைப் பகுதிகளில் குடியிருந்து வரும் சுமார் 4 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிடத் தடையாக உள்ள தடையாணை 1168—ஐ இரத்து செய்வது குறித்தும்;*

*4. தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் 40 ஆண்டுக் காலமாக உள்ள பேருந்து நிலையத்தை மாற்றுவதற்குண்டான நிதி ஆதாரம் ஒதுக்குவது குறித்தும்;*

*5. தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலைப் பகுதியில், மூலிகைப் பண்ணை வளர்ப்பது குறித்தும்;*

*6. தமிழ்நாடு முழுவதுமுள்ள, பழங்குடி மக்களாகிய காட்டுநாயக்கன், குருமன்ஸ், கொண்டாரெட்டி, மலைவேடன் மற்றும் மலைசார் மக்களுக்கு உடனடியாக இனச் சான்றிதழ் வழங்குவது குறித்தும்;*

*7. பொது விநியோகத் திட்டத்தில் தமிழகம் முழுவதும் உள்ள குடும்ப அட்டைகளுக்கு குடும்பத்திற்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் விநியோகம் செய்வது குறித்தும்;*

*8. அரூர் தொகுதிக்குட்பட்ட மொரப்பூர்—அம்பைநல்லூர் பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்கிட* Coir Industry--*தென்னை நாரில் கயிறு திரித்து மெத்தை தயாரிக்கும் அரசின் தொழிற்சாலை உருவாக்குவது குறித்தும்;*

*9. அரூர் தொகுதிக்குட்பட்ட—மஞ்சவாடி, பட்டுக்கோணம்பட்டி பகுதிகளில் அரசு மாம்பழத் தொழிற்சாலை உருவாக்குவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.



2011 ஜூன் 10]

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் முன்மொழிந்த அந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. ப. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிவான வணக்கம். நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*"1. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறைக்குத் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

*2. புதுக்கோட்டை மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றின் உபரிநீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் குறித்தும்;*

*3. தமிழ்நாட்டில் விவசாயத்திற்குப் புதியதாக மின் இணைப்பு இந்த நிதியாண்டில் வழங்குவது குறித்தும்;*

*4. 2001–2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிலத்தடி நீர் சேமிப்புத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி நிலத்தடி நீரை அதிகப்படுத்த வேண்டியது குறித்தும்;*

*5. தமிழ்நாட்டில் விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படுவதால், விவசாய உற்பத்தி பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டியது குறித்தும்;*

*6. தமிழ்நாடு மின்சார வாரியத்தை இலாபகரமாக நடத்த இந்த நிதியாண்டில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை குறித்தும்;*

*7. தமிழ்நாட்டில் பணிபுரியும் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறைகளைக் களைவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்;*

*8. தமிழகத்தில் இயங்கும் நவீன அரிசி ஆலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

[திரு. ப. முத்துக்குமரன்] [2011 ஜூன் 10

*9. தமிழகத்தில் 20 வருடங்களுக்கு மேலாக ஒரே இடத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்தும்;*

*10. இளைஞர்களுக்குப் புதியதாக வேலைவாய்ப்பு அளிக்க திட்டங்கள் உருவாக்குவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. முத்துக்குமரன் அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*"1. வேகமான உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் சூழ்நிலையில், தொழிலாளர் நலன் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் குறித்தும்;*

*2. இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா மற்றும் உபரியாகவுள்ள தரிசு நிலம், புறம்போக்கு நிலம் விநியோகம் செய்வது குறித்தும்;*

*3. நியாய விலைக் கடைகளின் செயல்பாடு மற்றும் பொருள் விநியோகம் குறித்தும்;*

*4. சுமார் 30,000—க்கும் மேற்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் ரூ. 3,000/— உதவித் தொகை வழங்குவது குறித்தும்;*

*5. வழக்கறிஞர்களின் குடும்ப நிதியை ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சமாக உயர்த்தியதில் உள்ள நிபந்தனைகளை முற்றிலுமாக நீக்குவது குறித்தும்;*

*6. விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் அதிகபட்ச கடுக்காய்களைப் பயன்படுத்தி கடுக்காய் எண்ணெய் ஆலை தொடங்குவது குறித்தும்;*



2011 ஜூன் 10] [திரு. ஆர். ராமமூர்த்தி]

*7. விழுப்புரம் மாவட்டம் தொழில் வளர்ச்சியில் ஒட்டுமொத்தமாகப் பின்தங்கியுள்ளதால், விழுப்புரத்தில் தொழில் வளர்ச்சிக்கு உடனடியாக 'சிப்காட்' தொழில் மையம் தொடங்குவது குறித்தும்;*

*8. தமிழகத்திலேயே கரும்பு உற்பத்தியில் முதல்நிலை மாவட்டமாக விழுப்புரம் இருப்பதால், அதன் உபரிப் பொருட்களைப் பயன்படுத்தி காகித ஆலை தொடங்குவது குறித்தும்;*

*9. விக்கிரவாண்டி தொகுதி முழுவதும் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது குறித்தும்;*

*10. விழுப்புரத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்கள் நியமித்து மருந்து மற்றும் படுக்கை வசதிகள் ஏற்படுத்தித் தருவது குறித்தும்;*

*11. ஒன்பதுக்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகள் விழுப்புரம் மாவட்டத்தில் பல பகுதிகளில் உள்ளன. அவற்றிலிருந்து கழிவுநீர் வெளியேறுவதால் பெரிய அளவு சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*"1. காவல் துறை நடவடிக்கைகள் சட்டபூர்வமானதாக இருக்குமாறு பயிற்றுவிக்க வேண்டியது குறித்தும்;*

*2. தமிழ் மொழியை அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்துவதை உறுதி செய்வது குறித்தும், உதாரணத்திற்கு,*

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தமிழில் விண்ணப்பம் தருவது குறித்தும், தொழிற்சாலைகளில் தமிழில் விசாரணை நடத்துவது குறித்தும், அரசாணைகளை தமிழில் கட்டாயம் வெளியிடுவது குறித்தும், நூல் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும்;

3. புதிய தலைமைச் செயலகத்தின் கட்டுமானப் பணிகள் மீதான விசாரணைக்கும், நடவடிக்கைக்கும் பாதகமில்லாமல் புதிய தலைமைச் செயலகத்தை பயனுள்ள வகையில் அரசு பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

4. அனைத்து முதலீட்டாளர்களையும் ஈர்க்கும் மாநிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கை குறித்தும், உள்ளூர் முதலாளிகளுக்கு இல்லாத தனிச் சலுகை எதையும் வெளியூர் முதலாளிகளுக்கு வழங்கக்கூடாதது குறித்தும்;

5. புதிய தொழிற்சாலைகளில் நமது தொழிலாளர்களுக்குப் பொருந்துகிற அனைத்து தொழிலுறவுச் சட்டங்களும் கட்டாயமாக அமல்படுத்துவது குறித்தும், விரும்பும் தொழிற்சங்கத்தை அமைக்கவும், அதில் சேரவும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடை கூடாது என்பது குறித்தும், தொழிற்சங்க அங்கீகாரத்திற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவது குறித்தும், ஒப்பந்தக் கூலி முறையை நிரந்தரத் தன்மையுள்ள தொழில்களில் ஒழிக்க வேண்டியது குறித்தும்;

6. முறைசாராத் தொழிலாளர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் சான்றளிப்பு இல்லாமல் பதிவு வழங்குவது குறித்தும், முறைசாராத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியத்தை ரூ. 1,000/– உயர்த்துவது குறித்தும்;

7. 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற நிலையை ஏற்படுத்துவது குறித்தும்;

8. விலைக் கட்டுப்பாட்டு நிதியை ரூ. 200/– கோடியாக ஒதுக்குவது குறித்தும்;

9. மீனவர் உயிர்ப் பாதுகாப்பிற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;

10. நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கிடைப்பதற்கேற்ற வகையில் நில மறுவிநியோகத் திட்டம் குறித்தும், நிலச் சீர்திருத்தச்



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

சட்டத்தை அமல்படுத்துவது குறித்தும், அரசின் புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்களை மேம்படுத்தி நிலமற்றவர்களுக்கு விநியோகிப்பது குறித்தும்;

11. நகரங்களில் உள்ள பழைய நதிகள், கால்வாய்களை நல்ல முறையில் ஆழப்படுத்தி, பக்கச் சுவர்கள் எழுப்பி, குப்பைகளையும், ஆகாயத் தாமரை போன்ற தாவரங்களையும் அகற்றி நீர் ஓடத்தக்க நிலை ஏற்படுத்துவது குறித்தும், சென்னையில் கூவம், வியாசர்பாடி கால்வாய், கேப்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்ற முக்கியக் கால்வாய்களை சுத்தப்படுத்துதல் மற்றும் தொடர் பராமரிப்பு குறித்தும்;

12. நகரின் குப்பைகள் கொட்டப்படும் இடம் பெரும் சுகாதாரச் சீரழிவுக்குக் காரணியாக உள்ளதால், கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் இடம் இலட்சக்கணக்கான மக்களுக்கு நோய் பரப்பும் இடமாகிவிட்டதை அகற்றுவது குறித்தும், அதுவரை திடக்கழிவு மேலாண்மையில் உரிய மேம்பாடு செய்வது குறித்தும், குடியிருப்புகளுக்குள் கழிவுப் புகை வருவதைத் தடுப்பது குறித்தும்;

13. மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டத்தில் தனி உரிமை நிறுவனங்களிடமிருந்து மென்பொருள் வாங்காமல், இலவசமாகக் கிடைக்கும் சமூகத் தயாரிப்புகளின் மென்பொருட்கள் வாங்கி வழங்குவது குறித்தும்;

14. கேபிள் டி.வி.யை அரசுடைமையாக்கும்போது கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களின் வேலையையும் வருவாயையும் காப்பாற்றுவது குறித்தும்;

15. அரசின் வருவாயைப் பெருக்குவதற்கு மணல் கொள்ளை போன்றவற்றை உறுதியுடன் தடுத்து உபரி வருமானத்தை அரசே பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்வது குறித்தும்;

16. சென்னை நகரில் ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்களுக்கு அவர்களின் தற்போதைய வேலைவாய்ப்பு பறிபோகாத வண்ணம் அருகில் நவீன வீடுகள் வழங்குவது குறித்தும்;

17. 10 ஆண்டுகளுக்கும் மேலாக புறம்போக்கு நிலங்களில் குடிசை வீடு கட்டி குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க விரைவான நடவடிக்கை எடுப்பது குறித்தும், கோயில் நிலங்களில்

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

வாழ்வோருக்கு மானியத் தொகை பெற்றுக்கொண்டு கிரயம் செய்துதர நடவடிக்கை எடுப்பது குறித்தும், மற்ற பணிகள் முடிந்து கிரயப்பத்திரம் வாங்காதவர்களுக்கு அவற்றை வழங்குவது குறித்தும்;

*18.* அறுவை சிகிச்சை அல்லாது இதர நோய்களுக்கும் சிகிச்சை கிடைக்கும் வண்ணம் அரசு நிறுவனங்கள்மூலம் புதிய காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

*19.* கட்டாய இலவசக் கல்விச் சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவது குறித்தும், தனியார் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டை கட்டாயமாக அமல்படுத்துவது குறித்தும், தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுப்பது குறித்தும்;

*20.* தீண்டாமையை எந்த வடிவத்திலும் அனுமதிக்காமல், ஆதி திராவிட மக்களின் சுடுகாடு, சுடுகாட்டுப் பாதை, குடிநீர், கோயில்களில் வழிபாட்டுரிமை, இரட்டை டம்ளர் முறை ஒழிப்பு, தடைச் சுவர்களை அகற்றுதல் போன்ற ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்து தீண்டாமை ஒழிப்பை உறுதியுடன் செயல்படுத்துவது குறித்தும்;

*21.* எரிபொருள் சேமிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அந்நியச் செலாவணி மிச்சம் போன்ற முக்கியமான நன்மைகளைத் தரும் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவது குறித்தும், இப்போதுள்ள போக்குவரத்துக் கழகங்கள் செம்மைப்படுத்தப்பட்டு, திறம்பட அரசு நிறுவனங்களாகவே இயக்கப்படும் என்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.சௌந்தரபாண்டியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2011 ஜூன் 10]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"*1.* நில உச்சவரம்புச் சட்டம் முறையாகவும், துரிதமாகவும் அமல்படுத்தப்பட வேண்டியது குறித்தும்;

*2.* நில உச்சவரம்புச் சட்டத்திற்கு கடந்த தி.மு.க. ஆட்சியால் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டியது குறித்தும்;

*3.* திண்டுக்கல் மாவட்டம், பெரியம்மாபட்டியில் நில ஒப்படை வழங்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கு நிலம் ஒப்படைக்க வேண்டியது குறித்தும்;

*4.* நீலகிரி மாவட்டத்தில் யானை வழித்தடம் அமைத்திட ஏழை சிறு, குறு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்புகளையும் அப்புறப்படுத்தப்படும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் அதற்கான அரசாணையை இரத்து செய்ய வேண்டியது குறித்தும்;

*5.* தமிழ்நாட்டில் மனைப் பட்டா இல்லாத அனைவருக்கும் மனைப் பட்டாக்கள் வழங்கிட வேண்டியது குறித்தும்;

*6.* வீட்டு மனை இல்லாமல், ஒரே வீட்டில் பல குடும்பங்கள் அடைந்து வாழும் நிலையினைப் போக்கிட, அனைவருக்கும் வீட்டு மனைகளையும் அதற்கான பட்டாக்களையும் வழங்கிட வேண்டியது குறித்தும்;

*7.* கோயில் நிலங்களில் குடியிருக்கும், சாகுபடி செய்துவரும் சாகுபடியாளர்களுக்கு அந்த நிலங்களைப் படிப்படியாக சொந்தமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது குறித்தும், ஏழைகளுக்கு இலவசமாகவும் நடுத்தர குடும்பத்தினருக்கு நியாய விலை தீர்மானித்து கிரயம் செய்து அளித்திட வேண்டியது குறித்தும்;

*8.* சிதம்பரம் தொகுதியில் மகளிர் கல்லூரி இல்லாததால், ஏற்கெனவே கலைக் கல்லூரி இருந்த இடத்தில் மகளிர் கல்லூரி அமைத்திட வேண்டியது குறித்தும்;

*9.* தமிழ்நாட்டில் சிறந்த சுற்றுலா மையமாக உள்ள பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியினை வளர்த்திட கூடுதல் நிதி ஒதுக்கி தேசிய சுற்றுலா மையமாக மாற்றிட வேண்டியது குறித்தும்;

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 ஜூன் 10

*10.* சிதம்பரம் தொகுதியில் உள்ள பரங்கிபேட்டை ஒன்றியம் முழுவதையும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கி குடிநீர் வசதியைப் பெருக்கிட வேண்டியது குறித்தும்;

*11.* சிதம்பரம் நகராட்சியில் நவீன பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்திட நிதியும், திட்ட ஒப்புதலும் வழங்கிட வேண்டியது குறித்தும்;

*12.* தமிழகம் முழுவதும் பத்திரிகையாளர்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கித் தர வேண்டியது குறித்தும்;

*13.* சிதம்பரம் தொகுதியில் வெள்ள பாதிப்பைத் தடுக்க சிறப்புத் திட்டம் நிறைவேற்றி நிரந்தரமாக வெள்ள பாதிப்பிலிருந்து மக்களையும், விவசாயத்தையும் பாதுகாத்திட வேண்டியது குறித்தும்;

*14.* தமிழ்நாட்டில் வன உரிமைச் சட்டத்தை அமலாக்கி ஆதிவாசி மக்களுக்கு நிலப் பட்டா வழங்கிட வேண்டியது குறித்தும்;

*15.* தீண்டாமைக் கொடுமையிலிருந்து ஆதி திராவிட மக்களைப் பாதுகாக்கவும் அனைத்து கோயில்களிலும் ஆதி திராவிட மக்கள் சென்று வழிபாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது குறித்தும்;

*16.* நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்திலிருந்து *250* மெகாவாட் மின்சாரத்தை கடலூர் மாவட்டத்துக்கு, குறிப்பாக, சிதம்பரம் தொகுதிக்கு வழங்கி மின் வெட்டு இல்லாத மாவட்டமாக மாற்றி மக்களைப் பாதுகாத்திட வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். பி. ராஜா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.



2011 ஜூன் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். திராவிடமணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"*1.* விருத்தாச்சலம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விருத்தாச்சலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தொடங்குவது குறித்தும்;

*2.* விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதியில் புதிய வருவாய் வட்டங்கள் தொடங்குவது குறித்தும்;

*3.* விவசாயிகளுக்கான கரும்பு விலையில் மாற்றம் செய்து புதிய விலை அறிவிப்பது குறித்தும், விவசாயத்திற்கான பணிகளுக்குத் தேவையான வேலையாட்கள் பற்றாக்குறை உள்ளதைக் கருத்தில்கொண்டு நவீன இயந்திரங்கள் அதிக அளவில் வழங்குவது குறித்தும்;

*4.* கிராமப்புறங்களில் வாழ்கிற வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு கன்று வளர்க்கும் திட்டத்தின்கீழ் இலவசக் கன்று வழங்கும் திட்டம் குறித்தும்;

*5.* நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்மூலம் வெளியேற்றப்படும் உபரி நீரை விவசாயப் பாசனத்திற்குப் பயன்பெறும் வகையில் தண்ணீரை மேற்கே திருப்பி மணிமுத்தாற்றில் திருப்பி விடுதல் குறித்தும்;

*6.* விருத்தாச்சலம் நகரில் முறையாக செயல்படாமல் உள்ள பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரியினைச் செயல்பட வைப்பது குறித்தும்;

*7.* விருத்தாச்சலம் "காசியைவிட வீசம் பெரியது" என போற்றப்படும் கோயில் நகரமாகும். அத்தகைய நகரைக் கோயில் நகரமாக அறிவித்து, சுற்றுலாத் தலமாக ஆக்குவது குறித்தும்;

*8.* விருத்தாச்சலம் அரசு மருத்துவமனையை, மாவட்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும், அத்துடன் கண் மருத்துவமனைக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்த தொகையை விருத்தாச்சலம் அரசு மருத்துவமனைக்குத் தருவது குறித்தும்;

[திரு. வி. முத்துக்குமார்] [2011 ஜூன் 10

*9. நிலத்தடி நீரைச் சேமிக்கும் வகையில், தமிழகத்தில் ஓடுகிற நதிகளில் (செக் டேம்) தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;*

*10. விருத்தாச்சலம் நகரில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் இரண்டு பக்கங்களிலும் நடைமேடையுடன்கூடிய பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;*

*11. விருத்தாச்சலம் தொகுதிக்குட்பட்ட நல்லூர் முதல் இலங்கியனூர் மற்றும் பா. கொத்தனூர் முதல் ஆதியூர் இடையே பாலம் கட்டுவது குறித்தும்;*

*12. விருத்தாச்சலம் தொகுதிக்குட்பட்ட ஏ. மரூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்குவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.

**திரு. ப. சிவக்கொழுந்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

முற்பகல் *10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதமும் பதிலுரையும். முதலில் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். உங்களுக்கு உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் *25* நிமிடங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்னியூஸ்டு கட்சியின் சார்பாக வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதி மக்களுடைய பேராதரவோடும், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணிக் கட்சியினுடைய பேராதரவோடும், மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேராதரவோடும், தொகுதியிலே வெற்றி பெற்று இந்தச் சட்டப் பேரவையிலே உரையாற்றுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்த வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதி மக்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கூட்டணிக் கட்சிகளினுடைய



2011 ஜூன் 10] [திரு. எம். ஆறுமுகம்]

தலைவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு விஷயங்களைப் பற்றியும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்துகளைப் பற்றியும் இந்த அவையிலே தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சபையில் பல்வேறு தீர்மானங்கள், அரசியல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த சட்டப் பேரவையில் ஒரு திருப்புமுனையாக, ஒரு மைல் கல்லாக, தமிழ் ஈழ மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில், ஐக்கிய நாட்டு சபையிலே தீர்மானித்த குழு, அது கொடுத்திருக்கக்கூடிய அந்த அறிவுரையின் அடிப்படையில், ராஜபக்சே அரசினுடைய படுகொலையைக் கண்டிக்கின்ற முறையிலும், அவரை வழக்கு மன்றத்திலே நிறுத்தி இனப் படுகொலைக்கு, தண்டனை வழங்க வேண்டுமென்ற முறையிலும், மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்ற முறையிலும் கச்சத் தீவை திரும்பப் பெறவேண்டும் என்னும் முறையிலும் இங்கே தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதற்கான முறையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கில் வருவாய்த் துறையையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று சட்டமன்றத்திலே முன்மொழிந்து நிறைவேற்றப்பெற்ற தீர்மானம் என்பதும், இதற்கு முன்னாலேயே பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் தீர்மானங்கள் இங்கே முன்மொழிந்து நிறைவேற்றப்பெற்றிருந்தாலும்கூட, இந்தத் தீர்மானம் என்பது தமிழகத்தினுடைய வரலாற்றில் ஒரு திருப்புமுனை மட்டுமல்ல, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அநேகமாக ஓர் ஐந்தாண்டு காலம் தமிழகத்தினுடைய சட்டமன்றத்திலே நடைபெற்ற விவாதங்கள் என்பது இதற்கு முன்னாலே இருந்த நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், இலங்கையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இனப் படுகொலையைப் பற்றி பேசுகின்றபோதெல்லாம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற முறையில், கடிதம் எழுதி அனுப்பியிருக்கின்றேன்; தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு பேசினேன்;

பாரதப் பிரதமரிடத்திலே பேசினேன்; சோனியா காந்தி அம்மையாரிடத்திலே பேசினேன் என்றுதான் இந்தச் சபையிலே சொல்லப்பட்டதே தவிர, ஆனால், அவற்றிற்கெல்லாம் மாறாக ஓர் உயர்ந்த Body என்று சொல்லக்கூடிய இந்தச் சபையிலே தனித் தீர்மானத்தை நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழ் மக்களையும், தமிழ் இனப் படுகொலையையும் நாட்டு மக்களுக்கு அறிவித்திருக்கக்கூடிய முறையிலே, அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றியதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நெஞ்சாரப் பாராட்டுவதோடு, வாழ்த்துவதோடு, எதிர்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க தமிழ் இனத் தலைவர் நான்தான் என்று சொல்லிக்கொண்டிருந்தநிலைமை மாறி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் இனத்திற்கு அவர் மட்டும் சொந்தமல்ல, இந்த மக்களே சொந்தம் என்ற முறையிலே நடைபெற்றிருக்கக்கூடிய விவாதம் சிறப்பான விவாதம் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்கள், சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது, பறிக்கப்பட்ட சொத்துக்களைத் திரும்பப் பெறுவது, அதற்கான முறையிலே சட்டத்தை இயற்றுவது, தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கான முறையில், இந்தியோடு தமிழ் மொழியையும் இணைத்து, ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கு இந்திய அரசாங்கத்தை வலியுறுத்துவது என்று சொல்லப்பட்டிருப்பதில் நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், எப்படி இரண்டு தீர்மானங்களை இங்கே நிறைவேற்றினீர்களோ, அதைப்போல தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கான முறையில், இந்தியோடு சேர்ந்து தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாகக் கொண்டுவரவேண்டும் என்பதற்கான தீர்மானத்தையும் இந்தச் சபையிலே நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இதழில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்களில், சட்டம், ஒழுங்கு பராமரிப்பில் கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் நடைப்பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகளைப்பற்றி நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி வெகுவாகப்



பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது முற்றிலும் உண்மை. அதற்குக் காரணம், கொலை, கொள்ளை, சங்கிலி பறிப்பு, கற்பழிப்பு போன்றவை தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் தாராளமயம் ஆக்கப்பட்டுவிட்டன. அதுதான் தமிழகத்திலே நடைபெற்று இருக்கக்கூடிய நிகழ்ச்சிகள்.

*முற்பகல் 10—10*

அதற்கு உதாரணத்தைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மணல் திருட்டு, கள்ளச் சாராயம் போன்றவற்றைத் தட்டிக் கேட்டதால் படுகொலைகள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்றன. உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடிய தொழிலாளர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. வழக்கு மன்றத்திற்கு நடந்துகொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், நெல்லை மாவட்டத்தில், திரு. சுடலைமுத்து 8—8—2007 அன்று மணல் கொள்ளையைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்ததற்காக படுகொலை செய்யப்பட்டார்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அனைத்திந்திய இளைஞர் மன்றத்தினுடைய தலைவர் சேலம், எருமாபாளையம் திரு. சிவக்குமார் என்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் 28—5—2008—இல் கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக வெட்டிச் சாய்க்கப்பட்டார். திருவாரூர் மாவட்டம், மாங்குடியில், திரு. ஜெயக்குமார் 4—3—2008—இல் கள்ளச்சாரயத்தை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது படுகொலை செய்யப்பட்டார். அதேபோன்று, திருவாரூர் மாவட்டத்தில், திரு. இராஜேந்திரன் நிலப் பிரச்சினையால் 16—10—2008—இல் படுகொலை செய்யப்பட்டார்.

தொழில் நகரம் என்று சொல்லக்கூடிய கோவை மாவட்டத்தில், தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று எல்லோராலும் அழைக்கப்படக்கூடிய கோவை மாவட்டத்தில் ரித்திஷ், நித்திஷ் என்று சொல்லக்கூடிய இரு இளம் குழந்தைகள் கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு 29—10—2010—இல் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற அதிர்ச்சியான செய்தி தமிழகத்தையே உலுக்கியது மட்டுமல்ல, இதுதான் தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுக் காலம் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்ச்சி.

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஜூன் 10

எனவே, இப்போது இந்த அவையிலே, இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருப்பது மிகவும் முக்கியமானது, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும். தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது முற்றிலும் உண்மை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி நிகழ்வுகள் எதிர்காலத்திலே நடைபெறாமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இன்றைக்குக்கூட ஒருசில இடங்களில் சங்கிலி பறிப்பு போன்றவை எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான முறையிலேகூட, நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் “தமிழகத்தினுடைய காவல் துறையின் ஈரல் அழுகிவிட்டது” என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும் அழுகிவிட்டதாக இருக்கலாம் என்று அல்ல, ஈரலே இருக்கின்றதா என்ற சந்தேகம் இருந்துகொண்டிருக்கிறது. அந்த அளவிற்குக் கொடுமைகள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்றன. ஒட்டுமொத்தக் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம் என்று உருவாக்கும் திட்டம் பாராட்டுதலுக்குரியது, வாழ்த்துக்குரியது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேபோல, தமிழ் மொழியை இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவும், நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தவும் மத்திய அரசை வலியுறுத்துவது என்பதையும் தமிழ் மொழிப் பற்றை எடுத்துக்காட்டுவதாக நான் கருதுகிறேன். எனவே, சட்டமன்றத்தில் அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறப்பான நிருவாகத்தை வழங்கி அனைத்து முதலீட்டாளர்களும் திரும்ப வந்து முதலீடு செய்யும் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவது இந்த அரசினுடைய கொள்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே முதலீடு செய்து தொழிற்சாலைகளைக் கொண்டுவருவது என்பதும், அதிகமான முதலீடு செய்வது என்பதும் வரவேற்கக்கூடியது என்றாலும்கூட, இன்றைய தினம் பன்னாட்டு மூலதனக் கம்பெனிகள் எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில்களைத் தொடங்கி, தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத சூழல், அத்துக் கூலிகள், Campus கூலிகள், இதுபோன்ற



2011 ஜூன் 10] [திரு. எம். ஆறுமுகம்]

நடவடிக்கைகள் இல்லாமல், தொழிலாளி வர்க்கத்திற்கு பொருந்தக்கூடிய முறையில் அனைத்துச் சட்டங்களையும் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் நடைமுறையில் உள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்று இந்த அரசு முடிவு எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது செயல்பட்டுவரும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் அங்க அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட அடையாள அட்டை திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊழலுக்கு இடம் தராமல் திட்டத்தின் பயன் மக்களுக்கு முழுமையாகச் சென்றடைய வழி செய்யப்படும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பது அருமையான நடவடிக்கை. ஊழலற்ற, முறைகேடில்லாத அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் திட்டம் வரவேற்கக்கூடியது, பாராட்டுதலுக்குரியதாகும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்டிருப்பது பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்த, பதுக்கல், கள்ளச்சந்தை, விற்பனையில் ஈடுபடுபவர்கள்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்ற அடிப்படையில், ரூபாய் 50 கோடி ஒதுக்கீட்டில் விலை கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

*முற்பகல் 10–15*

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ரூ.50 கோடி என்று இருப்பது தற்காலிகமானது, எதிர்காலத்தில் அதனுடைய சூழலையொட்டி அதிகப்படுத்தலாம் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். தமிழகத்திலே கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது இதுதான். கள்ளச் சந்தைக்காரர்கள், பதுக்கல் பேர்வழிகள், விலையை உயர்த்தி விற்பவர்கள் இவர்களுக்கெல்லாம் இந்தத் தமிழகத்திலே தாராளமாக தன்னுடைய தொழிலைச் செய்துகொள்ளலாம் என்று லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்வதற்கான வழிகளை கவர்னர் உரையில் சொல்லியிருப்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்கக்கூடியது.

தமிழ்நாடு *2025* தொலைநோக்கு பார்வைத் திட்டம் உருவாக்கி, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டு செல்ல பாடுபடும் என்ற தொலைநோக்கு பார்வை வரவேற்கக்கூடியது. தமிழ்நாட்டில் விவசாயம் ஒரு மிகப்பெரிய தொழில். விவசாயம், கால்நடைத் துறை, மீன்வளம் போன்றவற்றிற்கு சிறப்புக் கவனம் செலுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்க, சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்க ரூ. *75* இலட்சத்தில் பண்ணை சார் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பதும், நெல், பயறு, கரும்பு, பருத்தி போன்றவற்றிற்கு புத்துயிர் அளிக்கப்படும் என்று சொல்லியிருப்பதும் பாராட்டுதலுக்குரியன.

இந்த நேரத்தில் நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்வது, தமிழகத்திலே பஞ்சாலைகள் அதிகம். மரியாதைக்குரிய நம்முடைய முதல்வர் அவர்கள் முன்பும் முதலமைச்சராக இருந்தபோது *1993* பஞ்சாலைகள் தனி தொழில் தீர்ப்பாயத்தின்மூலமாக வழக்கு மன்றத்திற்கு விடப்பட்டன. கிட்டத்தட்ட 2½ கோடி கதிர்கள் இயக்கக்கூடிய பஞ்சாலைகள் தமிழகத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழகத்திற்குத் தேவையான பஞ்சு *45* இலட்சம் பேல்கள். பஞ்சாலை என்பது பருத்தியை ஆதாரமாகக் கொண்டு இயங்கக்கூடிய தொழில், வேலைவாய்ப்பை அதிகரிக்கக்கூடிய தொழில். சிறிய பஞ்சாலைகள், நடுத்தர பஞ்சாலைகள், பெரிய பஞ்சாலைகள் என்று சொல்லக்கூடிய இந்த *1,993* பஞ்சாலைகளில் கிட்டத்தட்ட *5* இலட்சம் பேர் நேரடியான வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆனால், இந்தப் பஞ்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் பருத்தி, தமிழகத்தில் *5* இலட்சம் பேல்கள்தான் உற்பத்தி ஆகின்றன. *45* இலட்சம் பேல்கள் தமிழகத்திற்குத் தேவை. இவற்றை வடநாட்டிலிருந்து வாங்கவேண்டும் அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும். எனவே, நமக்குச் செலவு கூடுதலாகிறது. எனவே, தமிழகத்திலே கூடுதலான பருத்தி உற்பத்தியைச் செய்வதற்கான முறையிலே தமிழக அரசு திட்டமிடவேண்டும். அதற்கான முறையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





மாநில நதிகளை இணைக்கும் திட்டம் வரவேற்புக்குரியது. ஒருமுறை தேசிய நதிகளை இணைக்கவேண்டும் என்று சொல்லுகின்றபோது, மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளர் திரு. ராகுல் காந்தி அவர்கள்கூட அது சாத்தியம் இல்லையென்று சொன்னார்கள். நீண்டநெடுங்காலமாக அனைத்து அரசியல் கட்சிகளும், இந்திய நாடு முழுவதிலும் நதிகளை ஒருங்கிணைக்கவேண்டும், கடலிலே அந்த நீர் சேர்வதால் யாருக்கும் பயனில்லை என்று சொல்லிவந்த நிலையை மாற்றி, இங்கே பாசன ஆதாரத்தைப் பெருக்கவும், குடிநீர்த் தட்டுப்பாட்டைக் குறைக்கவும், வெள்ள பாதிப்பைக் கட்டுப்படுத்தவும் மாநில நதிகளை இணைக்கும் திட்டம் என்பது வரவேற்புக்குரியது. அதைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

வறுமையை அகற்றுவதே, ஒழிப்பதே அரசினுடைய கொள்கை. இது போற்றுதலுக்குரிய திட்டமாகும். வறுமை இப்பொழுதும் இருந்துகொண்டு இருக்கின்றது. வறுமையை முழுமையாக அகற்றுவதே அரசின் கொள்கையென்று இதிலே சொல்லப்பட்டு இருப்பது என்பது போற்றுதலுக்குரியது, வரவேற்கக்கூடியது. வறுமை கட்டாயமாக ஒழிக்கப்படவேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய கணக்கின்படி, மாநில அரசாங்கத்தினுடைய கணக்கின்படி கிட்டத்தட்ட *47* சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிவாசிகள் ஆகியோருக்கு இன்றைக்கும் தமிழக அரசு அறிவிக்கக்கூடிய அந்தச் சலுகைகள் போய்ச் சேரவில்லை என்பதுதான் உண்மை. எனவே, அந்தத் திட்டம் வரவேற்புக்குரியது. இந்த முறையிலே உழைப்புக்கான உத்தரவாதம் உருவாவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மின் பற்றாக்குறை பிரச்சினை மிக முக்கியமான ஒன்று. தமிழகத்திலே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் மின்சாரத்தில் பற்றாக்குறையில்லாத ஒரு மாநிலமாக கொண்டு வரவேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய முயற்சி வரவேற்புக்குரியது. தமிழகத்திலே கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் *6* மணி நேரம் அல்ல, *8* மணி நேரம் மின்சார வெட்டு இருந்தது. எப்பொழுது மின்சாரம் வரும், எப்பொழுது போகும் என்று யாருக்கும் தெரியாது. அதை முறைப்படுத்தவேண்டும். மின்சாரப் பற்றாக்குறை இல்லாத

மாநிலமாக உயர்த்தப்பட வேண்டும், கொண்டுவரவேண்டும் என்று சொல்லியிருக்கக்கூடிய திட்டம் வரவேற்புக்குரியது. Wind mill—காற்றாலைகள்மூலமாகக் கிடைக்கக்கூடிய மின்சாரத்தையும் பயன்படுத்தியாக வேண்டும். இந்த மின்சார வெட்டினால் கடந்த ஆட்சிக் காலத்தில் வேலையிழப்பு, சம்பள இழப்பு, ஆட்குறைப்பு நடவடிக்கைகள், உற்பத்தி இழப்பு, மத்திய, மாநில அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானங்கள் இவற்றை எல்லாம் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனால் இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்பது மின்சாரம் ஒரு மாநிலத்திற்கு அத்தியாவசியமானது, தேவையான ஒன்று. இவற்றைத் தன்னிறைவு செய்வதற்கான முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தமிழகம் முழுவதும் மின்சாரம் ஒரே மாதிரியான முறையிலே, சமமான முறையிலே வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலை. சென்னைக்கு மட்டும் தடையில்லாத மின்சாரம் மற்ற பகுதிகளுக்குத் தடையோடு மின்சாரம் என்பதை மாற்றி, தடையில்லாத மின்சாரம் தமிழகம் முழுவதும் ஒரே சீராக வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—20*

அரசு கேபிள் டி. வி. நிறுவனம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஒரு குடும்பத்திற்கே பல கோடி ரூபாய் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமையை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டு, மீண்டும் அதற்குப் புத்துயிர் ஊட்டி, தனியார் கேபிள்களை, அவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் அரசுடைமையாக்குவது என்று சொல்லியிருப்பது தமிழக அரசுக்கு மீண்டும் 1,000/— கோடி ரூபாய்க்கு மேலே வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டமாக அறிவித்திருப்பது என்பது வரவேற்பிற்குரியது. இதனால் தனியாருடைய கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி, மாநகராட்சி போன்றவை மூலமாக அடிப்படை வசதிகள், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.





அரசு புறம்போக்கு இடங்களில் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட திட்டம் ஏழைகள் மத்தியிலே பெரும் வரவேற்பை உருவாக்கி இருக்கிறது. மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 220 சதுர அடி கட்டுவதாகச் சொன்னார்கள். காலை கூட நீட்ட முடியாது. ஏற்கெனவே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். ஆனால், 300 சதுர அடியில் மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம் என்பது அவர்கள் பசுமையோடு போய் குடியிருப்பதற்கானத் திட்டம் என நான் இதைக் கருதுகிறேன். அது மட்டும் அல்ல. முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 75 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். அந்த 75 ஆயிரம் ரூபாய் என்று சொன்ன நேரத்திலே செங்கல் விலை அதிகமாகிவிட்டது, இரும்பு விலை அதிகமாகிவிட்டது, சிமென்ட் விலை அதிகமாகிவிட்டது. எதையுமே வாங்கிக் கட்ட முடியாது என்று சொல்கிற அளவுக்கு அப்படியே அந்தக் கல் போட்டது எல்லாம் அப்படியே நிற்கிறது. அதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். ஆனால், இப்போது 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அதற்கு ஒதுக்கி இருப்பது என்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்கக்கூடியது. அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நாங்கள் தொகுதிக்குப் போனால், எங்களுக்கு இருக்கக்கூடிய பெரிய சிக்கல் என்னவென்று கேட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு கேட்க வேண்டும். இந்த விஷயத்தில் எங்கே பார்த்தாலும் புறம்போக்கிலே குடியிருப்பவர்கள் அதிகம். அந்தப் புறம்போக்கில் ஓராண்டு, 3 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுக் காலம் குடியிருந்து கொண்டிருப்பவர்களுக்கு, வீட்டுமனை இல்லாமல் இருப்பவர்களுக்கு, குறைந்தபட்சம் 3 சென்ட் என்ற அடிப்படையிலாவது வீட்டு மனைகளை ஒதுக்குவதற்கு, பட்டா போட்டுக் கொடுப்பதற்கான முறையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஜூன் 10

அடுத்து, மருத்துவம். மருத்துவத்திலே கவனம் செலுத்தி இருக்கிறார்கள். தனியார் அடித்துக் கொண்டிருந்த கொள்ளைக்குகூட முற்றுப்புள்ளி வைத்து அதை மாற்றியமைப்பதற்கான முறையிலே நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்பிற்குரியது.

அடுத்து, ஆதி திராவிடர் நலன். தமிழ்நாட்டிலே ஒடுக்கப்பட்டிருக்கக்கூடிய, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மக்கள் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு இப்போது இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய சமூக நலத் திட்டங்கள் எல்லாம் போய்ச் சேருமேயானால், அவர்கள் வாழ்க்கையில் ஒரு படி மேலே வருவார்கள். ஆதி திராவிட குழந்தைகள் இருக்கக்கூடிய விடுதிகளில் எல்லாம் போதிய வசதிகள் இல்லை. அவையெல்லாம் சிறப்பான முறையிலே செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையில் சொல்லப்படாத சில விஷயங்களை அரசு கனிவுடன் பார்க்க வேண்டும்; சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* சீக்கிரம் நான் முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய வால்பாறை தொகுதி. தொழில், தொழிலாளர் நலன் பற்றி இதில் சொல்லப்படவில்லை. அநேகமாக தொழிலாளர் நலன் என்று சொல்கிறபோது, தமிழகத்தில் இன்றைக்கு campus கூலி, மாங்கல்ய திட்டம், சிறைச்சாலையில் கைதிகளைப்போல வேலை வாங்குவது, ஆலை வளாகத்திற்குள்ளே அடைத்து வைத்து வேலை வாங்குவது, குறைந்த கூலி கொடுப்பது, இதுபோன்று இருக்கக்கூடிய நடவடிக்கைகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தாராளமயமாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் கவனிக்க வேண்டும். தொழிலாளர் நலத் துறை உறுதியான நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட செயல்பாடுகளை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய ஆனைமலை—நல்லாறு திட்டம் என்ற குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். வால்பாறையில் அரசு தேயிலைத் தோட்டக் கழகம்



2011 ஜூன் 10] [திரு. எம். ஆறுமுகம்]

இருக்கிறது. இதுவரை கிட்டத்தட்ட 150 ஆண்டுக் காலமாக வால்பாறையில் வனவிலங்கு சரணாலயம் என்று அறிவிக்கப்படவில்லை, புலிகள் சரணாலயம் என்று அறிவிக்கப்படவில்லை. எங்கெங்கோ காடுகளில் இருக்கக்கூடிய சிறுத்தைப் புலிகளையும் கரடியையும் கொண்டு வந்து அங்கே விட்டுவிட்டு, இப்போது 2007 ஆம் ஆண்டில் புலிகள் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டதால், மிருகங்களுக்கு இருக்கக்கூடிய மரியாதைகூட இன்றைக்கு வால்பாறையில் மனிதர்களுக்கு இல்லை. மிருகங்களைப் பார்த்து அங்கு இருக்கக்கூடிய மக்கள் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சிறுத்தைப் புலி ஆஸ்பத்திரிக்கே வந்துவிட்டது. வீட்டுக்கே வந்துவிட்டது. வால்பாறை டவுனுக்கே வந்துவிட்டது. எந்த நேரத்தில் என்ன வருகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. எல்லோரும் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10—25*

ஆகவே, இந்த நேரத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், 2007 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் புலிகள் சரணாலயம் என்று அறிவித்திருப்பதை எடுத்துவிட வேண்டும். அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய தொழில், தேயிலைத் தோட்டத் தொழில். மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் வருவாயை ஈட்டிக் கொடுக்கக்கூடிய தொழில். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை தேடி வந்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதி. ஆகவே, புலிகள் சரணாலயம் என்பதை எடுத்துவிட வேண்டும். அங்கே அரசு தேயிலைத் தோட்டக் கழகம் இருக்கிறது. அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திலே 133 ரூபாய் சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் தோட்டத்தில் மட்டும் 104 ரூபாய் தான் சம்பளம், 133 ரூபாய் அல்ல. Fringe benefit எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, நான் காலையில்கூட தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடத்தில் பேசினேன். அமைச்சர் Joint Commissioner of Labour அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு உடனடியாக பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து அதைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதலில் அதைக் கொடுத்துவிட்டால், அன்னியச் செலாவணி

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஜூன் 10

ஈட்டிக் கொடுக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 300 ரூபாய் சம்பளத்தைக் கொடுத்தாலும்கூட தவறு இல்லை, கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல; யானைகள், சிறுத்தைப் புலிகள் பயம் அதிகமாகி உள்ளது. சமீபத்தில் அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, ஜனனி என்ற கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பெண், பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் பத்தடி நடந்து போயிருப்பார், புலி அப்படியே அந்தக் குழந்தையைக் கவ்விக்கொண்டு போய்விட்டது. உடனடியாக இரண்டரை இலட்சம் ரூபாய் நிவாரணத்தை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மக்கள் பயத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வால்பாறைக்கு கீழ்ப் பகுதியிலே தேங்காய் மட்டையிலிருந்து கயிறு பின்னும் தொழிற்சாலையை அரசே தொடங்க வேண்டும். இதுபோன்று இருக்கக்கூடிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

எண்டோசல்பான் உயிர்க்கொல்லி மருந்தை வால்பாறைக்கு வந்து அடித்தார்கள். மருந்து அடிக்கும்போதே அங்கு தேயிலைத் தோட்டத்தில் இலை பறித்துக் கொண்டிருந்த பெண்கள் 20 பேர் மயக்கம் போட்டு விழுந்து, நாங்கள் எல்லோரும் நேரடியாகச் சென்று பார்த்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைக் கேரள மாநில அரசாங்கம் தடை செய்துவிட்டார்கள். உச்ச நீதிமன்றத்திலும் அதைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மக்களை பாதிக்கக்கூடிய உயிர்க்கொல்லி மருந்துகளாக இருக்கக்கூடியவற்றையெல்லாம் தடை செய்ய வேண்டும் என்றும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைக்கப்பட்ட உடனேயே இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு 260 ரூபாய் சம்பளம் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதேபோல, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கூடுதலான சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜூன் 10] [திரு. எம். ஆறுமுகம்]

கடைசியாக ஒன்று. கோவை மாவட்டம் என்பது தென்னிந்தியாவின் மான்செஸ்டர். ஒன்றுபட்ட மாவட்டமாக ஈரோடு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் என்று இருந்தபோது, தென்னிந்தியாவின் மான்செஸ்டரில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 5 ஆலைகள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள ஆலைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டன. அதேபோல, பல பஞ்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இந்த மூடப்பட்ட பஞ்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பினை உத்தரவாதப்படுத்துவதற்கான முறையிலே சிந்திக்க வேண்டும்.

திருப்பூரில் சாயப்பட்டறைக் கழிவுநீர்ப் பிரச்சினை மேலான பிரச்சினை. திருப்பூர் மட்டுமல்லாது பல மாவட்டங்களில் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைத்துள்ளது. ஏற்றுமதி வர்த்தகம், உள்நாட்டு வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகி, திருப்பூர் வெறிச்சோடிக் கிடக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தென் மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டார்கள். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தும், அரைகுறை வேலையுடனும், அரை வயிற்றுக் கஞ்சியுடனும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அடுத்த ஆறு மாத காலத்தில் ஏற்றுமதி மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகும். அவர்களுக்கு சாய ஆலைகள் எப்போது இயங்கும் என்று தெரியாததால், அண்டை நாடுகளிலிருந்து வந்த பாதி ஆர்டர்களை நிறுத்திவிடத் தொடங்கிவிட்டார்கள். எனவே, buyers—ம் நிறுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

எனவே, சாய ஆலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நிலத்தடி நீர் கெட வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். விவசாயம் பாதிக்கப்படட்டும் என்று சொல்ல மாட்டேன். விவசாயிகளையும் அழைத்துப் பேசி, நிலத்தடி நீர் பாதிப்பு இல்லாமல் அந்த சாய ஆலைகளை எப்படி இயக்குவது, தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகளை எப்படிக் கொடுப்பது என்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய முக்கியமான ஒரேயொரு விஷயம், நிலத் திருடர்கள். கோயம்புத்தூரில் லாட்டரிச் சீட்டு அடிக்கக்கூடிய ஒரு ஆள் இருக்கிறார். முதலமைச்சர் அவர்கள்

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஜூன் 10

பொதுக் கூட்டத்தில் பேசும்போதுகூட சொன்னார்கள். அவர் தமிழ்நாடு முழுவதும் 100 ஏஜென்ட்கள் வைத்து, எங்கெங்கு நிலங்கள் இருக்கின்றனவோ, எங்கெங்கே பெரிய buildings இருக்கின்றனவோ, அவற்றை அபகரிப்பதுதான் வேலை. அதை மிரட்டி வாங்குவதுதான் வேலை. நேற்றுகூட எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர்களுடைய ஆட்கள் போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளெயின்ட் கொடுத்தால் சார்ஜ் ஷீட்டே போடமாட்டேன் என்கிறார்களாம். பிறகு நான் கூப்பிட்டுச் சொன்னேன். அவர்தான் இடையிலே லாட்டரிச் சீட்டு அடித்துக் கொண்டிருக்கக்கூடியவர். அவரால் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. பறிக்கப்பட்ட நிலங்களை மீட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று.

*முற்பகல் 10—30*

முந்தைய தி. மு. க. ஆட்சியில், நடைபெற்ற ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். தி. மு. க. ஆட்சியில், கோவையில் எல்.பி.எஃப்., என்று சொல்லக்கூடிய தொழிற்சங்கம், அது அவர்களுக்குச் சொந்தம். வைகோ அதன் தலைவர். அங்கே இருக்கக்கூடியவர் திரு. சு. துரைசாமி. அந்தச் சங்கத்தைப் பட்டப் பகலிலே போய் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்கள் ஆக்கிரமிப்பு செய்து அவையெல்லாம் அகற்றப்பட்டு, அந்தக் கட்டடத்தை அப்படியே take over பண்ணிவிட்டார்கள் என்பது குறித்து பத்திரிகைகளிலே பத்தி பத்தியாகச் செய்தி வந்தது. இதுபோன்ற விஷயங்களில் அருமையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தக்க ஒன்று. அந்தக் கட்டடங்களெல்லாம் திரும்பவும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய அத்துணை அம்சங்களும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லி, ஆளுநர் உரையை வாழ்த்தி, வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2011 ஜூன் 10]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசும்போது, கோயம்புத்தூரில் கள்ள லாட்டரிச் சீட்டு அடிக்கின்ற ஒருவர் செய்கின்ற அட்டூழியங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். நடவடிக்கை இல்லை என்று குறிப்பிட்டார். அவர்மீது முறையான புகார்கள் கொடுக்கப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம், 25 நிமிடங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, வணக்கம். ஏதோ தமிழகத்தை 2000 ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்துவிட்டதைப்போல, தருக்கித் திரிந்தவர்கள் ஆட்சியைத் தலைகுப்புறக் கவிழ்த்துப் போட்டு, வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கிப் போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான மௌனப் புரட்சிக்குத் தள நாயகியாய், சாரதியாய்த் திகழ்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி பாராட்டிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணிக் கட்சிகளின் ஆற்றல்மிகு தலைவர் பெருமக்களையும், செயல் வீரர்களையும் வாழ்த்திப் பாராட்டுகிறேன். இந்த அவையில் நான் அடியெடுத்து வைப்பதற்கு அனுமதிச் சீட்டு வழங்கிய பெரம்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பது சிலப்பதிகார காலம். 'தமிழகத்திலே பெரும் தவறிழைத்தவர்களுக்கு வாக்கு இயந்திரமே எமனாகிவிட்டது' என்பது இந்த ஜனநாயகக் காலம். 'ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்' என்று இளங்கோவடிகள் சொன்னார். இப்போது, 'ஊழல் வினை வந்து உறுத்தும்' என்றாகிவிட்டது.

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

*(மேசையைத் தட்டும் ஒலி)* அது ஊர் ஊராய்த் துரத்தும் என்றாகிவிட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* சிறை சிறையாய் வருத்தும் என்றும் ஆகிவிட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நவீன தாராளமயக் கொள்கையைப் பின்பற்றி இந்த நாட்டைச் சீரழித்துக்கொண்டிருக்கிற காங்கிரஸ் அரசின் கொள்கைகளை அடியொற்றிப் போக வேண்டாம் என்று கடந்த ஆட்சியை நாங்கள் எச்சரித்தோம், பலவிதங்களிலே. ஆனால், அவர்கள் எங்களுக்கு அதிகாரம் ஒன்று போதும், அதனால் கிடைக்கிற சுவையும், அதனால் கிடைக்கிற இலாபமும் போதும் என்று இருந்தார்கள். இப்போது அதற்காக 'கூடா நட்பு' என்றெல்லாம் பேசுகிறார்கள். என்ன பேசியும் எந்தப் புண்ணியமும் இல்லை. நாடும் கெட்டது, அவர்களும் கெட்டார்கள்.

இப்போது, கடுமையான விலையேற்றம், முருங்கைக் காய் கிலோ *32* ரூபாய்க்கு விற்றது என்றெல்லாம் இருந்த அந்த நிலையிலேயிருந்து தமிழக மக்களை நாம் காப்பாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்தை, பிரதானமாக அவர்களுடைய கொள்கைகளிலேயிருந்து சிலவற்றைக் கைவிட வைக்கிற நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். நாம் ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கிற சிறப்புமிக்க தீர்மானங்களைப்போல, மத்திய அரசாங்கத்திற்கு எதிராக நாம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். இப்போதுகூட, திருப்பூரையும் நம்முடைய ஏழு, எட்டு மாவட்டங்களையும் வாட்டிக்கொண்டிருக்கக்கூடிய நூல் விலையேற்றம், அதனால் ஏற்பட்டிருக்கிற வேலையிழப்பு, தொழில் நசிவு, இவற்றிற்குக் காரணமாக இருப்பது பருத்தி ஏற்றுமதி. நாளையதினம்கூட ஏற்றுமதி ஆகப் போகிறது, இன்றைக்கு ஏராளமான தீய ஏற்பாடுகளை மத்திய அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. நம் நாட்டுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை நம்முடைய தேவைக்கு மேல் உள்ளவற்றை ஏற்றுமதி செய்தால் குற்றம் இல்லை. ஆனால், தேவை இருக்கிறபோதே ஏற்றுமதி செய்கிறார்கள். அதுதான் இப்போதிருக்கிற மிகப் பெரிய பிரச்சினை. சர்க்கரையும் அப்படித்தான், அரிசியும் அப்படித்தான், பருத்தியும் அப்படித்தான் என்று மத்திய அரசாங்கம் செய்துகொண்டிருக்கிற இந்தத் தாராளமயக் கொள்கை காரணமாகத்தான் மிகக் கடுமையாக நாம் எல்லா வகையிலும் பாதிக்கப்படுகிறோம். ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

இந்த ஏற்றுமதிக் கொள்கையை, on-line வர்த்தகக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தக்கூடிய முறையிலே நாம் தீர்மானம் இயற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அரசாங்கம் ஒழிந்ததோடு, 'சூரியன் அஸ்தமித்துவிட்டது' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். சூரியன் அஸ்தமித்துவிட்டது. இருந்தாலும், அந்த சூரியனின் சில கெட்ட கதிர்வீச்சுகள் இப்போதும் பல துறைகளில் தொடர்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவற்றை முதல்வர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், நான் சிலவற்றைச் சுட்டிக்காட்டுகிறேன்.

*முற்பகல் 10–35*

நேற்றைய தினமலர் பத்திரிகையிலேகூட சப்–இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் அங்கு நடக்கிற எல்லா சமூக விரோத நடவடிக்கைகளான கஞ்சா விற்பனை, போலி லாட்டரி விற்பனை போன்ற எல்லாவற்றுக்கும் இவர்கள் துணை நின்று *6* இலக்கங்களில் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற செய்தி வந்திருக்கிறது. அப்படி காவல் துறை இப்போதும் முழுமையாக அடிமட்டத்தில் திருந்தி விட்டதாகச் சொல்ல முடியாது. நாம் அவர்கள் விஷயத்திலே மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு ஏற்கெனவே இருந்த ஆட்சி அவர்களைக் கெடுத்து வைத்திருக்கிறது. சட்டம்–ஒழுங்கு என்பது உயர் நீதிமன்றத்திற்குள்ளும் இல்லை; கல்லூரிக்குள்ளும் இல்லை, பல்கலைக்கழகத்திற்குள்ளும் இல்லை. அந்த ஆட்சியிலே எங்கும் சட்டம்–ஒழுங்கு இருந்ததில்லை. சங்கலிப் பறிப்பு மட்டுமல்ல, முக்கியமான இடங்களிலும் சட்டம் ஒழுங்கு இருந்தது இல்லை. ஆகவே, சட்டம் ஒழுங்கை நாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது கிரிமினல் குற்றவாளிகளிடம் மிகக் கடுமையாக நாம் இருக்க வேண்டும் என்கிற அரசாங்கத்தினுடைய நிலை சரியானது.

சட்டம் ஒழுங்கு என்பதிலே கடந்த ஆட்சி, தண்ணீர் கேட்டவர்களை, ரேஷன் கார்டு கேட்டவர்களை, சாலை கேட்டவர்களை, தெரு விளக்கு கேட்டவர்களை, *100* ரூபாய் கூலி

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

என்று வேலைத் திட்டத்திலே சொன்னார்கள். ஆனால், 60 ரூபாய்தான் தந்தார்கள் என்று சொன்னவர்களை எல்லாம் அடித்து நொறுக்கினார்கள். ஆகவே, சட்டம் ஒழுங்கு என்ற அந்த வட்டத்திற்குள்ளே வைத்து, அவதிப்படுகிற மக்கள் சாலைக்கு வருகிறபோது, தங்களுக்கு நியாயம் கேட்கிறபோது நாம் தடியடிப் பிரயோகத்தைச் செய்யக்கூடாது என்பது போன்ற உறுதியான உத்தரவுகளை நம்முடைய காவல் துறைக்கு பிறப்பிக்காவிட்டால் அவர்கள் தவறு செய்கிற ஆபத்து இருக்கிறது என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. தொழிற்சங்கத்திற்கு தலைமையேற்று தொழிலாளர் போராட்டத்தை நடத்தப்போனதற்காக நான் கைது செய்யப்பட்டேன். 300 பேர் கைது செய்யப்பட்டோம். சிறையில் அடைக்கப்பட்டோம். கை விலங்கு பூட்டப்பட்டோம். நானே 40—க்கும் மேற்பட்ட வாகனங்களை அடித்து நொறுக்கியதாக என்மீது அபாண்டம். இப்படியெல்லாம் வழக்குப் போடுகிற அபாயம் இருக்கிறது. ஆகவே, தொழிலாளர் போராட்டங்கள், மக்களுடைய சில உரிமைகள் சம்பந்தப்பட்ட போராட்டங்கள் போன்ற விஷயங்களை சட்டம் ஒழுங்கு என்ற வட்டத்திற்குள்ளே கொண்டு வராமல், அவற்றை கருணையோடு அணுக வேண்டும். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறைக்கு நாம் எச்சரிக்கையாக சொல்லிவைக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். சுருக்கமாகச் சொன்னால், தடி காவல் துறையிடம் இருக்கட்டும், அதனுடைய பிடி நம்முடைய கருணைமிக்க முதல்வர் கையில் இருக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் நல்லது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சி குறித்து இந்த ஆளுநர் உரையிலே வந்திருப்பது மிகச் சிறப்பாக இருக்கிறது. செம்மொழி மாநாட்டில் மிச்சம் இப்போது இருப்பது ‘தமிழ் வாழ்க’ என்கிற நியோன் பல்புதான். வேறு எதுவும் அதிலே மிச்சம் இல்லை. இப்போது செம்மொழி மாநாட்டில் ஒன்றை அறிவித்தார்கள். கணினியிலே நம்முடைய நான்காவது தமிழ் என்று சொல்கிற கணினித் தமிழிலே unicode என்கிற அந்த முறையை நாங்கள் அமல்படுத்தி விட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது unicode—க்கு இருக்கிற consortium—இடம் கடந்த ஆட்சி renewal பண்ணாததால், புதுப்பிக்காத காரணத்தினால் இப்போது அது செயலில் இல்லையென்று தமிழ் அறிஞர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதில் சற்று அக்கறைச் செலுத்தி அந்த unicode எல்லோருக்கும் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மடிக் கணினியை நாம் கொடுக்கிறபோது இந்த unicode இருந்தால்தான் நம்முடைய தமிழ்ப் பிள்ளைகளுக்கு வசதிப்படும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரமும் நிதியாதாரமும் தேவை. ஊழல் ஒழிப்பிற்கும், உள்ளடங்கிய வளர்ச்சிக்கும், அதிகாரத்தைப் பரவலாக்குவதும், வெளிப்படைத் தன்மையோடு செயல்படுவதும் அவசியம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அதைச் செய்வதற்குரிய சில நடவடிக்கைகளையும் நாங்கள் எதிர்பாக்கிறோம்.

ஓய்வூதியத்தை ரூ.500—லிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியிருப்பது மிகப் பெரிய காரியம். அது ஏராளமானபேருக்கு பெரு மகிழ்வைத் தந்திருக்கிறது. கடந்த ஒரு வாரத்திலே ஓய்வூதியதாரர்களுடைய விண்ணப்பங்கள் எம். எல். ஏ.க்களுக்கு ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு அது ஒரு பெரிய ஈர்ப்பைப் பெற்றிருக்கிற ஒரு திட்டம். இதைப்போலவே முறைசார தொழிலாளர்கள் இப்போது 500 ரூபாய் ஓய்வூதியம் நல வாரியங்கள் மூலமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த பட்ஜெட்டில் நிச்சயமாக அவர்களுக்கும் 1,000 ரூபாய் என்று முதல்வர் அவர்கள் கனிவோடு அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இலங்கைத் தமிழர் முகாம்களில் இருப்பவர்களுக்கு இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற அனைத்தும் சிறப்புக்குரியவை. இலங்கையிலேயிருந்து அகதிகளாக வராமல் போர்க்காலத்திலேயே இங்கு வந்தவர்கள் இப்போது Overseas citizens of India என்கிற பெயரிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ரேஷன் கார்டு கொடுப்பதில்லை. வேறு சலுகைகளை நாம் தருவதில்லை. அதுகுறித்தும், யுத்தம் முடிந்துவிட்ட நிலையில் அவர்களும் இங்கே சமமாக வாழ்வதற்குரிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிரமுகர்கள் இப்போதும் ஏராளமான நிலங்களை மடக்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தரிசு

நிலங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். அதுகுறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் இப்போதும் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட மிச்ச நிலங்கள் பலர் கையில் மடங்கிக் கிடக்கின்றன, அடங்கிக் கிடக்கின்றன. ஒரு நீதியரசரே அரசாங்க நிலத்தைக் கையகப்படுத்தி வைத்திருக்கிறார் என்று அவர் குறித்துப் போட்ட ஒரு குழு இப்பொழுது சொல்லிவிட்டது. ஆகவே அப்படி பெரும் பணக்காரர்கள் ஏராளமான நிலங்களை மடக்கி வைத்திருக்கிறார்கள். அரசு நிலங்களை மடக்கி வைத்திருக்கிறார்கள், புறம்போக்கு நிலங்களை மடக்கி வைத்திருக்கிறார்கள். அவற்றை நாம் கைப்பற்ற வேண்டியிருக்கிறது.

*முற்பகல் 10—40*

நில உச்சவரம்புச் சட்டத்திற்குப் புறம்பாக அதை ஏமாற்றி கையில் வைத்திருக்கிற நிலங்களையும் நாம் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஏரிக்கரையிலே பள்ளிக்கூடம் கட்டினால் அல்லது மலையடிவாரத்திலே கல்லூரி கட்டினாலே அதற்குப் பின்னால் எவ்வளவு தூரம் போகலாம் என்கிற கணக்கோடுதான் கட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் ஆய்வு செய்தால் தெரிந்துகொள்ளலாம். ஆகவே, இப்படி மடக்கி வைக்கப்பட்டிருக்கிற நிலங்கள் முழுவதையும் நாம் எடுக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்திலே, பல்லவாடா என்கிற கிராமத்திலே இப்பொழுதும் 700 ஏக்கர் புறம்போக்கு நிலம் தனி நபரிடம் இருக்கிறது. இப்படி ஏராளமான பிரச்சினைகள். இவை குறித்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவற்றை ஆய்வு செய்து இந்த நிலங்களை மீட்கவும், நிலமற்றவர்களுக்குத் தரவும் ஒரு தனி ஆணையத்தை அமைத்து அதற்கு அதிகாரம் வழங்கி செயல்பட வைத்தால் உதவிகரமாக இருக்கும். ஏற்கெனவே இந்தக் குற்றங்களை இழைத்தவர்கள் பதிவுத் துறையின் துணையில்லாமல், அதிகாரிகளின் ஆதரவு இல்லாமல் செய்திருக்க முடியாது என்பதையும் கணக்கில் கொண்டு, இந்த ஆணையம் செயல்படுமானால், நாம் இந்த நிலங்களை மீட்க முடியும் என்பது என்னுடைய ஆலோசனை.





ஏழை எளிய மக்கள், பல ஆண்டுகளாக குடியிருந்த பிறகும் குடிமனைப் பட்டா கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். கோயில் மனைகளிலே குடியிருப்பவர்களுக்கு மலிவாக சலுகை விலையிலே அவற்றை நாம் உரிமைப்படுத்த வேண்டும். அதேபோல் குடிசை மாற்று வாரியத்திலே பணம் கட்டிய பிறகும், இப்பொழுதும் அவர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் கிடைக்காத பிரச்சினை இருக்கிறது. இதுபோன்ற விஷயங்களிலும் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டியவர்களுக்கு உடனடியாக Sale Deed கொடுக்கும்படி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக பணம் கட்டியவர்களுக்கு உடனடியாக Sale Deed கொடுக்க நடவடிக்கை இப்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. வேலைவாய்ப்பு குறித்து நம்முடைய அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசிலே, பொதுத் துறை அலுவலகங்களிலே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தால் அது மிகப் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக, வாரிசு வேலைக்குக் காத்திருப்பவர்களே பல்லாயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளைப் பற்றி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் காலத்திலே, சத்துணவுப் பணியாளர்கள் குறித்து மிகுந்த கருணையோடு நம்முடைய முதல்வர் அவர்கள் பேசினார்கள். அவர்களுக்கு அது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. இப்பொழுது அதுகுறித்து எதுவும் இல்லை என்கிற வருத்தம் அவர்களுக்கு இருக்கிறது. சத்துணவு, அங்கன்வாடி, டாஸ்மாக், உள்ளாட்சி ஊழியர்கள் போன்ற தொகுப்பு ஊதிய, மதிப்பு ஊதிய பணி நிரந்தரமற்றுக் கிடக்கிற இலட்சக்கணக்கான பேர்களுடைய பிரச்சினையிலே ஒளியேற்றத்தக்க சில முடிவுகளை அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

ரேஷன் கடைகளில் நாம் 20 கிலோ அரிசியை இலவசமாக வழங்குகிறோம், போற்றுதலுக்குரிய ஒரு சிறந்த நடவடிக்கை. ஆனால், ரேஷன் கடைகளில் 1,200 கார்டுகள், 1,300 கார்டுகள் என்று சென்னையைப் போன்ற நகரங்களிலே இருக்கின்றன. இதை வாங்குவதற்கே அரை நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. காலையிலே வந்துவிட்டு மீண்டும் மாலையிலே வர வேண்டியிருக்கிறது. இடப் பற்றாக்குறை காரணமாக கடுமையான வெயிலில் தாய்மார்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அம்மா அவர்கள் ஏற்கெனவே 1,600 கார்டுகளுக்கு மேல் இருக்கிற கடைகளைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் எல்லாம் ஆயிரம் கார்டுகளாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. 500 அட்டைகளுக்கு ஒரு கடை என்கிற முறையிலே இருந்தால் நாம் முழுமையாக கடை என்று நடத்தாமல் பகுதிநேரக் கடைகள் என்று ஆக்கினால்கூட, தாய்மார்களுக்கு அவர்களுடைய வேலைகளைப் பாதிக்காமல் உதவியாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

அடுத்து, கேபிள் டி. வி. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்பதைபோல கேபிள் டி. வி. யை மீட்டு நீங்கள் இப்பொழுது காப்பாற்றியிருக்கிறீர்கள். அதோடு சேர்த்து திரைத் துறையையும் காப்பாற்ற வேண்டும் என்பது என்னுடைய விண்ணப்பம். அது பலர் கையில் சிக்கித் தவிக்கிறது. திரை அரங்குகளையும் காப்பாற்றுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். படம் எடுப்பார்கள், ஆனால் அதைப் போடுவதற்கு திரை அரங்கு இருக்காது என்கிற ஒரு நிலை இருந்தால், பொருள் உற்பத்தியாகும், ஆனால் சந்தைப்படுத்த இடம் இருக்காது என்பதைப்போல ஒரு நிலை. ஆகவே, அதிலே நாம் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை நம்பியிருக்கக்கூடிய பல



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

இலட்சக்கணக்கானவர்களுடைய வாழ்வு என்கிற காரணத்தினால் அதை நான் குறிப்பிட விரும்புகிறேன். திரைத் துறையைப் பற்றியும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்பொழுது வீடுகள் தீப்பிடித்தால், முழுமையாக அழிந்து போனால்கூட, நாம் உடனடியாக செய்கிற உதவி 2,000 ரூபாய், 5 கிலோ அரிசி, ஒரு புடவை, ஒரு வேட்டி தருகிறோம். நிச்சயமாக இவை போதாது. நாம் முதியோர் உதவித் தொகையை ஆயிரம் என்கிற அளவுக்குத் தருகிற இந்தக் காலத்தில் 2 ஆயிரம் ரூபாய் போதாது. முழுமையாக வீடு எரிந்து, அனைத்தையும் இழந்தவர்களுக்கு நாம் குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாய் வழங்குகிற அளவுக்கு செய்தால்தான் அந்தக் குடும்பம் ஏதாவது செய்ய முடியும் என்பது என்னுடைய ஆலோசனை.

*முற்பகல் 10–45*

மருத்துவத் திட்டத்தை சிறந்த முறையிலே மாற்றியமைக்க வேண்டும் என்ற அரசினுடைய பரிந்துரை வரவேற்கக்கூடியது. இந்த இன்சூரன்ஸ்லே அறுவை சிகிச்சைக்கு மட்டும்தான் என்பது அந்தத் திட்டத்தில் இருக்கிற மிக மோசமான ஒரு நிபந்தனை. வேறு எந்த நோய்க்கும் சிகிச்சை செய்யமுடியாது. அதிலே மிகப் பெரிய மோசடி நடக்கிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் Star Health Insurance–க்கு போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லா நோய்களுக்கும் மக்களுக்கு சிகிச்சை கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய இன்னொரு திட்டத்தைக் கொண்டு வருவதும், அரசு காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக அதைச் செயல்படுத்துவதும் மிக நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இலாப நோக்கம் அதிலே குறைவாக இருக்கும். நம்முடைய மருத்துவமனைகளை, ஏற்கெனவே அரசு அறிவித்திருப்பதைப்போல, போர்க்கால வேகத்தில் நவீனப்படுத்த வேண்டும். அங்கு எல்லா கருவிகளும் மற்ற வசதிகளும் இருக்கவேண்டும். பெரிய அறுவை சிகிச்சைகள் செய்யும் வசதி தமிழகத்திலே மூன்றே மூன்று மாவட்ட மருத்துவமனைகளில்தான் இருக்கிறது. மீதி மாவட்ட மருத்துவமனைகளிலே பெரிய அறுவை சிகிச்சை வசதிகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, எல்லா இடங்களிலேயும் அறுவை சிகிச்சை வசதிகளை நாம் கிடைக்கச் செய்தாலே பெரிய

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

உதவியாக இருக்கும். அதையும் செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

பசுமை வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, மிகப் பெரிய ஒரு மாறுதல், கிராமப்புறத்தில் ஏழ்மையிலே இருக்கிற அந்த மக்கள் ஒரு பெரிய மறுமலர்ச்சியைப் பெறுவதற்குரிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தையும்கூட நாம் குறுகிய காலத்திலேயே செயல்படுத்துவோம் என்று அறிவித்திருப்பதுதான் அதிலே இருக்கிற மிகச் சிறப்பம்சம், அதை நான் போற்றி, வரவேற்கிறேன்.

அடுத்து, நகரைச் சுத்தப்படுத்துவது என்கிற முறையிலே ஆளுநர் உரையிலே இருக்கிற அந்த வார்த்தை உண்மையிலே எனக்கு பெருமகிழ்ச்சி தருகிறது. நான் வட சென்னையிலேயிருந்து வருகிறேன், தென் சென்னைக்குப் பிரச்சினை இல்லையென்றோ, தென் சென்னை எல்லா வகையிலும் உயர்ந்துவிட்டது என்றோ நான் சொல்வதாக யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆனால், தென் சென்னையை ஒப்பிட்டால், வட சென்னை வெப்பப் புகையிலே வாடி வதங்கிப் போய்விட்ட ஒரு பூங்கொடியைப்போல இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நகர்ப்புறத்தைச் சுத்தப்படுத்துவது என்பது சென்னை நகரத்தை, அதிலும் குறிப்பாக வட சென்னைப் பகுதியிலே ஏராளமான நடவடிக்கைகளை உடனடியாக நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அங்கே கால்வாய்களைச் சுத்தப்படுத்துவதில் தொடங்கி, சாலைகள் போடுவதில் தொடங்கி பல்வேறு விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. குப்பை மேடு இந்த இரண்டு தரப்பிலும் இன்றைக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. மக்கள் இல்லாத காலத்தில் ஒரு குப்பை மேட்டை உண்டாக்கினோம், இப்போது அதைச் சுற்றி இலட்சக்கணக்கான மக்கள் குடியிருக்கத் தொடங்கிவிட்டதால், ஒன்று அதை நாம் மாற்ற வேண்டும். மாற்றுகிற வரையிலே அங்கிருந்து புகை வராமல், அங்கிருந்து ஈ வராமல், அங்கிருந்து வேறு நாற்றம் வராமல் இருப்பதற்குரிய திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். ஒரு உயரமான சிம்னியை எழுப்பி எரிகிற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஜூன் 10]

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவுடைமை இயக்கத்தில் இருக்கிறார். தொகுதிக்குள்ளாகவே வந்துவிட்டார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் முழு சுகாதாரம் பெற்ற தமிழகமாக மாறவேண்டும் என்று தேர்தல் அறிக்கையிலே கூறியிருக்கிறார். அந்த முழு சுகாதாரம் என்பது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், நல்ல சுற்றுச்சூழல் உள்ள வீடு, சுத்தமான கிராமம், நகரம். எனவே, தமிழகம் முழுவதையும் சுகாதாரமிக்க தமிழகமாக மாற்றுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுத்துவருகிறார். எனவே, வட சென்னை மட்டுமல்ல, தமிழகத்திலே எங்கே இருக்கின்ற குக்கிராமங்களும் சுத்தமான தமிழகமாக மாறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. இப்போது இருக்கிற அந்தக் குப்பை மேட்டிற்கு உடனடித் தீர்வுதான் நான் கேட்கிறேன். மிகக் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய தொழில்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது என்பது மிக மிக அவசியம். வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும். நம்முடைய பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி செய்கிறபோது, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தொழிலாளர் உரிமையையும் இதோடு சேர்த்து நாம் பார்க்க வேண்டும். வருகிறவர்கள் அத்தனைபேரையும் அவர்கள் ஒப்பந்தக் கூலித் தொழிலாளிகளாகவே, நிரந்தரமற்ற தொழிலாளிகளாகவே வைத்திருக்கிறார்கள். நம்முடைய சட்டங்கள் எவையும் அந்த நிறுவனங்களுக்குள்ளே நடைமுறையில் பொருந்துவது இல்லை. நிரந்தரத் தன்மையுள்ள தொழிலிலே, ஒப்பந்தக் கூலித் தொழிலாளி கூடாது என்று சட்டம் சொன்னாலும்கூட, எல்லா நிரந்தரத் தன்மையுள்ள தொழில்களிலும் perennial nature உள்ள தொழில்களிலும் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மிகக் குறைந்த கூலியிலே அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே, அரசு இதிலே தலையிட்டு கடுமையாக சீர்படுத்த வேண்டும். கடந்த ஆட்சியில் நாங்கள் எவ்வளவோ

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

மன்றாடியும்கூட அந்த ஆட்சி முழுக்க முழுக்க முதலாளிகள் சார்பாகவே நின்று செயல்பட்டது. தொழிலாளர் துறையோ, தொழிற்சாலை ஆய்வகத் துறையோ உரிய நடவடிக்கையை எடுக்கிற நிலையில் இல்லை என்பது என்னுடைய அனுபவம். இப்போது நம்முடைய அமலாக்கப் பிரிவுகள் அதில் உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்பது நம்முடைய தமிழகத்திற்குள்ளே இன்னொரு தமிழகம் என்பதைப்போல் ஆகிவிட்டது. அங்கே எந்தச் சட்டமும் நுழையாது, எந்த அமலாக்கப் பிரிவும் நுழையாது என்பதெல்லாம் நமக்குப் பொருந்தாது. ஆகவே, அங்கேயும் நம்முடைய சட்டங்கள் பொருந்தும், அங்கேயும் தொழிற்சங்க உரிமை, தொழிற்சங்க அங்கீகாரம் இருக்கும் என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது.

*முற்பகல் 10–50*

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, இதர தொழில்களுக்கு, தாய்த் தொழிலாய் இருக்கிற மின்சாரம் மிக மிக முன்னுரிமை கொடுத்து செயலாற்ற வேண்டிய ஒன்று. மத்திய அரசு நமக்கு இப்போதே 2,825 மெகா வாட் மின்சாரம் கொடுக்க வேண்டும். ஆனால், இப்போது கொடுத்துக் கொண்டிருப்பது 1,200 மெகா வாட் வரை தான். ஆகவே, இந்த 1,000 மெகா வாட் மின்சாரத்தை, ஏற்கெனவே நமக்கு அவர்கள் தரவேண்டிய 1,000 மெகா வாட்களை நாம் வலுவாக அவர்களிடமிருந்து பெறுவதற்கு முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அறிவித்திருக்கிற, அதற்கு மேல் கேட்டிருக்கிற 1,000 மெகா வாட்களைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போதிருக்கிற தன்பயனீட்டு உற்பத்தியாளர்கள்–Captive Generation–லே ஈடுபடக்கூடிய நம்முடைய பல்வேறு தொழிற்சாலைகள் 600 மெகா வாட் அவர்களிடம் மிகையாக இருப்பதாக அறிவிக்கிறார்கள். ஆக, அந்த 600 மெகா வாட் மின்சாரத்தை, மின் வாரியம் நம்முடைய grid–க்கு வாங்குவதற்கு ஏன் தயங்குகிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, அந்த 600 மெகா வாட்டை நாம் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் N.T.P.C....



2011 ஜூன் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Captive Power Generators—தன் பயன் மின்னாக்கி உரிமையாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை தங்கள் தேவைக்குப்போக மீதியை எந்த மாநிலத்திற்கும் யாருக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்ற அனுமதி இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் ஒன்று, மின்சார வாரியத்திற்கும் விற்கலாம் அல்லது தமிழ்நாட்டிற்குள்ளே இருக்கின்ற தனியாருக்கும் விற்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய உற்பத்தி இங்கேயே நமது தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் என்ற காரணத்தினால் அதுவும் ஒருவகையிலே நமது மின்சார வாரியத்திற்கு மட்டும்தான் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த இயலவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** கடந்த ஆட்சியில் அந்த 600 மெகா வாட் மின்சாரத்தை மின்சார வாரியம் வாங்குவதற்கு அக்கறை செலுத்தவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதைத் தாங்கள் பரிசீலித்து, அந்த 600 மெகா வாட்டை மின் வாரியம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால், தமிழகத்திற்கு உதவியாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி தேசிய அனல் மின் கழகம் (N.T.P.C.) தங்களிடம் கூடுதல் மின்சாரம் இருக்கிறதென்று அதனுடைய Chairman தொடர்ந்து அறிவித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், தமிழக மின் வாரியம் கடந்த காலத்தில் அங்கிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அதுகுறித்தும் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து, தமிழகத்தின் இந்த மின் தேவையைப் போக்க வேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை.

மடிக் கணினி கொடுக்கிற அந்தத் திட்டத்தில் நாம் அதை அமல்படுத்துகிறபோது அதனுடைய மென்பொருட்களை proprietary concern இலாபத்திற்காக தன்னுடைய சொந்த உரிமை என்று patent செய்து வைத்திருக்கக்கூடிய நிறுவனங்களிடமிருந்து நாம் அதை வாங்கினால் கடுமையான

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

விலை பிடிக்கும் என்பது மட்டுமல்ல, தொடர்ச்சியாக நம்முடைய மாணவர்கள் அடுத்தடுத்த தேவைக்கு பணம் கொடுக்காமல் அவர்களால் பெற முடியாது. ஒரு முறையோடு அது தீராது. ஆகவே, நம்முடைய மாணவர்கள் தொடர்ந்து மடிக் கணினியைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால், சமுதாய ரீதியாக உற்பத்தி செய்யக்கூடிய இலவச மென்பொருள்கள் ஏராளம் இருக்கின்றன. அவர்களிடமிருந்து அதைப் பெறவேண்டும் என்பது ஒன்று. அந்த மென்பொருட்களைப் பயன்டுத்தினால், தமிழை அதனோடு சேர்த்துப் பயன்படுத்த முடியும். தமிழுக்கென்று தனி மென்பொருள் தேவையில்லை. ஆகவே, இந்த இரண்டையும் அரசு கணக்கில் கொண்டால், நமக்கு செலவும் மிச்சப்படும். நம்முடைய மாணவர்களுக்கும் அது பயன்படும். தொடராக, அது ஒரு நீண்டகாலப் பார்வையில் பார்த்தால் இலாபகரமானது என்று சொல்லி மடிக் கணினி விஷயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் பிரச்சினையிலே அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை பாராட்டுவதற்குரியது. 2,000 ரூபாய் என்று அவர்களுக்கு அந்தக் காலத்திற்கு நாம் அறிவித்திருக்கிற நிதி அவர்களுக்குப் பெருமளவுக்கு உதவியாக இருக்கும். அதேநேரத்தில் மீனவர்கள் தங்களுடைய மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு இடையூறாக கட்டடங்கள், பெரிய பெரிய ஓட்டல்கள், பெரிய பெரிய நிறுவனங்கள் கட்டுவதற்கு கடலோரங்களிலே அனுமதிப்பதை நாம் தவிர்க்க வேண்டும்.

சுனாமி காலத்திலே நாம் மீனவர்களுக்குக் கட்டிக்கொடுத்த வீடுகள்கூட இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இருக்கின்றன. கடற்கரையிலே தொழில் பார்க்கக்கூடியவர்களுக்கு, அவர்களுடைய வீடுகள் இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இருந்தால், அவர்களால் தொழில் பார்க்க முடியாது. ஆகவே, கடலோரத்தில் அவர்கள் இருக்கத்தக்க வகையிலே அவர்களுடைய வீடுகள் கட்டுவதை நாம் கொண்டுவருவதும், சிறு துறைமுகங்களைக் கட்டுகிறபோது, மீனவக் குடியிருப்புகள் எடுபட்டுப் போகாமல் அவர்களை ஒரு இடத்திலே கொண்டுபோய் குவியலாக வைக்காமல் இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். இல்லாவிட்டால் மீனவ மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

பாலித்தீன் பையிலே குறைந்த மைக்ரான் தடிமனுள்ளவற்றை அழிக்க வேண்டுமென்று அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை ஓர் அரக்கனை ஒழிப்பதற்குச் சமமாகும். நிலத்தடி நீர் மிகப் பெரிய அளவுக்கு நிலத்தடிக்குச் செல்லாமல் தடுக்கக்கூடிய கொடிய காரியத்தை இந்த பிளாஸ்டிக் பைகள்தான் செய்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்பது என்னுடைய ஆலோசனை. சென்னையிலே இருக்கிற கால்வாய்கள் உட்பட அத்தனையையும் இந்த பிளாஸ்டிக் பைகள் பாதித்துக்கொண்டிருக்கின்றன.

அடுத்து தீண்டாமை என்ற ஒரு பிரச்சினையிலே, அரசியல் சட்டத்திலே இருந்தாலும், இதற்கு ஏராளமான வன்கொடுமைச் சட்டங்கள் இருந்தாலும், எது இருந்தாலும் தீண்டாமை பல வடிவங்களிலே தொடர்ந்தவண்ணம் இருக்கிறது. தீண்டாமைச் சுவர்கள், தீண்டாமை வேலிகள், இரட்டை டம்ளர்கள் என்று எல்லா வகைகளிலும் இதுபோன்று இருக்கக்கூடிய இந்தத் தீண்டாமைப் பிரச்சினைகளில் அரசு அவை வருகிற ஒவ்வொரு தருணத்திலும் கடுமையான நடவடிக்கை எடுத்து உறுதியாகச் செயல்படுத்துவோம் என்ற செய்தியை தீண்டாமையைப் பின்பற்றக்கூடிய சமூக சக்திகளுக்குத் தெரிவிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

*முற்பகல் 10—55*

இப்போது மசூதி கட்ட விரும்பக்கூடிய நம்முடைய சிறுபான்மையின மக்கள் பட்டா நிலத்தில் உரிமை கேட்டால்கூடக் கிடைக்கவில்லை என்கிற ஒரு குறையைச் சொல்கிறார்கள். அது குறித்தும் அரசு அக்கறையோடு கவனிக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

சென்னையிலே என்னுடைய தொகுதி இருக்கக்கூடிய வடசென்னை பகுதியிலே கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் அவர்களுடைய இடுகாட்டிற்காக 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர் திருவுடலை எடுத்துச் செல்லவேண்டிய தேவையிருக்கிறது. ஆகவே, அதை கொஞ்சம் கணக்கில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, இடுகாட்டுப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Endosulphan என்ற கொடிய நச்சு, கூடலூரிலே தேயிலைத் தோட்டங்களிலே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற ஒன்றாக இருக்கிறது. அங்கே 374 பேர் 2004–லிருந்து இதுவரை கேன்சர் நோயினால் மருத்துவமனையில் சேர்ந்திருக்கிறார்கள். மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ரிப்போர்ட் ஆனது ஐந்தில் ஒரு பகுதிதான், கிட்டத்தட்ட 1,500 பேர் கேன்சர் நோயாளிகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதுபற்றி ஆய்வு செய்த குழுவும் அதையே சொல்கிறது. ஏராளமான பேருக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் நடக்கிறது. நம்முடைய டெல்டா பகுதி, திருவாரூர், தஞ்சை, நாகப்பட்டினம் மாவட்டங்களிலேயும் Endosulphan ஆல் மக்களுடைய ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த Endosulphan விஷயமாக உடனடியாக ஒரு குழு அமைத்து, ஆய்வு நடத்தி, இதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கிய பாதிப்புகளை நாம் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். Endosulphan–ஐ தடை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் தடை செய்வதற்கான நடவடிக்கையையும் அரசு எடுக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேச்சுக்கு இடையூறு விளைவிக்காவண்ணம் இருக்கையில் அமரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** அரசின் வருவாயைப் பெருக்குவதற்கு அரசு சில ஆலோசனைகளை நம்முடைய ஆளுநர் உரையிலே கூறியிருக்கிறது. ஆகவே, அரசின் வருவாய் என்று வருகிறபோது, மணல் கொள்ளையை நிறுத்தினால், அரசின் வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கான ஒரு இடமாக இருக்கும்.

கனிம வளம் மிகப்பெரிய அளவிலே கொள்ளை அடிக்கப்பட்டுக்கொண்டிருந்த ஒன்றாக தமிழகத்திலே இருந்தது. ஆகவே, கனிம வளம், மணல் இந்த இரண்டு விஷயங்களிலும் அரசு மிகக் கடுமையாக நடவடிக்கை எடுத்து அவற்றைக் கட்டுப்படுத்தினால் அரசுக்கு வருமானம் ஈட்ட வழியிருக்கிறது. அதேபோல், அரசினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது, இப்பொழுதுகூட தாசில்தார் ஒருவர் தாக்கப்பட்டார், மற்றவர் தாக்கப்பட்டார் என்கிற செய்தியைப் பார்க்கிறோம். ஆகவே, அதிலே இடையிலே புகுந்து பல





வகைகளிலே தொந்தரவு செய்யக்கூடிய எல்லா சக்திகளுக்கு எதிராகவும் உறுதியாக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். என்னுடைய தொகுதிக்கு உள்ளிட்ட பகுதியிலே நான் ஏற்கெனவே சொன்னேன், தென் சென்னை, வட சென்னை என்று வருகிறபோது நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொன்னேன். என்னுடைய தொகுதி சந்திக்கக்கூடிய மாதவரம் தொகுதி, திருவொற்றியூர் தொகுதி, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி ஆகிய மூன்று தொகுதிகளும் இணையக்கூடிய இடத்திலே ஓர் அரசுக் கல்லூரி இருந்தால், இப்பொழுது இருக்கிற நெருக்கடிகளைப் போக்குவதற்கு அங்கு இருக்கிற ஏழை மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பது ஒன்று. இரண்டாவது, அந்தப் பகுதியிலே ஒரு புறநகர் மருத்துவமனை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராயபுரம் தொகுதியை விட்டு விட்டீர்களே, பக்கத்து தொகுதிதானே?

**திரு. அ. சவுந்தரராசன்:** ஆம். ராயபுரம், ராயபுரம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு பக்கத்திலே இருக்கிறது என்று பார்த்தேன். ஆகவே, அங்கே ஒரு புறநகர் மருத்துவமனை நிச்சயமாக தேவைப்படுகிறது. நாய் கடித்தால்கூட உடனடியாக சிகிச்சைக்கு வழியில்லை என்கிற ஒரு அவலநிலை இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு புறநகர் மருத்துவமனை வேண்டும். அதுபோல், அன்றாடம் மருந்து சாப்பிடவேண்டிய சில நோய்கள், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றால் அந்த நோயாளிகள் வாரத்திற்கு இரண்டுமுறை, மூன்றுமுறை, நெடுந்தொலைவு சென்று மருந்துகளைப் பெறுகிற ஓர் அவலம் இருக்கிறது. போகமுடியாததனாலேயே, பணம் செலவழிக்க முடியாததனாலேயே அவர்கள் மருந்து வாங்கிச் சாப்பிடாமல் இருக்கிற அவதியெல்லாம் இருக்கிறது. ஆகவே, அந்த 4 தொகுதிகள் இணையக்கூடிய இடத்திலே ஒரு புறநகர் மருத்துவமனையைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வட சென்னையிலே இருக்கிற கால்வாய்களான, கூவம், வியாசர்பாடி கால்வாய், கேப்டன் கால்வாய் போன்ற கால்வாய்கள் மிகப்பெரிய அளவிற்கு சுகாதாரக் கேடு விளைவிக்கக்கூடிய கால்வாய்களாக இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்துவதுவும், சுத்தப்படுத்துவதுவும் அங்கே... (குறுக்கீடு)

[2011 ஜூன் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–00*

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மணல் கடத்துகின்ற சமூக விரோதக் கும்பலை கடந்த ஆட்சியைப்போல் இந்த ஆட்சியிலேயும் விட்டுவிடக்கூடாது என்று சொன்னார். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு தாசில்தார்களையும், கிராம நிருவாக அலுவலர்களையும் அடித்ததாகத் தகவல் வந்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், அவர்கள்மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 6 நபர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் நாமக்கல் பகுதியிலேயும் இதுபோன்ற சம்பவம் நடந்து, அவர்களும் இன்றையதினம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. அந்தக் கால்வாய்கள் அழுக்கும், அசிங்கமும் மண்டிக்கிடக்கிற ஒன்றாகவே நாம் வாழும் பகுதியையே மாற்றிக்கொண்டிருக்கிறது. கொசுத் தொல்லை மிகப் பெரிய அளவிற்கு அந்தப் பகுதி முழுவதும் பரவி இருக்கிறது, தமிழகம் முழுவதும் இருக்கிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு சில நடவடிக்கைகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. நீண்டகால சுத்தப்படுத்துதல் மற்றும் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிற நடவடிக்கையை நான் வரவேற்கிற அதேவேளையில், இப்போது இருக்கிற தொல்லைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை தேவை என்பதுதான் என்னுடைய விண்ணப்பம்.

அதேபோல், வடசென்னை பகுதியிலே இரண்டு பாலங்கள் நீண்டகாலமாக நிலுவையில் இருக்கின்றன. ஒன்று வியாசர்பாடி பாலம், இன்னொன்று மூலக்கடைப் பாலம். அது அங்கு இருக்கிற எல்லா தொகுதிகளுமே சம்பந்தப்பட்ட மிகப்பெரிய விஷயமாக இருக்கிறது. 100 அடி சாலையையும், தங்க சாலையையும் இணைக்கக்கூடிய பிரதான சாலையிலே அந்த



2011 ஜூன் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

இரண்டு பாலங்களும் நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் மிகப்பெரிய போக்குவரத்து நெருக்கடி அன்றாடம் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் ஏராளமான பொருட்செலவும், அலைச்சலும் ஆகின்றன. ஆகவே, அந்தப் பாலங்களை விரைந்து முடித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே, கடுமையான போக்குவரத்து நெரிசல், அதனால்தான் மோனோ இரயில் விடவேண்டுமென்று அரசு அறிவித்து இருக்கிறது. குறுகிய சாலைகளிலே, குறுகிய வழிகளிலே, குறித்த காலத்திலே அந்தத் திட்டத்தைச் செயலாக்கமுடியும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதைச் செயல்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அதேநேரத்தில், போக்குவரத்துக் கழகங்களை பலப்படுத்துவதுதான் உடனடியாக தமிழக மக்களுடைய இந்தத் தேவையைத் தீர்ப்பதற்கு உதவும். பொதுப் போக்குவரத்தைப் பலப்படுத்தி, நாம் வாகனங்களை முறையாக இயக்கத் தொடங்கினால் தனியார் வாகனங்கள் குறையும். மோட்டார் பைக் போன்ற personalized vehicles குறையும். அது சுற்றுச்சூழலுக்கு உதவிகரமாக அமையும். இன்றைக்கு இருக்கிற பெட்ரோல், டீசல் போன்ற பிரச்சினையைத் தீர்க்க உதவும். ஆக, பொதுப் போக்குவரத்து மிக வலுவாக இருந்த சென்னை நகரத்தில் மீண்டும் மிக வலுவாகப் பொதுப் போக்குவரத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும். அதேபோல், மோனோ இரயில் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட வேண்டுமென்பது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

தமிழ் வளர்ச்சி என்று சொல்கிறபோது, சென்னை நகரத்திலே இருக்கின்ற தமிழ்வழி பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற மாணவர்கள் கல்லூரிகளில் சீட் கேட்டு வருகிறபோது ஆங்கில வழிக் கல்வியைக் கேட்கிறார்கள். இங்கே இடமில்லை அங்கே போங்கள் என்று சொல்கிறார்கள். தமிழ்வழிக் கல்வி பயின்றால் வேலை கிடைக்காது என்று சொல்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக்காக இங்கே நாம் சொல்லியிருக்கக்கூடிய அந்தத் திட்டத்தோடு இணைத்து நான் சொல்லவிரும்புவது என்னவென்றால், தமிழ் வளர மிக முக்கியமான ஒரு நிபந்தனை, தமிழ்வழிக் கல்வி பயின்றவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அளித்து,

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 10

அரசு வேலை கிடைக்கும் என்பதை நாம் கறாராக அறிவித்து அமல்படுத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதேபோல், Home Science., B.Ed., முடித்த பெண்களுக்கு அறிவியல் ஆசிரியர் பணியும், தனியார் Nursing Centre–ல் பயிற்சி முடித்த பெண்களுக்கு அரசுப் பணியும் வழங்க அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் பெரிய கால்வாய் ஒன்று இருக்கிறது. மழை பெய்தால் அந்தக் கால்வாயிலிருந்து தண்ணீர் மேலேறி வந்து, கால்வாயைவிட பள்ளமாக இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேர் வாழக்கூடிய கொடுங்கையூர் பகுதி முழுவதும் இடுப்புத் தண்ணீரில் மிதக்கின்ற நிலைமை பல ஆண்டுகளாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கால்வாயின் கைப்பிடிச் சுவரை 300 மீட்டர் நீளத்திற்கு கிட்டத்தட்ட 3 அடி உயரம் அளவுக்கு உயர்த்திக் கட்டிவிட்டால்போதும், வரும் மழைக் காலங்களிலிருந்தே அப்பகுதி மக்களைக் காப்பாற்றிவிட முடியும். என்னைப் பார்க்கின்ற போதெல்லாம், “இந்த ஆண்டும் நாங்கள் படகு வைக்க வேண்டுமா” என்று கேட்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசும், மாநகராட்சியும் இந்த மழைக்குள்ளாகவே அந்த கைப்பிடிச் சுவரைக் கட்டி முடித்தால் அந்தப் பகுதி மக்களை நாம் காப்பாற்றியதாக அமையும் என்று கேட்டுக்கொண்டு, இந்தக் குப்பைமேடு பிரச்சினைக்கும் ஒரு முடிவு கட்டவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

***டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறை ஒன்று, இனம் இரண்டு, தமிழ் மூன்று, திசை நான்கு, புலன் ஐந்து, சுவை ஆறு, சுரம் ஏழு என்று வகுத்து வாழுகிற தமிழ் இனத்தினுடைய அடையாளமாக; அங்கீகாரமாக; முகமாக; முகவரியாகத் திகழுகிற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே!



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

(மேசையைத் தட்டும் ஒலி) “வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசிவரை புரட்சித் தலைவிதான்” என்று (மேசையைத் தட்டும் ஒலி) வாழுகிற இந்த எளிய தொண்டன், தங்கள் பாதையில் பயணிக்கிற இந்த எளிய தொண்டனுக்கு அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கிய இதய தெய்வமே! எங்கள் அன்னைத் தமிழே! பணிவோடு வணங்குகிறேன்.

அருப்புக்கோட்டை தொகுதிவாழ் மக்களுக்கு, வாக்காளப் பெருமக்களுக்கு என் வாழ்வின் இறுதிவரை இதயமார்ந்த நன்றியைச் செலுத்துவேன்.

“எங்கெங்குக் காணினும் சக்தியடா— தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா!—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா!—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வதை கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!
காளை ஒருவன் கவிச் சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அன்னை
நேர்படுவாள் உன்றன் தோளிலே”

என்று அன்னை சக்தியைப்பற்றி சிலாகித்துப் பேசுவான் பாவேந்தன் பாரதிதாசன்.

அந்த அன்னை சக்தியாக, எங்கள் ஆதி சக்தியாக, தீய சக்தியை விரட்டி அடித்த திராவிடச் சக்தியாக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊனில், உதிரத்தில், உணர்வில், உயிரில் கலந்திட்ட இதய தெய்வமே! செந்தமிழே! நறுந்தேனே! செயலினை, மூச்சினை உங்களுக்கு அளித்தேனே! நீங்கள் நைந்தாயினிலே எங்கள் வாழ்வு நைந்துப்போகும். நன்னிலை உங்களுக்கு எனில், அது

எங்களுக்கும் தானே என்று வாழுகிற நற்றமிழே! காலம் வழங்கிய நன்கொடையே! புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தந்த நற்செய்தியே! நம்பிக்கையே! நான்காம் தமிழே! வணக்கம்.

தோளில் விழுந்த தோகை மயிலாய், கோளில் சிறந்த குளிர்சாய் திங்களாய், முறுக்கு உடைந்து மணக்கும் மலராய், சிறகினில் தத்தும் செங்கால் அன்னமாய், அமுதம் மொழிபகர் அழகின் பிம்பமாய், குமுதம் மலர்விழி கமழும் கருங்குழல் வாழும் எளியாய், வசந்தம் பொழிலாய் வாழும் எங்கள் இதய தெய்வமே! எங்கள் அன்னையே! இந்தச் சிறியவன், எளியவன், பச்சையப்பன் கல்லூரியில் படிக்கின்ற காலந்தொட்டே கால் நூற்றாண்டுக் காலமாய் உங்கள் பாதையில் தடம் மாறாமல், தடுமாறாமல், சோர்ந்து போகாமல், சோரம் போகாமல் உங்களோடு பயணித்து வருகிறேன்.

1989—ல் தலைமைக் கழகத்தினுடைய சொற்பொழிவாளராகவும், 1997—லிருந்து 2007 வரை பத்தாண்டு காலம் கழக இலக்கிய அணியினுடைய துணைச் செயலாளராகவும், 2007 முதல் இன்றுவரை ஏறக்குறைய ஐந்தாண்டுக் காலம் தலைமைக் கழக நிர்வாகியாகவும், கழக இலக்கிய அணிச் செயலாளராகவும், திருச்சி மாநகர், திருச்சி புறநகர், பெரம்பலூர் மாவட்ட கழகங்களினுடைய பொறுப்பாளராகவும், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவில், செயற்குழுவில் தீர்மானங்களை வாசிக்கக்கூடிய பல அரிய சந்தர்ப்பத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிற ஒரு நல்ல வாய்ப்பை இந்த எளியவனுக்கு வழங்கியிருக்கிற இதய தெய்வமே! வள்ளலின் வாரிசே; மனிதநேயம், மானுடப்பற்று, கருணை, காருண்யமிக்கதொரு இதய தெய்வத்திற்கு என்றென்றும் இயக்கத்தின் இதயத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றிதனை நான் காணிக்கையாக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது சொந்த ஊர் திருமங்கலம் தொகுதியில் வருகிறது. நான் வசிக்கிற சென்னையோ மயிலாப்பூர் தொகுதியில் வருகிறது. எனக்கு சட்டமன்றத்தில் போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமா அல்லது மேல் மாடத்திலிருந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம்தான் அமையுமா என்று ஏங்கித் திரிந்த வேளையில், இதய தெய்வம், கருணையோடு, தாய் உள்ளத்தோடு "இல்லை தம்பி, நீ அருப்புக்கோட்டைக்குச் செல், அங்கு ஒரு தீய சக்தியை தோற்கடித்துவிட்டு வா" *(மேசையைத் தட்டும் ஒலி)*





அருப்புக்கோட்டைக்குச் சென்று நாம் சென்னைக் கோட்டையில் சந்திப்போம் என்று சொன்ன அந்த ராஜதந்திரத்தை, சாணக்கியத்தனத்தை, அர்த்தசாஸ்த்திரத்திற்கே அர்த்தம் சொல்லுகிற ஒரு வேதப் புத்தகத்தை தலைவணங்குகிறேன், தாழ் வணங்குகிறேன் அம்மா! நன்றி சொல்ல நான் கற்ற தமிழால் வார்த்தையைத் தேடுகிறேன், கிடைக்கவில்லை அம்மா! திருவாசகத்திலே மாணிக்கவாசகர் இறைவனை இறைஞ்சி, கண்ணீர் மல்க கசிந்து உருகுவானே அதைப்போல நான் வார்த்தைகளைத் தேடுகிறேன்.

"சிரிப்பார் தெளிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம்பலத் தாடுந் தலைவா"

என்று திருவாசகத்திலே மாணிக்கவாசகர் இறைவனைப் பார்த்து,

"தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

என்று இறைஞ்சுவானே, அதைப்போல நான் கற்ற தமிழில் நன்றி சொல்ல வார்த்தையைத் தேடுகிறேன்.

*முற்பகல் 11—10*

திருமங்கை ஆழ்வார் சொல்லுவாரே,

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்"

என்று, திருமங்கை ஆழ்வார் சொல்லுவதைப்போல, பெற்ற தாயினும் ஆயின செய்யும் மாண்புமிகு மாட்சிமைமிக்க தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளை நான் கற்ற தமிழால்

தேடுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அம்மா, வார்த்தைகள் கிடைக்கவில்லை அம்மா! ஆகவே, நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை என்ற காரணத்தினால் தங்கள் பாதங்களை என் கண்ணீரால் நனைக்கின்றேன், அதை செந்நீரால் துடைக்கின்றேன் அம்மா, நன்றியோடு வணங்குகின்றேன்.

மேதகு ஆளுநர் உரை தமிழ்நாட்டிற்குக் கிடைத்திட்ட மிகப் பெரிய பொக்கிஷமாகத் திகழ்கிறது. தாலிக்குத் தங்கம் வழங்கிய எங்கள் தங்கமே! நீங்கள்தான் ஏழைகளினுடைய அங்கம், எதிரிகளுக்குச் சிங்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு காலத்திலே கடந்த ஆட்சியாளர்கள் சொன்னார்கள், 'தாலிக்குத் தங்கம் இல்லை, தாளிக்க வெங்காயம் இல்லை' என்று சொன்னவர்கள் எங்கே போயிருக்கிறார்கள் என்பது கடந்தகால வரலாறு. ஆனால், ஏழை எளிய மக்களுக்குத் தாலிக்குத் தங்கம் தந்து ஏழைகளினுடைய கண்ணீரைத் துடைத்த மகத்தான தலைவியாக, மாதரசியாக, தமிழ் இனத்தினுடைய அடையாளமாக விளங்குகிற ஒப்பற்ற தலைவி, தமிழ்நாட்டினுடைய மாட்சிமை தங்கிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நாடே நன்றியோடு நினைவுகூறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த ஆளுநர் உரையில் சட்டம்—ஒழுங்கு பாதுகாப்பு என்ற மகத்தான அம்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சட்டம்—ஒழுங்கு என்று சொன்னால், அதற்குச் சரியான முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று தமிழ்நாடு மாத்திரமல்ல, இந்தியா மாத்திரமல்ல, ஒட்டுமொத்த உலகத் தமிழினமே பாராட்டுகிற அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒரு காரிலே பயணம் மேற்கொள்கிறபோது, ஒருவர் இரத்த வெள்ளத்திலே என் காரை மறித்து உதவி கேட்டார் கடந்த ஆட்சியிலே. இரத்த வெள்ளத்திலே இப்படி அடித்துப் போட்டிருக்கிறார்களே ஐயா, உங்களை யார் ஐயா அடித்தது, உடனடியாக நீங்கள் காவல் நிலையத்திற்குப் போய் புகார் கொடுக்கலாமே என்று நான் அவரிடத்திலே சொன்னேன். காவல் அதிகாரிகளிடத்திலே முறையிடுங்கள், இதற்கு ஒரு நீதி கிடைக்கும் என்று சொன்னேன். அவர் சொன்னார், ஐயா, என்னை அடித்ததே அந்தக் காவல் துறை அதிகாரிகள்தான் ஐயா என்று சொன்னார். அடித்ததே காவல் துறை அதிகாரிகளா? அப்படியானால், நீங்கள் உடனடியாக நீதிமன்றத்திற்குப் போங்கள்,





நீதிபதிகள் இருக்கிறார்கள், நீதிபதிகள் உங்களுக்கு நீதியைத் தருவார்கள் என்று சொன்னேன். அப்போது அவர் சொன்னார், ஐயா அந்த நீதிபதியே நான்தான் ஐயா என்று சொன்னார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படி கடந்த ஆட்சியிலே காவல் துறை அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு இல்லை, நீதிபதிகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்கிற அவலம் இருந்தது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் திகழ்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனவுடன் சட்டம்—ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* குக்கிராமத்திலே இருக்கிற ஏழை தாய்மார்கள்கூட சொல்கிறார்கள்,

காவல் துறை அதிகாரி, ஒரு காவல் துறை ஆய்வாளர் பட்டப் பகலிலே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டபோது, அதை இரண்டு மாண்புமிகுக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நிகழ்வை யாரும் மறந்திருக்க முடியாது. ஒரு சாதாரண கவிஞன் மிக அழகாகச் சொன்னான், எங்கள் ஊர் எம்.எல்.ஏ.—வை நாங்கள் மந்திரியாக்கினோம், ஆனால், மந்திரியை மனிதனாக்க முடியவில்லை என்று சொன்னான். ஆக, அப்படிப்பட்ட முன்னாள் மாண்புமிகுக்கள் இருந்திருப்பதை கடந்த கால நிகழ்ச்சிகளெல்லாம் நமக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த நிகழ்வுகளெல்லாம் தற்போது இல்லை என்கிற அளவுக்கு காவல் துறையைச் செம்மாந்த சிறப்போடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கடந்த ஆட்சியிலே மிகப் பெரிய படுகொலைகள், பட்டப்பகலில் திருட்டு, ஒரு பெண் தனியாக இருக்க முடியாது என்கிற சூழ்நிலைகளெல்லாம் நிலவின. அதைவிடக் கொடுமை; தருமபுரி மாவட்டத்தில், அதியமான்கோட்டையிலே காவல் நிலையத்திற்குள்ளேயே துப்பாக்கி களவு போகிறது என்று சொன்னால், எவ்வளவு பெரிய அநியாயம்? ஒரு காவல் நிலையத்திற்குள்ளேயே துப்பாக்கி களவு போனது. அதுவும், துப்பாக்கி எப்படி களவு போனது என்று துருவி விசாரித்தால், கத்தியைக் காட்டி துப்பாக்கியை எடுத்துப் போயிருக்கிறார்கள். நான்கூடக் கேட்டேன்; "சார், கத்தி பெரியதா; துப்பாக்கி பெரியதா; களவு போயிருக்கிறதே?" என்று கேட்டேன். அவர்கள் அந்த *5*

ஆண்டுக் காலத்திலே நடந்த வேடிக்கையைச் சொன்னார்கள். "சார், துப்பாக்கிதான் பெரியது; ஆனால், அது சுடுமா, இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது; அதைப் பயன்படுத்தியதே இல்லை" என்று சொன்னார்கள். "அப்படியென்றால், சுடாத துப்பாக்கியை எதற்காக வைத்திருக்கிறீர்கள் ஐயா" என்று கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள்; "ஆயுத பூஜை வந்தால், எந்த ஆயுதத்தை வைத்து நாங்கள் பூஜை பண்ணுவது?" *(சிரிப்பு)* என்று சொன்னார்கள். இப்படித்தான் கடந்த காலத்திலே காவல் துறை இருந்தது; காவல் துறையினுடைய செயல்பாடும் இருந்தது. ஆனால், ஒரு கண்ணியமிக்க காவல் துறையாக, ஒரு கண்ணியமிக்க, இலட்சியமிக்க உள் துறையாக, உணர்வுப் பூர்வமாக, தியாகப் பூர்வமாக, அர்ப்பணிப்புப் பூர்வமாக இருக்கிற ஒரு காவல் துறையாக இருக்கும் என்று சொன்னால், அது நம்முடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலக்கட்டத்தில்தான் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று தமிழ்நாடு முழுக்க மக்கள் சொல்கிறார்கள்.

*முற்பகல் 11–15*

அதைப்போல, இங்கே செம்மொழி மாநாடு என்றெல்லாம் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் நடத்திக் காட்டினார். தமிழைச் செம்மொழியாகக் கொண்டு வருவேன்; செம்மொழியைக் கொண்டு வருவேன் என்று 40 வருட காலமாகச் சொல்லிக் கொண்டிருந்தவர், கடைசியிலே கொண்டுவந்தது கனிமொழியைத்தானே தவிர, கொண்டு வந்தது செம்மொழியை அல்ல என்பது ஊருக்கும் தெரியும்; உலகத்திற்கும் தெரியும்.

ஊர் ஊராக எல்லோருக்கும் டி.வி. கொடுத்தேன் என்று சொன்னார்கள். ஆனால், "தன்வினை தன்னைச் சுடும்" என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதைப்போல, "திகார் சிறையிலே இருக்கிற கனிமொழிக்கு டி.வி. கொடுக்கப்படும்" என்ற ஒரு செய்தியைப் பார்த்தபோது, பாவம்! ஊருக்கெல்லாம் டி.வி. கொடுத்தவர்கள், அவர்களுக்குள்ளே டி.வி.–யை வாங்கிக் கொண்டார்கள் என்று ஒரு நகைப்புத்தான் வந்தது என்று ஒரு பத்திரிகைச் செய்தி வந்தது. இனி அவர்கள் எப்படி சென்னை சங்கமத்தை நடத்துவார்கள்? டெல்லியிலேதான், திகாரில்தான் சென்னை சங்கமத்தை நடத்த வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.





"தமிழுக்கு உண்மையாகத் தொண்டூழியம் செய்தவர் யார்?" என்று கேட்டால், திராவிட இயக்கத்தின் பேராசான் பேரறிஞர் அண்ணா அவர்கள்; அதற்குப் பிறகு அண்ணாவினுடைய கொள்கை நீர்த்துப் போகாமல், ஏழையெளியவர்களின்பால் பற்றும் பாசமும், அவாவும் வைத்திருந்தவர் மனித தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள். பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆருக்குப் பிறகு, சாதாரணமானவன்கூட, சாமான்யன்கூட, என்னைப் போன்ற எளியவன், சிறியவன்கூட சட்டமன்றத்திற்குள்ளே நுழைய முடியும் என்கிற ஒரு நம்பிக்கைக் கதவைத் திறந்து வைத்த பெருமை *(மேசையைத் தட்டும் ஒலி)* யமுனை நதிக் கரையில் பாராளுமன்றத்தின் படிக்கட்டுகளில், அத்தாணி மண்டபத்திற்குள்ளே நுழைந்து, தங்கள் கருத்துகளை, ஏழையெளியவர்களுடைய கருத்துகளை, நான்கு திக்குகளிலும், எட்டுத் திசைகளிலும் எடுத்து வைக்கலாம் என்கிற பெருமையைப் பறைசாற்றிய பெருமை, ஒப்பற்ற தலைவி, திராவிட சக்தியாக விளங்குகிற நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

இரண்டாவது, உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டினார் பெருந்தகை பேரறிஞர் அண்ணா. அவர் தமிழ் உரிமையை, தமிழ் வளத்தை, பெருமைகளையெல்லாம் பேசுவதற்கு தகுதியும், மிகுதியும் படைத்தவர். அதைப்போல, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை அங்கயற்கண்ணி குடியிருக்கிற மதுரையம்பதியில் நடத்திக் காட்டினார் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, எட்டாத உயரத்திற்குத் தமிழைக் கொண்டு சென்ற நான்காம் தமிழாக வாழ்கிறவர் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

செம்மொழி மாநாடு நடத்துவதற்கு இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? செம்மொழி மாநாடு நடத்தி, அங்கொரு கூட்டத்தைக் கூட்டி, வெட்டியான கட்சிக்காரர்களும், அங்கிருக்கிறவர்களையும், அவர்களுடைய அடிவருடிகளையும் வைத்துக்கொண்டுதான் செம்மொழி மாநாட்டை

நடத்தினார்களேதவிர, உள்ளன்போடு அவர்கள் நடத்தவில்லை. வெளிநாட்டுப் பார்வையாளர்களெல்லாம் வந்து பார்த்தபோது, "என்னய்யா! செம்மொழி மாநாட்டின் முதல் வரிசையிலிருந்து பத்து வரிசை வரைக்கும், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் குடும்பத்தைச் சார்ந்தவர்களே உட்கார்ந்திருக்கிறார்களே? பத்து வரிசையில், ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்டவர்களும் குடும்ப உறுப்பினர்களா?" என்று அவர்கள் யோசித்து, யோசித்து, அவர்கள் குடும்பத்தைப் பற்றித்தான் ஆய்வு செய்தார்கள். செம்மொழியைப் பற்றி அவர்கள் ஆய்வு செய்யவில்லை; அவர்கள் குடும்பத்தைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஏன் தெரியுமா? அவர்கள் சொன்னார்கள், ஒருவேளை இங்கே தமிழ்நாட்டிலே குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை சரியாகச் செயல்படவில்லையோ என்கிற நிலையில்தான், கருணாநிதியின் குடும்பம் ஒட்டுமொத்தமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அவலத்தை, செம்மொழி மாநாடு என்கிற ஒரு கேலிக் கூத்தை நடத்திக் காட்டினார்கள்.

"ஓங்கலிடை பிறந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
வீங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்று தமிழாய் வாழ்கிறவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*முற்பகல் 11–20*

"கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறன்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை வாழ்த்திப் பேசுவாரே, அந்த மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையினுடைய தமிழாக வாழ்கிறவர், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக விளங்குகிற ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தைத் தூக்கி நிறுத்துகிற ஒப்பற்ற தலைவி



புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், தமிழைப்பற்றிப் பேசுவதற்குத் தகுதியுடையவர்.

"நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!"

என்று சிலாகிப்பானே பாவேந்தன், அக்கவிஞர் கண்ட தமிழைப் போற்றி அதை ஓங்கி வளர்த்த பெருமை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

"மனதி லுறுதி வேண்டும்;
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்;
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்;
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமு மின்பமும் வேண்டும்;
தரணியிலே பெருமை வேண்டும்"

என்று பேசுகிற புதுமைப் பெண்ணாகத் திகழ்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் அந்த தமிழினுடைய பெருமைகளைப் பேசுகிற தகுதி இருக்கிறது; தார்மீக உரிமை இருக்கிறது. ஆகவேதான், இந்த ஆளுநர் உரையிலே தமிழ்மொழியினுடைய தொன்மையையும், தமிழ்மொழியினுடைய பெருமையையும் மற்ற மொழியினரும் உணர்ந்து போற்றத்தக்கவகையில், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் மற்றும் புகழ்பெற்ற தமிழ்நூல்களை ஆங்கிலம், சீனம், அரேபியம் மற்றும் உலகத்தில் அதிகம் பேசப்படும் ஏனைய மொழிகளிலும் மொழிப் பெயர்ப்பு செய்யப்பட்டு, இணையதளத்தில் இடம்பெறச் செய்து, நமது தமிழ்மொழியினுடைய பெருமையை உலகமெல்லாம் பரவ வழிவகை செய்யப்படும், கணினிவழி தமிழின் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தனித்தன்மை இழந்த தமிழ் பல்கலைக்கழகத்தை மற்றும் அதன்

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

தொடர்புடைய நிறுவனங்களை மீட்டெடுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதைவிட மிக முக்கியமான விஷயம், தமிழ்மொழியை இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவும், நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தவும், மத்திய அரசை புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு வலியுறுத்துகிறது என்று சொன்னால், இதைவிட ஒரு மகத்தான பேறு இந்தத் தமிழகத்தில் கிடைத்திருக்குமா? ஒரு தமிழ்மொழியைப் போற்றி பாதுகாப்பதற்கும், தமிழ்மொழியை உணர்வுப்பூர்வமாக, நேசிப்பதற்குரிய ஒரு மகத்தான தலைவர் பேரறிஞர் அண்ணா; அவர்களுக்குப் பிறகு, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.—க்கு பிறகு தகுதியும், மிகுதியும், தார்மீக உரிமையும் படைத்த ஒரே தமிழ் இனத்தினுடைய அடையாளமாகத் திகழ்கிறவர் தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

சிலபேர் தமிழுக்குத் தொண்டாற்றினேன் என்று சொல்வார்கள். தண்டவாளத்தில் தலை வைத்தேன் என்று சொல்வார்கள். அதைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் தண்டவாளத்திலே 3—வது பிளாட்பாரத்திலே தலை வைத்தார். Train வந்தது 4—வது பிளாட்பாரத்தில். இதுதான் நடந்ததேதவிர, அவர் பிளாட்பாரத்திலே தலை வைத்தேன், தலை வைத்தேன் என்று சொல்லிக் கொண்டிருப்பார். இதுதான் நடந்தது. ஆக, தமிழுக்கு எதுவும் செய்யாத ஒரு குடும்பம், தமிழை வைத்துப் பிழைத்தது என்று சொன்னால், அதுதான் உண்மை. ஒரு மொழியை வைத்துப் பிழைத்தது உலகத்தில் ஒரேயொரு குடும்பம் என்று சொன்னால், தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியினுடைய குடும்பம்தான். அப்படிப்பட்டவர்கள் தமிழைப்பற்றிப் பேசுவதற்கு அருகதையற்றவர்கள். தமிழினுடைய பெருமைகளை, தமிழருடைய அடையாளத்தை, தமிழினுடைய சிறப்பை, தமிழினுடைய தொன்மையை, அதன் பாரம்பரியமிக்க பெருமையை, பண்பாட்டை, கலாச்சாரத்தைத் தூக்கி நிறுத்துகிற ஒரே அடையாளம் பாரதி கண்ட புதுமைப் பெண், தமிழ் இனத்தினுடைய பேரொளி, இன்று ஈழத் தமிழர்களைக் கட்டிக் காப்பாற்றுவதற்காக, அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக, எத்தனை கண்கள் அழுதாலும் துடைக்கின்ற



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

கரம் அம்மாவின் கரமாக இருக்கும் என்பதற்கு அடையாளமாகத் திகழ்கிறவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

ஒரு அப்பழுக்கற்ற தலைவி, உண்மையை நேசிக்கின்ற ஒரு தலைவி, ஒரு தபோவனத்து பர்ணசாலையில் வசிக்கின்ற ஒரு முனிவனைப்போன்ற, எண்ணங்களைத் தூய்மையாக வைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய ஒரு மகா சக்தி படைத்திருக்கிற தலைவியாக நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருப்பது மகத்தான பேர். அதைத்தான் மக்கள் செல்வாக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கு சென்றாலும் தேர்தல் காலகட்டத்தில் எப்போதும்——ஆனால், தற்போது எங்கு சென்றாலும் இலட்சக்கணக்கான கூட்டம் அவரைப் பார்ப்பதற்கு சாரை, சாரையாக வந்துகொண்டிருக்கிற காட்சியைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனார்கள்.

*முற்பகல் 11—25*

அதைத்தான் திராவிட இயக்கத்தின் பேராசான் அண்ணா சொல்லுவார்;

"Dear brother, Go to the people, Live among them, learn from them, serve them, love them, start with what they know. Build with what they have" என்று மிகப்பெரிய புகழாரம் சூட்டுவார். Imitation is the highest form of appreciation என்று, தன்னைப் போல பேசினால், தன்னைப் போல எழுதினால் அவருக்கு ஒரு பாராட்டுரையும், புகழுரையும் தன்னுடைய பத்திரிகைகள் தன்னைவிட சிறந்து எழுதினாலும் அவருக்கு ஒரு அடையாளத்தைக் கொடுக்கிற ஒரு தலைவர் அண்ணாவைப் போல, மனித நேயம் மிக்க தலைவராக, மகத்தான தலைவராக, பிறர் கண்ணீரைத் துடைக்கின்ற ஒரு தலைவராக, பிறர் பசியைப் பார்த்துத் துடிக்கின்ற ஒரு தலைவராக, பிறர் துயரத்தைக் கண்டு தன் துயரம்போல் பாவிக்கிற ஒரு மகத்தான மனித தெய்வமாக விளங்கிய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரைப்போல, நம்முடைய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்வது ஒரு மகத்தான, நமக்குக் கிடைத்திருக்கிற காலம் வழங்கியிருக்கிற நன்கொடை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு தலைவர்

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

உலக அரசியல் வரலாற்றில் எந்த இயக்கத்திற்கும் கிடைத்திருக்காது. அந்த அளவிற்கு நமக்குக் கிடைத்திருப்பது ஒரு மகத்தான பேறு, தமிழகத்திற்கு முதலமைச்சராக இருப்பது ஒரு மகத்தான பேறு.

தி.மு.க. ஆட்சியில் வளர்ச்சித் திட்டங்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைவிட வரலாற்றின் சுவர்களில் தங்கள் அடையாளங்களைச் செதுக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. நவீனகாலத்தின் தேவையை எதிர்கொள்வதற்காக தலைமைச் செயலகத்திற்கு ஒரு புதிய கட்டடத்தைக் கட்டுவது ஒரு அரசின் இயல்பான பணிகளில் ஒன்று. ஆனால், திரு. கருணாநிதி அதைத் தன் வரலாற்றுச் சாதனையாக கட்டியமைக்கு நினைத்ததுதான் மிகப்பெரிய ஒரு தவறு.

திரு. கருணாநிதியின் ஐம்பது ஆண்டு கால சட்டமன்றச் சேவையை முன்னிட்டு அநியாயமான பணச் செலவைக் கொண்டு இந்தக் கட்டடம் தலைபோகும் வேகத்தில் கட்டப்பட்டது. மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டோம் என்பதைத்தான் இந்த அவசரக் கோலம் நினைவுபடுத்தியது, சுட்டிக்காட்டியது. திரு. கருணாநிதியினுடைய குடும்ப வாரிசுகள் உள்ளிட்ட தி. மு. க. தலைவர்களின் பல பெயர்கள் சட்டமன்றக் கட்டட ஊழலில் அடிபட்டன.

தமிழகம் பாரம்பரியக் கட்டடக் கலைக்குச் சிறப்புப் பெற்றது. திருக்கோயில்களில் கட்டி எழுப்பப்பட்ட மகத்தான பாரம்பரியத்தை நம்முடைய தமிழருடைய தொன்மை, நாகரிகம் பறைசாட்டியது. தஞ்சை கோயில், மீனாட்சி கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கட்டடக் கலைக்குச் சிறப்புப் பெற்றது நம்முடைய தமிழ்நாடு. அந்தக் கட்டடக் கலைக்கு மிகப்பெரிய பெருமையும், பாரம்பரியத்தையும் தொன்மையையும் அடையாளத்தையும் தந்தவர்கள் தமிழர்கள். ரோமாபுரி நாகரிகம், சீன நாகரிகம், மிகப்பெரிய மங்கோலிய நாகரிகம், இந்த நாகரிகத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட நாகரிமாக, தலையாய நாகரிகமாக விளங்கிய ஒரு நாகரிகம்தான் தமிழர் நாகரிகம். தமிழர்களுடைய தொன்மையாக விளங்குகிற அந்தக் கட்டடக் கலையின் தொன்மையைக் கொச்சைப்படுத்திய தி.மு.க.—வினர், வடக்கிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து, கொத்தடிமைகளைப்போல, ஒரு காலனிவாதிகளின் ஆதிக்கத்தைப்போல அந்தக் கட்டடத் தொழிலாளர்களை நசுக்கினார்கள்.



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

கட்டடக் கலைக்குப் பாரம்பரியமாக விளங்குவதைப் போலவா இந்தப் புதிய தலைமைச் செயலகம் இருக்கிறது? ஒரு பன்னாட்டு corporate company—யைப்போல் அல்லவா இருக்கிறது; எவ்வளவு பெரிய அபத்தம்! தமிழக சட்டசபையாகத் திகழ்வதற்கு தகுதியற்றது என்று முதன்முதலில் சொன்ன பெருமை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இப்போது இருக்கிற செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே ஆணை, சேனை, ஆள், அம்பு, கோட்டைக் கொத்தளத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பதாகை பட்டொளி வீசிப் பறக்க இன்று கோலோச்சிக் கொண்டிருக்கிறாரே எங்கள் மனித தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்ன செய்திதான் அவை. (மேசையைத் தட்டும் ஒலி) வட இந்திய ஏழைத் தொழிலாளர்களைக் கேவலமாகச் சுரண்டி, அந்தத் தலைமைச் செயலகம் கட்டுவதற்கு காலனிவாதிகளின் வழிமுறைகளைப் பின்பற்றி, இந்தக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னால், அது மிகையாகாது.

தொழிலாளர்கள் மிருகங்களைப்போல வதைக்கப்பட்டார்கள். அந்த தலைமைச் செயலகத்தை உடனடியாகக் கட்டவேண்டும், உடனடியாகக் கட்டவேண்டுமென்று தொழிலாளர்கள் எல்லாம் வதைக்கப்பட்டார்கள். அவர்களுடைய உழைப்பு சுரண்டப்பட்டது. அதைப்போல கட்டடப் பணிகளின்போது பல விபத்துகள், பல மரணங்கள் எல்லாம் மூடி மறைக்கப்பட்டுவிட்டது புதிய தலைமைச் செயலகத்திலே. அதனால்தான் புரட்சித் தலைவி, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாட்சிமைதங்கிய முதலமைச்சர் அம்மா அவர்கள், நீதி விசாரணைக்கு உட்படுத்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கட்டடத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்பே கலை இயக்குநர் திரு. தோட்டா தரணியை வைத்து ரூ.2 கோடி செலவில் செட்டுப் போட்டு வேறு காட்டினார்கள். வயதாகிப் போனால் பல் கீழே விழுந்துவிட்டால், பல் கட்டுவதைப்போல ஒரு புதிய தலைமைச் செயலகத்திற்கு செட் போட்டு, அதற்கு இந்திய பிரதமரையும் அழைத்து வேடிக்கை காட்டினார்கள் என்று சொன்னால், இதைவிடக் கேவலமான ஒரு முன்னாள் முதலமைச்சரைப் பார்த்திருக்க முடியுமா என்கிற அளவுக்கு ஒட்டுமொத்தத்

தமிழகமும் அவரைப் பார்த்து எள்ளி நகையாடியது. அப்படிப்பட்ட புதிய தலைமைச் செயலகம் தேவையா, இல்லை என்பதை வலியுறுத்தித்தான் இன்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான இந்த புனித ஜார்ஜ் கோட்டை தலைமைச் செயலகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒட்டுமொத்தத் தமிழினமே புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11–30*

உலக அளவிலான தமிழர்கள் கடும் எதிர்ப்புக்கிடையில் குடும்பம் புடைசூழ, கட்சியினர் புடைசூழ மாநாடு நடத்தியது எதற்கு? அதுவும் ஒரு வரலாற்றுப் பெருமைக்குத்தானே? ஒரு வரலாற்றுப் பெருமையைத் தம்பட்டம் அடித்துக்கொள்வதற்குத்தானே? ஒரு வரலாற்றை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக அவசர கோலத்தில் அள்ளித் தெளித்ததுதான் 5 ஆண்டுக் காலம் நடந்த தி. மு. க. ஆட்சியே தவிர, மக்களுக்கான பணிகளில் எந்தவிதமான உத்தரவாதத்தையும் மக்களுக்கான சேவைகளை எந்த விதத்திலும் செய்யாதவர்தான் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள். இன்று சொல்கிறார், கடந்த காலத்தில் ஆட்சி முடிவடைந்த பிறகு சொல்கிறார், “கூடா நட்பு கேடாய் அமையும்” என்று சொல்கிறார். மக்கள் கேட்டார்கள், கூடா நட்பா? அல்லது கூடையில் என்ன பூவா என்று கேட்டார்கள். உடனே கூடையில் என்ன பூவா, கூடா நட்பா, என்று கேட்டு, தேர்தலில் காதில் பூவை வைத்துவிட்டார்கள். அதுதான்சரியாக நடந்தது. ஆக, கூடா நட்பு கேடாய் முடியும் என்பது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம். சூரியனே அஸ்தமித்துப் போய்விட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன் என்பதை முன்னாள் முதலமைச்சர் இப்பொழுது தெரிந்துகொண்டிருக்கிறார். தமிழ் மூன்றெழுத்து, என்றெல்லாம் கவிதை எழுதிக்கொண்டிருந்தவர், இன்று திகார் மூன்றெழுத்து, புகார் மூன்றெழுத்து என்று எழுதக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலைகள்தான் திருவாரூரிலிருந்து திகார் வரைக்கும் போய்விட்டது. இனி எழுந்திருக்க முடியாத நிலைக்கு அவர்கள் கட்சி தள்ளப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தின் கோரப் பிடியில் தமிழ்நாடு சிக்கித் தவித்து, பொருளாதார வளத்தைச் சுரண்டி,



ஒரு குடும்பம் கொழுத்தது என்று சொன்னால், அது மிகையாகாது என்கிற அளவிற்கு அவர்கள் நடந்துகொண்டார்கள்.

இங்கு பேசிய மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். எல்லாத் தொழிலையுமே ஒரே குடும்பமா செய்தது? ஒவ்வொரு தொழிலுக்கும் என்று ஒவ்வொருவர் இருக்கிறார்கள். பத்திரிகை நடத்துவது என்றாலும் அவர்கள்தான்; விமானம் நடத்துவது என்று சொன்னாலும் அவர்கள்தான், டி. வி. சேனல்கள் நடத்த வேண்டும் என்று சொன்னாலும் அவர்கள்தான்; கேபிள் டி. வி. என்று சொன்னாலும் அவர்கள்தான்; சிமென்ட் தொழிற்சாலைகளை நடத்த வேண்டும் என்று சொன்னாலும் அவர்கள்தான்; சினிமா தயாரிக்க வேண்டும் என்று சொன்னாலும் அவர்கள்தான்; நடிக்க வேண்டுமென்று சொன்னாலும் அவர்கள் பேரன்கள்தான். ஆனால் ஒரு விஷயம், கருணாநிதி மாதிரி அவர் குடும்பத்திலே வேறு யாரும் நடிக்க முடியாது. அதுதான் ஒரு சிறப்பு. அந்த அளவிற்கு எல்லாத் தொழில்களையும் தன் பக்கமே வைத்துக்கொண்டிருந்தார்கள். என்ன, சினிமா தியேட்டரிலே பிளாக்கிலே டிக்கட் விற்காத குறைதான். எல்லாத் தொழில்களையும் கருணாநிதி குடும்பமே எடுத்துக்கொண்டது. தமிழ்நாட்டு மக்கள் பார்த்து கதறினார்கள். இப்படியா ஒரு குடும்பம், அடே அப்பா! எத்தனை பேர் இருக்கிறார்கள்? 7½ கோடி மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். எத்தனை பேர் பசியோடும், பட்டினியோடும் இருக்கிறார்கள்.

கடந்த கால ஆட்சியிலே மாபெரும் விலைவாசி உயர்வு. விலைவாசி கூடிக்கொண்டே போனது. அரிசி விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. காரின் விலை குறைந்துகொண்டே வருகிறது, இது என்ன Economic Policy? இது என்ன பொருளாதாரக் கொள்கை? கேட்டார்கள் மக்கள். விமானக் கட்டணம் குறைகிறது, பஸ் கட்டணம் அதிகரிக்கிறது. இது என்ன Economic Policy? இது என்ன பொருளாதாரக் கொள்கை? மாடு வாங்க வேண்டுமென்று வங்கியிலே போய் கடனுதவி கேட்டால், தர மறுக்கிறார்கள், தகுதி இல்லை என்று விவசாயிகளின்மீது மறுதலிக்கிறார்கள். ஆனால், டிராக்டர் வாங்க வேண்டும், கார் வாங்க வேண்டுமென்று சொன்னால், உடனடியாக வங்கியிலே கடனுதவி தருகிறார்கள். மாடு குட்டி

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

போடும், டிராக்டர் குட்டி போடுமா என்பது பொருளாதார மேதைகளுக்குத் தெரியவில்லையே. இதைத்தான் கடந்த 5 ஆண்டுக் காலமாக ஆட்சி நடத்திக்கொண்டு பொருளாதாரத்திலே ஒரு வர்க்கப் போராட்டத்தை நடத்தி சுரண்டிக் கொழுத்தது ஒரு குடும்பம் என்பதைத்தான் மக்கள் பார்த்தார்கள், ஆகவேதான் சரியான பதிலடியைத் தந்து, ஒரு மகத்தான இமாலய வெற்றியை நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தந்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஊரெல்லாம் போய்ச் சொன்னார்கள், தெருவெல்லாம் போய்ச் சொன்னார்கள், தெருத் தெருவாகப் போனார்கள், வீடு வீடாகப் போனார்கள், கட்டுக் கட்டாய் எடுத்துக்கொண்டு போனார்கள், எல்லாவற்றையும் கொடுத்துப் பார்த்தார்கள், எதை எதையோ செய்து பார்த்தார்கள், இலவசங்களை அள்ளி வீசினார்கள், எதை எதையோ செய்து பார்த்தும் கதை நடக்கவில்லை. மெழுகுவர்த்தியாய் உருகி உருகி தியாகம் பண்ணுகிறேன் என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி. உடனடியாக ஒரு சாதாரண சிறுவன் சொன்னான், ஐயா மெழுகுவர்த்தியாய் உருகி உருகி தியாகம் செய்வதாகச் சொல்கிறீர்களே, மெழுகுவர்த்திகூட உருகி உருகி தன் காலடியில் சொத்துச் சேர்க்கிறதே, அப்படித்தான் நீங்களும் சேர்க்கிறீர்களா என்று கேட்டதற்கு பதிலே இல்லை என்கிற அளவிற்கு செய்திகளெல்லாம் வந்தன. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் கடந்த ஆட்சி நடந்தது. ஆனால், இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், ஒரு மங்களகரமான, ஒரு உணர்வுபூர்வமான, ஒரு மங்களாபிஷேகம் செய்வதைப்போல தமிழ்நாட்டு மக்கள் ஆஹா, தமிழ்நாட்டை வறுமைப் பிடியிலிருந்து மீட்டெடுக்க வந்த ஒரு தேவதையைப்போல, ஒரு மகத்தான, மகாசக்தியைப்போல, ஆதி சக்தியைப்போல, அன்னை சக்தியைப்போல திகழ்கிறவர்தான் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*முற்பகல் 11–35*

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு நாதியில்லை. காப்பாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? இல்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, முதல் கூட்டத் தொடரிலே அவர்களுக்குப்



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் விதமாக, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களே பாராட்டுகிறார்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஆஹா! அவரல்லவா தலைவி. உதட்டில் அல்ல, ஒட்டுமொத்த உலகத் தமிழனும் உதட்டில் இதைச் சொல்லவில்லை, உள்ளத்தில் சொல்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கருணையோடு, காருண்யத்தோடு, மனித நேயத்தோடு, மானிடப் பற்றோடு, ஒரு தாய், பெண் இனத்தினுடைய போராளியாக விளங்குகின்ற, பேரொளியாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்திருக்கிறார்களே என்கிற உணர்வை ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை இராணுவத்தில், ஒட்டுமொத்தமான இராணுவ வீரர்களும் சிங்களர்கள்தான். தமிழர்கள் யாருமில்லை. இலங்கை இராணுவத்தில் ஒட்டுமொத்தமாகப் பணியாற்றுகிறவர்கள் சிங்களர்கள்தான். ஆகவேதான், கொல்லப்பட்ட, படுகொலைகள் அனைத்தும் தமிழினப் படுகொலைகள் என்று சொல்கிறார்கள். இப்போது உதவி செய்வதுபோல் நாடகம் நடத்திக் கொண்டால் யார் ஏற்றுக் கொள்வது என்பதற்காகத்தான் இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மகத்தான தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள்.

ஒருவர் என்ன செய்தாராம் என்றால், தன்னுடைய அப்பா, அம்மாவையே கொன்று விட்டு, அப்பா, அம்மா இல்லாத அனாதை, இப்போது உதவி செய்யுங்கள் என்று கேட்டதைப்போல, சிங்கள ஏகாதிபத்தியம் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களை மானபங்கப்படுத்தி, படுதுயரில் ஆழ்த்தி, கண்ணீரில், காயத்தில், வேதனையில், வாழ்க்கையே அற்றுப்போய், நிர்கதியாய் போய், நாதியற்றுப் போய், காப்பாற்றுவதற்கே வழியில்லையே, கூப்பிடு தூரத்திலே இருக்கிற தமிழன் நமக்காக உதவி செய்யவில்லையே, எங்கு போவது, கடல் மார்க்கமாக வெளியில் செல்ல முடியவில்லை, வேறு வழியிலும் செல்ல முடியவில்லை, சாப்பாட்டிற்கு வழியில்லை, பணம் இல்லை, செத்து மடிவதுதான் ஒரே வழியா, பிடித்துக் கொண்டிருந்த உயிரும் போனாலும் பரவாயில்லை, என்று துடித்தெழுந்த தமிழர்களுக்கு துயர் தீர்க்க வந்திருக்கிற மகாசக்தி நம்முடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர் *(மேசையைத் தட்டும் ஒலி)* புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

ஓர் உணர்வு, ஓர் உண்மை, ஓர் உணர்வுப்பூர்வமான உணர்வுகளை தமிழினத்தினுடைய ஈழத் தமிழர்கள் சொல்கிறார்கள். ஆஹா! எத்தனை உணர்வுப்பூர்வமாக. ஒரு தாயாக இருக்கிறபரிவோடு நம்மைக் காப்பாற்றியிருக்கிறார். தமிழினத் தலைவர், தமிழினத் தலைவர் என்று சொல்லி, தமிழா, தமிழா என்று சொல்லி, நம்மை இத்தனை ஆண்டுக் காலம் ஏமாற்றி விட்டாரே என்று அவர்கள் நினைத்து புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஒவ்வொரு வீட்டினரும், உலகத்தின் ஒட்டுமொத்தத் தமிழினமும் அவருடைய புகைப்படத்தை வைத்து நன்றியோடு வணக்கம் செலுத்துகிறார்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட தலைவராக, ஓர் அப்பழுக்கற்ற தலைவராக, அடுத்தவருக்காக உதவி செய்கிற ஒரு தூய்மைமிக்க தலைவராக நமக்குக் கிடைத்திருக்கிறவர்தான் நம்முடைய தமிழ்நாட்டின் மாட்சிமைதங்கிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

எலக்ட்ரானின் ஓட்டத்தைப்போல, எக்ஸ்ரேயின் தனிப் பார்வையைப்போல, பால்முறுவின் புன்முறுவலைப்போல, பாதரசத்தின் பளபளப்பைப்போல, சீனத்தின் பழம் ஞானத்தைப்போல, செந்தமிழின் மந்திரச் சொல்லைப்போல, ஜெயங்கொண்டான் போர்ப் பரணியைப்போல, சிலம்புடையானின் கானல் வரியைப்போல, அருணகிரிநாதரின் தமிழ்ச் சந்தத்தைப்போல, அண்ணாவின் பழகு தமிழைப்போல, தேரழுந்தூர் கம்பனின் கற்பனை வளத்தைப்போல, எம். ஜி. ஆரின் பேரெழிலைப்போல விளங்கி வருகிற வீரம் மிக்க, துணிச்சல் மிக்க பெண்ணாக, ஒரு மகத்தான முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிடைத்திருக்கின்ற காரணத்தினால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழ்நாட்டில் இருக்கிற ஒட்டுமொத்தத் தமிழினமும் காப்பாற்றப்படுகிறது. வேட்டி கட்டிய தமிழன் அவமானப்படுத்தப்பட்டான் டெல்லியிலே, வேட்டி கட்டிப் போனால் டில்லியிலே ஓஹோ இவர்களா! 2ஜி ஸ்பெக்ட்ரம் என்று சொல்லப்படுகிற ஓர் அவல நிலை ஏற்பட்டது. ஆனால், கடந்த 13 ஆம் தேதிக்குப் பிறகு தமிழன் என்று சொன்னால், தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். அப்படிப்பட்ட அஞ்சாத சிங்கம்,



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

என்று சொன்னவன், தன்னை எரித்து, தணலாக எரிந்து, இருட்டு உலகத்திற்கு நெருப்பாகி தானே வெளிச்சத்தைத் தந்தவன், எட்டயபுரத்துப் பாட்டன் பாரதியினுடைய பாட்டு வரிகளுக்கு ஒப்ப, புதுமைப் பெண்ணாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்வதைப் பார்த்து வேட்டி கட்டிய தமிழனுக்கு தமிழ்நாட்டில் மாத்திரம் அல்ல, உலகம் முழுவதும் ஒரு மரியாதை கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வந்த பிறகுதான்.

ஒரு குழந்தை ஒரு பூனைக்கு நெல்மணியைக் கொடுத்துக் கொண்டிருந்ததாம். அம்மா கேட்டாராம், என்னம்மா ஒரு பூனைக்குப்போய் நெல்மணியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறாயே என்று. உடனே அந்தக் குழந்தை பூனை வயிற்றில்தானே கிளி இருக்கிறது என்று சொன்னதாம். அப்படித்தான் சிங்களர்கள், தமிழர்களைக் கொன்று குவித்து விட்டு, நம்மை ஓர் ஏளனப் பார்வை பார்த்துவிட்டு, பக்கத்தில் இருக்கிறவன் பாவம் வராதவன், எதுவும் செய்தாலும் யாரும் தட்டிக் கேட்க முடியாது என்கிற ஒரு நிலையை, உடைத்தெறிந்து, தமிழனுக்கு எந்த மூலைமுடுக்கிலும், தான்சானியாவில் இருந்தாலும் சரி, சீனாவில் இருந்தாலும் சரி, ஆஸ்திரேலியாவில் இருந்தாலும் சரி, சிட்னியிலே இருந்தாலும் சரி, எத்தியோப்பியாவிலே இருந்தாலும் சரி, உலகத்தின் எந்தவொரு மூலைமுடுக்கில், ஓரத்தில் இருந்தாலும், ஒரு தமிழன் அழுகுரல் கேட்டால், துயரம் கேட்டால் துடைக்கின்ற முதல் கரமாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய கரம் இருக்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஒட்டுமொத்தத் தமிழகம், ஒட்டுமொத்த உலகத் தமிழினம் ஏற்று தலைவணங்குகிறது. அப்படிப்பட்ட ஒரு மகத்தான தலைவராக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறார். அப்படிப்பட்ட தலைவியினுடைய பெருமைகள், பல்வேறு சாதனைகள் இந்த மேதகு ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

*முற்பகல் 11–40*

இப்போது மீனவர்களுடைய பிரச்சினைகளை உணர்ந்து, மீன்பிடி தடைக் காலங்களில் ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்த ஒரு மகத்தான தலைவி நம்முடைய முதலலமைச்சர் அவர்கள். உலகிலே பழம்பெரும் நாகரிகங்கள், பழம்பெரும் தொழில்கள் என்று சொன்னால், 5 தொழில்களை பழமையான தொழில்கள் என்று சொல்லலாம். 1) வேட்டையாடுதல், 2) கால்நடை மேய்த்தல் 3) கடல்மேல் சேர்தல், 4) உழவு செய்தல், 5) நாடோடி திரிதல் என்ற இந்த 5 தொழில்கள்தான் உலகத்தினுடைய பழமையான தொழில்கள் என்று ஆய்வாளர்கள், வரலாற்று நிபுணர்கள் எல்லாம் கருத்து ஒப்புவார்கள். அதனுடைய அடிப்படையிலே கடல் மேல் சேர்தல் என்கிற வகையில், அந்த மீன்பிடித் தொழிலாளர்களுக்கு, அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அங்கமாக தடைக் காலங்களிலும் 2,000/– ரூபாய் தருவது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவது என்கிற பெருமையை ஒரு பாதுகாப்பு அரணாகத் தந்தவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அதைப்போல முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் 500/– ரூபாய் அவர்கள் வாங்கிக் கொண்டிருந்ததை ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் காட்டினார்கள். ஒரு சாதாரண கிராமத்திலே போய் ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள் என்றால், 'அடேயப்பா, ஐயா, ரொம்ப நன்றி ஐயா, நன்றாக இருக்கணும், ரொம்ப நன்றாக இருக்கணும், மகராசனாக இருக்கணும்' என்று வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. அஞ்சல் மூலமாகக் கொடுக்கக்கூடிய பணம் எல்லாம் தவறுதலாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து ஒரு வங்கிக் கணக்கை ஏற்படுத்தி, அந்த வங்கியிலே முழு பணமும் போட்டால், முழு பணமும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்கிற ஒரு எண்ணத்தை ஒரு தாய் உணர்வை ஏற்படுத்தித் தந்தவர் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாய்க்குத்தான் தெரியும், ஒரு குடும்பத்திலே எவ்வளவோ கஷ்டம், துயரம் இருந்தாலும்கூட, ஆயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால்கூட அந்தக் குடும்பத்தைச் சரியாக பராமரிப்பதற்கு



2011 ஜூன் 10] [டாக்டர் வைகைச்செல்வன்]

அந்தக் குடும்பத் தலைவிக்குத்தான் தெரியும். அதேபோல தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பெண்ணினத்தினுடைய தலைவியாக விளங்குகிறவர்தான் அடுத்தவர்களுடைய துயரத்தை தன் துயரம்போல ஏற்றுக்கொள்கிற மிகப் பெரிய ஒரு தாயாக விளங்குகிறவர். ஒரு வீட்டிலே குடும்பத் தலைவி ஒருவர் கேட்டார், 'விலைவாசி உயர்வு இவ்வளவு உயர்ந்து கொண்டே இருக்கிறதே, கட்டுப்படியாகவில்லை, என்ன செய்வது, நீங்கள் கொடுக்கிற சம்பளத்தையும் குறைத்துக் கொடுக்கிறீர்கள், எங்களாலே குடும்பம் நடத்த முடியவில்லை' என்று. அப்போது குடும்பத் தலைவர் சொன்னார், 'நீ தினமும் இந்த மாதிரி சொல்லிக்கொண்டிருக்கிறாயே அம்மா, எனக்குக் கொடுக்கிற ஊதியம் இவ்வளவுதான், அதற்குள்ளே நீ குடும்பத்தை நடத்து' என்று சொன்னார். உடனே குடும்பத் தலைவி மறுநாள் அலுவலகம் முடித்து வருகிறபோது தேநீர் எல்லாம் கொடுத்துவிட்டு, 'என்னங்க, உப்பு டப்பாவில் உப்பு இல்லை, எல்லாமே காலியாக இருக்கிறது' என்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன், 3 நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்**: 'காலியாக இந்த மாதிரி இருக்கிறதே, சாப்பிடுவதற்கே ரொம்ப குறைவாக இருக்கிறது, நீங்கள் கொஞ்சம் பணத்தை அதிகமாகக் கொடுக்கலாமே' என்று சொன்னபோது, கணவர் சொன்னார், 'இல்லை, இல்லை என்று சொல்லிப் பழகாதே, எல்லாவற்றையும் இருக்கு, இருக்கு என்று சொல்லிப் பழகு, அப்போதுதான் நல்லது' என்று தப்பித்துவிட்டு போய் விட்டார். மறுநாள் மாலை வந்தது. அலுவலகம் முடித்துவிட்டு கணவர் வந்தார். புத்திசாலியான அந்தக் குடும்பத் தலைவி சொன்னார், ஓஹோ, இருக்கு இருக்கு என்று சொல்லித்தானே பழக வேண்டும், இல்லை, இல்லை என்று சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறாரே என்று சொல்லி, 'வாங்க அத்தான், உப்பு டப்பா காலியாக இருக்கு, பருப்பு டப்பா காலியாக இருக்கு, அரிசி டப்பா காலியாக இருக்கு' (சிரிப்பு) என்று நாகரிகமாக எடுத்துச் சொன்னதாக சங்க இலக்கியக் காலத்திலே ஒரு பாடல் வரி உண்டு.

[டாக்டர் வைகைச்செல்வன்] [2011 ஜூன் 10

"'ஈ'யென இரத்தல் இழிவானது
ஈ' யென மறுத்தல் அதனினும் இழிவானது
கொள்ளெனக் கொடுத்தல் கொடுத்தலில் உயர்வானது
கொள்ளேனென மறுத்தல் அதனினும் உயர்வானது"

என்று ஒரு கொடுத்தலினுடைய பாங்கைப் பற்றியெல்லாம் சங்க இலக்கியப் பாடல் சொல்லும். அதேபோலத்தான் முதியோர் ஓய்வூதியம் என்கிற மகத்தான பணிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்காகத் தந்திருக்கிறார்கள்.

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்காகச் செய்து தர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியில் மருத்துவக் கல்லூரி, ஓர் அரசு கலைக் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் அமைத்துத் தர வேண்டுமென்று தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சரை தாழ்பணிந்து, பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

*முற்பகல் 11—45*

அதேபோல நவீன கைத்தறி தொழிற்நுட்பப் பூங்காவை அமைத்துத் தர வேண்டும். அதைப்போல, நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் தொகையாக தற்போது 400/— ரூபாய் வழங்கப்படுகிறது. அருப்புக்கோட்டையில் இருக்கிற நெசவாளர்கள் மிகவும் துயர்ப்பட்டு, மிகவும் சிரமத்தோடு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு களி உருண்டை செய்து அதைத்தான் காலை உணவாகச் சாப்பிடுவார்கள். மாலை வரைக்கும் அப்படியே இருந்துவிட்டு, மாலையில் 6 மணிக்கு விளக்கு வைத்த பிறகுதான் அவர்கள் அரிசி சாப்பாடு சாப்பிடுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற அந்த ஏழை நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் தொகையைத் தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார், களி சாப்பிடுகிறார்கள் என்று. அது



2011 ஜூன் 10] [திரு. செல்லூர் கா. ராஜூ]

சென்ற ஆட்சியில். இப்பொழுது அம்மா அவர்களின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. 20 கிலோ அரிசி எல்லாக் குடும்பங்களுக்கும் கொடுக்கிறார்கள். 35 கிலோ அரிசியும் கொடுக்கப்படுகிறது. அந்த நிலைமையே மாறிப்போச்சு என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொஞ்சங்கொஞ்சமாக தங்கள் நிலைமைப்பாட்டை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். கபீர்தாசர்கூட சொல்லுவார், ஒவ்வொரு அரிசியிலும் ஒவ்வொருவருடைய பெயர் இருக்குமென்று. ஆனால், அருப்புக்கோட்டை தொகுதியில் மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதும் அரிசி வழங்கப்படும். அரிசி வாங்கிய அத்தனைபேரும் அந்த அரிசியில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பெயர் இருக்கிறது என்று நன்றியோடு நினைத்து பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியத்தை 400/—ரூபாயிலிருந்து 1,000/— ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும். விசைத்தறியாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தரவேண்டும். கைத்தறி கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கு நிலுவையிலுள்ள தள்ளுபடித் தொகையை வழங்கி சங்கங்களை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக தமிழ்நாட்டினுடைய மாட்சிமைதங்கிய முதலமைச்சரைக் கேட்டு, வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 14—வது சட்டமன்றப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பினை நான் பெறுவதற்கு, எனக்கு வாக்களித்து சட்டமன்ற உறுப்பினராக்கிய ரிஷிவந்தியம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது கூட்டணிக் கட்சியின் நண்பர்களுக்கும் தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதலில்

தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று, நாங்கள் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா தி. மு. க. கூட்டணி இந்தத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்க, நம்பிக்கை வைத்து வாக்களித்த, தமிழ்நாட்டு மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆளுநர் உரையில் ஏழை எளிய மக்களுக்கு நேரடியாக பயன்தரக் கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதேநேரத்தில், இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கும் அதே முக்கியத்துவத்தை அளித்து தமிழகத்தை வளமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் என குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதைத்தான் நான் அண்ணா தி. மு. க. அரசு நேர்க்கோட்டில் செல்கிறது என்று குறிப்பிட்டேன். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது அரசு அதிகாரிகள் உண்மையான ஏழைகளுக்கு இவை கிடைக்கச் செய்யும் வகையில் லஞ்சத்திற்கும், ஊழலுக்கும் வழி வகுக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகள் இல்லாத நாடு தமிழ்நாடு என்ற நிலையை உருவாக்குவதே நமது இலட்சியமாகும். வறுமையை முழுமையாக அகற்றுவதே இந்த அரசின் கொள்கை என்றும், குறிப்பாக, குடும்பத்தை மையமாக வைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் என்றும் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். இந்திய அரசும் சரி, திட்டக் கமிஷனும் சரி, இன்னும் ஏழைகள் யார் என்பதையும், ஏழைகளை எப்படித் தீர்மானிப்பது என்பதையும், அதற்கு என்ன அளவுகோல் என்பதையும் இன்றுவரை சரியாக நிர்ணயம் செய்யவில்லை. உச்ச நீதிமன்றமே இந்தக் குறைபாட்டைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்திய அரசு இதற்கு இன்னும் சரியான பதில் அளிக்கவில்லை. ஆகவே, உண்மையில் வறுமைக் கோடு என்ன என்பதையும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களையும் அடையாளம் கண்டுபிடித்து உதவிடும் வகையில் இதுசம்பந்தமாக தமிழ்நாடு அரசு மத்திய அரசைத் தெளிவான முடிவெடுக்க வலியுறுத்த வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் பல நிறைவேற்றினாலும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் பரம





ஏழைகளாகவும் ஆகி வருகின்றனர். இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுமை என்னும் நோய்க்கு வேலைதான் மருந்து. எந்த அளவுக்கு வேலைவாய்ப்பை அதிகப்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு வறுமையை ஒழிக்க முடியும். படித்த மற்றும் படிக்காத இளைஞர்கள் வேலை செய்யத் தயாராக உள்ளனர். குரூப்–1 முதல் நிலைத் தேர்வில் 131 காலி இடங்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பேர் போட்டியிடுகிறார்கள் என்று அண்மையில் செய்தி வந்துள்ளது. அதாவது, ஓர் இடத்திற்கு ஆயிரம் பேர் போட்டியிடுகிறார்கள். அந்த அளவிற்கு படித்த இளைஞர்களிடையே மட்டுமே வேலைவாய்ப்பின்மை பெருகி உள்ளது. இது அல்லாமல் படிக்க இயலாத இலட்சக்கணக்கான இளைஞர்களும் வேலையின்றித் தவிக்கின்றனர். இவர்களிடத்தில் உள்ள திறமையைக் கண்டறிந்து, தொழிற்பயிற்சி அளித்து, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் ஈடுபடுத்த வேண்டியது அவசியமாகும். இதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாராட்டத்தக்கதாகும்.

*முற்பகல் 11–50*

ஏற்கெனவே, கடந்த ஆட்சியில் ஆண்டுக்கு ஐந்து இலட்சம் பேர் வீதம் நான்காண்டுகளில் 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தொழில் கொள்கை அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவை நடைமுறைபடுத்தப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் கவனத்தில்கொள்ள வேண்டுகிறேன்.

எதற்கெடுத்தாலும் அரசிடம் இருந்து தங்களுடைய தேவைகளைப் பெற ஏழை, நடுத்தர மக்கள் பணம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. வருவாய்த் துறையில் சான்றிதழ் பெற வேண்டும் என்றாலும், காவல் துறையில் புகார் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், போக்குவரத்துத் துறையில் லைசென்சுகள் பெற வேண்டும் என்றாலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வேண்டும் என்றாலும், மின்சார சேவையைப் பெறவேண்டும் என்றாலும், இலவச பட்டாக்கள் போன்றவை பெற வேண்டும் என்றாலும்,

இவை போன்ற சாதரண காரியங்களுக்கே ஏழை, எளிய மக்கள் பெரிய தொந்தரவுகளுக்கு ஆளாகின்றனர். புதிதாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசு சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் அரசாங்க நிருவாகத்தில் கீழ்மட்டத்தில் உள்ள இந்த லஞ்சத்தை அறவே தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசின் நலத் திட்டங்கள் உண்மையான ஏழைகளுக்குச் சென்றடைவதில்லை. கடந்த ஆட்சியில் அதிலும் லஞ்சம் தாண்டவமாடியது. இதை உணர்ந்து இன்றைய அரசு வங்கிகள்மூலம் உதவித் தொகை வழங்குவது வரவேற்கத்தக்கது. அங்க அடையாள அட்டைத் திட்டத்தின்மூலம் ஊழலுக்கு இடம் தராமல் உதவிகள் வழங்கவுள்ளது பாராட்டத்தக்கதாகும். அதே நேரத்தில் உண்மையான ஏழைகளை அடையாளம் காண கவனம் செலுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைதி இருந்தால்தான் ஒரு நாடு முன்னேற முடியும். ஆகவே சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படுவது மிக முக்கியமான ஒன்றாகும். அதன்படி, இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே சமூக விரோதிகளை உடனடியாகக் கைது செய்ததன்மூலம் மக்கள் இன்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். ஏற்கெனவே வெளியிலே மட்டுமல்ல, வீடுகளின் உள்ளே இருந்தால்கூட கொலைகளும், கொள்ளைகளும் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. அதன் விளைவாக மக்கள் அச்சத்துடனே வாழ்ந்து வந்தார்கள். பனையூர் இரட்டைக் கொலை வழக்கில் கடந்த அரசு சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னேன். உடனே எனக்கு சம்மன் அனுப்பி மிரட்டினார்கள். இதற்கெல்லாம் பயப்படுபவன் நான் அல்ல. அத்தகைய நிலைமை இன்று இல்லை. குற்றவாளிகள் இன்று பயப்படுகிறார்கள். சட்ட விரோதமாக பயமுறுத்தி பலருடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டுள்ளதை மீட்டு உரியவர்களுக்குத் தருவது சிறந்த நடவடிக்கை ஆகும். காவல் துறையில் அரசியல் தலையீடு இன்றி திறம்பட செயல்பட வழி வகுத்த மாண்புமிகு முதலமைச்சரை மனதாரப் பாராட்டுகிறேன்.

தேவையற்ற சட்டமன்ற மேலவை நீக்கப்படுவதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் ஆதரிக்கிறது. புதிய தலைமைச் செயலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ள முறையும், அதற்கு செலவிடப்பட்ட தொகையும் முறைகேடானவை என்று மக்கள் நினைக்கின்றனர். ஆகவே, அதைப்பற்றி விசாரணை நடத்தி உண்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்த முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் மக்கள் வரிப்பணத்தில் கோடிகளைச் செலவழித்து கட்டப்பட்ட புதிய சட்டமன்றப் பேரவை வீணாகாத வண்ணம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முழுக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





நீர்நிலைகளைச் செப்பனிடுவது, விவசாய மேம்பாட்டிற்கும், உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும் திட்டங்கள் தீட்டுவது, மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது, மதுரை, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி பாதையைத் தொழில் வளர்ச்சிப் பாதையாக ஆக்குவது, கேபிள் டி. வி.—யை அரசுடைமை ஆக்குவது, சாலைகளைச் செப்பனிடுவது, குடிதண்ணீர் மற்றும் கழிப்பிட வசதிகளை மாநகரங்களிலும், புறநகரங்களிலும் சீர்படுத்துவது போன்ற செம்மையான நடவடிக்கைகளை ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பது தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்தவையாகும்.

அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் மருத்துவ சேவைகள் வழங்கும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை மாற்றி அமைப்பது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல், எல்லா கிராமங்களிலும் உள்ள சுகாதார நிலையங்களை மேம்படுத்தி உரிய மருந்துகளை வழங்கியும், மருத்துவர்களையும், செவிலியர்களையும், நியமித்தால்தான் அனைத்து மக்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சை சரியான முறையில் செயல்படுத்தமுடியும்.

ஏற்கெனவே உள்ள குறைபாடுகள் நிறைந்த வீடு கட்டும் திட்டத்தை மாற்றி, சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம் என்று அமைப்பது, கடந்த ஆட்சிக் காலத்தில் சமச்சீர் கல்வித் திட்டத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்கி அனைவருக்கும் சம வாய்ப்பளிக்கும் வகையில் அதைச் சீர்திருத்துவது போன்ற நடவடிக்கைகளை மனதார ஆதரிக்கிறேன். அதைப்போல, 20 கிலோ அரிசி திட்டம், முதியவர்களுக்கும், மீனவர்களுக்கும் உதவித் தொகை உயர்வு, லேப்டாப், ஃபேன், மிக்சி, கிரைண்டர், 4 கிராம் தங்கம் போன்றவை வரவேற்கத்தக்க அம்சங்களாகும்.

[திரு. விஜயகாந்த்] [2011 ஜூன் 10

*முற்பகல் 11—55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளை இந்த அவையின்மூலம் அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பழமை வாய்ந்ததும், மிகவும் பிரசித்தி பெற்றதுமான ஆதி திருவரங்கம் பெருமாள் கோயிலையும், ரிஷிவந்தியத்தில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயிலையும், புதுப்பித்து குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேசமயம், கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஆதி திருவரங்கம் பெருமாள் கோயிலுக்கு தேர் வேண்டும் என்ற மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ரிஷிவந்தியம் தொகுதியில் கிட்டத்தட்ட மொரீஷியஸ் தீவு போன்று கரும்புத் தோட்டங்கள் அதிகமாக உள்ளன. அங்கு கரும்பு விவசாயிகள் விவசாயத்திற்குச் செல்லும்போது, பாம்பு அதிகமாக உள்ளதால் பாம்பு கடித்துவிடுகிறது. பாம்பு கடி சிகிச்சைக்கு உரிய மருந்துகள் அங்கு இல்லை. பாம்புக் கடி மருந்து மூவாயிரம் ரூபாய், நான்காயிரம் ரூபாய், ஐந்தாயிரம் ரூபாய் என்று அதிக விலை உள்ளதால் எல்லோருமே பயந்துகொண்டு அதைச் சரிவர வாங்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு அங்கேயுள்ளது. அதேபோல, நாய்க் கடிக்கும் மருந்து இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அந்தப் பகுதியில் குற்றச்சாட்டு இல்லாதவாறு அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதுபோல் சில இடங்களில் நாய்க் கடி மருந்து இல்லை என்று கேள்விப்பட்டவுடனே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி எல்லா இடங்களிலும் நாய்க் கடி மருந்து கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஜூன் 10]

**திரு. விஜயகாந்த்:** மிக்க நன்றி. எனது தொகுதியில் மாநில நெடுஞ்சாலைகள் 43 கி. மீ., மாவட்ட முக்கிய சாலைகள் 34 கி. மீ., இதர மாவட்ட சாலைகள் 147 கி. மீ. என மொத்தம் 224 கிலோ மீட்டர் நீளம் உள்ளன. இதில் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், இதர மாவட்ட சாலைகள் என அறுபது சதவிகிதத்திற்கும் மேலான சாலைகள், போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இதைப்போலவே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளும், கிராமச் சாலைகளும் 80 சதவிகிதத்திற்கும் மேல் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. மக்கள் போக்குவரத்திற்கு சிரமப்படுவதால் தமிழக அரசு தரமான சாலைகளை அமைத்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ரிஷிவந்தியம் தொகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைக்கூட கடந்த ஆட்சியாளர்கள் சரி செய்யாத காரணத்தால், மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். இந்த நிலையை நிரந்தரமாகப் போக்கிட, சாத்தனூர் அணை அல்லது தென்பெண்ணை ஆற்றிலிருந்து மக்கள் பயன்பெறுகின்ற வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தரும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்கள் சிலவற்றில் செவிலியர்கள் இல்லாத நிலை உள்ளது. இந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதுடன், மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை சுற்றி அதிக கிராமங்கள் இருப்பதாலும், மாதந்தோறும் சராசரியாக 70 பிரசவங்கள் நடைபெறுவதாலும், புறநோயாளிகள் அதிக எண்ணிக்கையில் வருகின்ற காரணத்தாலும், 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தவும், இதேபோல் பகண்டை கூட்டுரோடு மற்றும் புதுப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல கிராமங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படவில்லை. எனவே, சங்கராபுரத்தில் இருந்து ஆர்க்காவடி கிராமத்திற்கு அந்தியூர் வழியாகவும், சங்கராபுரத்தில் இருந்து வேளாணந்தல் கிராமத்திற்கும், சங்கராபுரத்தில் இருந்து திருக்கோவிலூர் வழியாக மாவட்டத் தலைநகரான விழுப்புரத்திற்கும், சங்கராபுரத்தில் இருந்து புளியங்கோட்டைக்கும்,

[திரு. விஜயகாந்த்] [2011 ஜுன் 10

சங்கராபுரத்தில் இருந்து பிரம்மகுண்டம் வழியாக அருளம்பாடிக்கும், திருக்கோவிலூரில் இருந்து அத்தியூர் வழியாக புளியங்கோட்டைக்கும் பேருந்துகளை இயக்கிட நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய காவல் நிலையம், புதுப்பட்டு கிராமத்திலும், புதிய தீயணைப்பு நிலையம், பகண்டை கூட்டுரோட்டிலும், புதிய பேருந்து நிலையங்கள் புதுப்பட்டு மற்றும் பகண்டை கூட்டுரோட்டிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளையை ரிஷிவந்தியத்திலும் ஏற்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்வள ஆதாரத் துறைமூலம், விவசாயிகளின் கனவுத் திட்டமான கொடியனூர் அணைக்கட்டு திட்டத்தை முசுகுந்தா ஆற்றின் குறுக்கே கட்டவேண்டும் எனவும், எனது தொகுதிக்குட்பட்ட அனைத்து ஏரிகளையும் தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், கரையைப் பலப்படுத்தியும், ஏரிகளுக்கு நீர் ஆதாரமாக உள்ள சாத்தனூர் வலதுபுற கால்வாய்களை செப்பனிட்டுத் தருமாறும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ரிஷிவந்தியம் தொகுதியில் உள்ள அரும்பராம்பட்டு—ஆர்க்காவடி, சீர்பாதநல்லூர்—ஆர்க்காவடி, வடபொன்பரப்பி—அருளம்பாடி, பிரம்மகுண்டம்—ராவுத்தநல்லூர் ஆகிய கிராம மக்கள் பயன்பெறுகின்ற வகையில் முசுகுந்தா ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைத்திடவும், சுத்தமலை—பொறசப்பட்டு இடையே பாப்பக்கல் ஓடையில் பாலம் அமைத்திடவும், மணலூர்பேட்டையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலத்தை, நபார்டு திட்டத்தின்மூலம் உயர்மட்டப் பாலமாக அமைத்திட, நடவடிக்கை எடுக்கும்படியும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் *12—00*

ரிஷிவந்தியம் தொகுதியில் மக்கள் மின்வெட்டாலும், அடிக்கடி ஏற்படும் மின்தடையாலும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இந்த நிலையைப் போக்கி ஜி. அரியலூரிலும், மணலூர்பேட்டையிலும், ஈருடையான்பட்டியிலும் துணை மின் நிலையங்களை அமைத்திட உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜுன் 10] [திரு. விஜயகாந்த்]

எந்த ஆட்சியும் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அவர்களுக்குக் கால அவகாசம் தேவை. *1967* இல் அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலாக ஆட்சிக்கு வந்தபோது, அன்றையதினம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடம் அந்த ஆட்சியைப் பற்றி கேட்டபொழுது, ஆறு மாதங்கள் வரை பொறுத்திருக்க வேண்டும் என்றும், அதுவரையில், தான் எதுவும் கூறமாட்டேன் என்றும் தெரிவித்தார். அந்தக் கருத்து அரசியல்வாதிகள் அனைவரும் சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

அரசு நல்ல காரியங்களை செய்கிறபொழுது ஊக்கப்படுத்துவதும், நிர்வாகத்தில் குறைபாடுகள் தென்படுகின்றபொழுது அவற்றைச் சுட்டிக்காட்டுவதுமே ஒரு எதிர்க் கட்சியின் கடமையாகும். அத்தகைய எதிர்க் கட்சியாகவே தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் செயல்படும் என தெரிவித்து, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பில் ஆதரித்து வரவேற்கிறேன். நன்றி. வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தங்களுக்கு எப்படிப்பட்ட ஆட்சி வேண்டும் என்பதைச் சிந்தித்து, அதற்கான செயல்வடிவம் கொடுக்கும் அரசமைப்புதான் ஜனநாயகம் என்று சொன்னால், அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் அதற்குப் பின்னணியாக விளங்குவது மக்கள்தான். அதனால்தான், "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்றார் பேரறிஞர் அண்ணா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் தேர்தலில் தமிழகத்தில் மீண்டும் உண்மையான ஜனநாயகம் மலர தமிழக மக்கள் வழிவகை செய்துள்ளனர். மக்களின் உள்ளக்கிடக்கை இந்தத் தேர்தலில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கிடைத்துள்ள இந்த வெற்றி, ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

மக்கள் சக்தியை முடக்கிவிடலாம் என்ற மமதையில் “தேர்தல் முடிந்து மே மாதத்திற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் இருக்காது” என்று பேட்டி அளித்தார் நாடாளுமன்றத்தில் பதில் அளிக்கவே அஞ்சும் ஒரு மத்திய அமைச்சர். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று அந்த அமைச்சர் இருக்கின்ற இடம் தெரியாத அளவுக்கு, நான் எதிர்க் கட்சித் தலைவராக இங்கே உரையாற்றிய நாட்களில் என்னை பேசவிடாமல் குறுக்கீடுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்த முன்னாள் மைனாரிட்டி தி. மு. க. அரசின் அமைச்சர்கள் இந்த அவையிலேயே நுழைய முடியாத அளவுக்கு மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* தி. மு. க. வின் “பண பலம்”, “படை பலம்”, “அதிகார பலம்” ஆகியவற்றை முற்றிலும் புறக்கணித்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும் வகையில் என்மீதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீதும் நம்பிக்கை வைத்து, கழகத்தின் தலைமையிலான கூட்டணி வேட்பாளர்களை *203* தொகுதிகளில் வெற்றிபெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை *146* தொகுதிகளில் *(மேசையைத் தட்டும் ஒலி)* அமோக வெற்றி பெறச்செய்த என் அன்பிற்கினிய தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* கூட்டணியின் வெற்றிக்காக பாடுபட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், ஆதரவு நல்கிய பல்வேறு அமைப்புகளுக்கும்; எல்லாவற்றிற்கும் மேலாக, கழகத்தின் வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் ரத்தத்தின் ரத்தமான *(மேசையைத் தட்டும் ஒலி)* என் உயிரினும் மேலான எனதருமை கழக உடன்பிறப்புகளுக்கும் என் மனமார்ந்த நன்றியினை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழக மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவும்; *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவும்; விலைவாசியைக் கட்டுப்படுத்தவும்; தமிழ்நாட்டை மீண்டும் அமைதிப் பூங்காவாக



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாற்றவும் அயராது பாடுபடுவேன் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு என் பதிலைத் தொடங்குகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுக் கால மைனாரிட்டி தி. மு. க. ஆட்சியில் மக்கள் பட்ட வேதனைகள் சொல்லி மாளாது. சட்டம்—ஒழுங்கு சீரழிவு, கடுமையான மின்வெட்டு, விண்ணை முட்டும் விலைவாசி, மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை, ரேஷன் பொருட்கள் கடத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், போலி மற்றும் காலாவதியான மருந்து விநியோகம், நில அபகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளில் தமிழக மக்கள் சிக்கித் தவித்தனர். ஒரு குடும்பத்தின் பிடியில் தமிழ்நாடு சிக்கித் தவித்தது.

ஐந்து ஆண்டுக் கால கொடுங்கோல் குடும்ப ஆட்சி ஒழிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களாட்சி மலர்ந்தவுடன் சுதந்திரம் கிடைத்த உணர்வு தமிழக மக்களிடையே எழுந்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏழு வாக்குறுதிகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுவரையில் இல்லாத அளவிற்கு, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கென்று ஒரு தனி அமைச்சகமும் அமைக்கப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே சட்டம்—ஒழுங்கைப் பற்றிப் பேசினார்கள். அதைப் பற்றி சில கருத்துகளை இப்போது தெரிவிக்கிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழக மக்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினை சட்டம்—ஒழுங்கு சீரழிவு. அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக் காடாக மாற்றியதுதான் திரு. கருணாநிதியின் கடந்த ஐந்து ஆண்டுக் கால சாதனை. இதனைச் சீர்செய்யும்

விதமாக சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டவும், நிருவாகத்தைச் செம்மையாக்கவும் ஆளுநர் உரையில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை என்றும், ஸ்காட்லாண்டு யார்டு போன்று உலகில் சிறந்து விளங்கும் காவல் துறைக்கு இணையானது என்றும் பெயர் பெற்று விளங்கியது. அத்தகைய காவல் துறை, கடந்த ஐந்து ஆண்டுகளில் தன்மானம் இழந்து, மனோதிடம் இழந்து, தான் பெற்ற புகழை எல்லாம் இழந்து பரிதாபகரமாகக் காட்சி அளித்ததைத் தமிழ்நாடே நன்கு அறியும்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போதெல்லாம், காவலர்கள் தங்கள் பணிகளில் எத்தகைய குறுக்கீடும், இடையூறும் இல்லாமல் தங்கள் கடமையைச் செவ்வனே செய்வது வாடிக்கை. அப்போதெல்லாம் சமூக விரோதிகள்மீதும், தீவிரவாதிகள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழும் என்பதும் அனைவரும் அறிந்ததே. எனவே, சட்டம்—ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டி மக்கள் எவ்வித பயமும் இன்றி அமைதியாக தங்களது வாழ்க்கையை நடத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் ஏற்கெனவே எடுத்துள்ளேன்.

காவலர்கள் தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் செய்ய வேண்டுமெனில், அவர்களது பணியில் எந்தவிதக் குறுக்கீடும், தலையீடும் இருக்கக்கூடாது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அப்படிப்பட்ட நிலைமை உருவானால்தான், சமூக விரோதிகள் காவலர்களையும், அரசையும் கண்டு அஞ்சும் சூழ்நிலை ஏற்படும் என்பதை உணர்ந்து, அத்தகைய சூழ்நிலையை நான் பொறுப்பேற்ற உடனேயே கொண்டு வந்துள்ளேன் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம்—ஒழுங்கை நிலை நாட்டுதல், குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருதல், குற்றங்கள் நிகழாமல் தடுத்தல் ஆகிய பணிகளைச் செவ்வனே செயல்படுத்த வேண்டுமெனில், தேவையான அளவு காவலர்களின் எண்ணிக்கை இருத்தல் அவசியமாகும். இந்தப் பணிகளைச் செய்ய வேண்டிய காவலர்கள் அதிகாரபூர்வமற்ற முறையில், அதாவது, un-official





ஆக வேறு பணிகளுக்கு அனுப்பப்பட்டால் சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதை காவல் துறை எவ்வாறு செம்மையாகச் செய்ய இயலும்?

முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியின் குடும்பத்தினர் வெளியே செல்லும் போதெல்லாம் பாதுகாப்பிற்காக காவலர்கள் சென்று கொண்டிருந்தால், அதிகாரபூர்வமாக அந்தக் காவல் துறை அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலையை யார் செய்வார்கள்? முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியின் பரந்து விரிந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள், மனைவி, துணைவி, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள் என ஏறக்குறைய 135 பேர் இருக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் அனைவருக்கும் அதிகாரபூர்வமற்ற முறையில் unofficial ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். 135 குடும்பத்தினருக்கும் பாதுகாப்பிற்குக் காவலர்கள் சென்றுவிட்டால், சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டவும், குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் காவலர்கள் எங்கிருந்து வருவார்கள்?

பிற்பகல் 12–10

அதேபோல, மத்திய அமைச்சர் திரு. அழகிரி வீட்டில் unofficial ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அவருக்கு நெருக்கமானவர்களுக்கும், அதாவது, அவருடனேயே சுற்றித் திரியும் சில சமூக விரோதிகளுக்கும் unofficial ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், பல வணிக நிறுவனங்களிலும் தவறான முறையில் பாதுகாப்புப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். மேலும், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணி என்ற போர்வையில், சென்னை மாநகரத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களிலும், மதுரை மாநகரில், அரசியல் பிரமுகர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும், செல்வாக்குடைய தனிப்பட்டோரின் சொந்த நலன் கருதி காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சென்னை போக்குவரத்து காவல் துறை காவலர்கள் அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை சில முக்கியப் பிரமுகர்களின் போக்குவரத்து ஒழுங்குப் பணி என்ற போர்வையில் ஐந்திற்கும் மேற்பட்ட இடங்களிலும், அவற்றிற்கு இடையேயான வழித் தடங்களிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அக்காவலர்கள் திரும்ப அழைக்கப்பட்டு, சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு சீரான போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில், போக்குவரத்துப் பணிகளில் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுவோர், நில ஆக்கிரமிப்பு செய்வோர், கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனையாளர்கள், ரேஷன் பொருட்கள் கடத்துவோர், மணல் கொள்ளையர்கள் போன்றோர் எந்தவித பயமுமின்றி முந்தைய மைனாரிட்டி தி. மு. க. ஆட்சியில் இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள் என்பதை தமிழக மக்கள் அனைவரும் நன்கு அறிவர். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது எவ்வித பாகுபாடும் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் கண்கூடாகப் பார்த்திருப்பீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மாமன்றத்தில் பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்களும் ஒரு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டி இதைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த தி. மு. க. ஆட்சியில் காவலர் முதல் காவல் துறை உயரதிகாரிகள் வரை எங்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது திரு. கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்கள், அன்றைய ஆளும் கட்சியினர், உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோரின் உத்தரவின்பேரில் முடிவு செய்யப்பட்டதால், காவல் துறையினர் மீதான உயரதிகாரிகளின் கட்டுப்பாடும், அரசின் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் கட்டளைக்கிணங்க காவல் துறை நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவையெல்லாம் தற்போது நீக்கப்பட்டுவிட்டன என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சமூக விரோதிகள் சிலர் அரசியல் ஆதரவுடன் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபட்டு, நிலம் மற்றும் சொத்துப் பிரச்சினைகளில் தலையிட்டு, பொதுமக்களிடமிருந்து பணத்தை அபகரித்து வந்தனர். தனது சொத்தை ஒருவர் விற்க நினைத்தால், அந்தச் சொத்தை செல்வாக்குள்ள ஒரு சிலரின் அனுமதியின்றி ஒருவர் வாங்க



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இயலாத நிலை கடந்த மைனாரிட்டி தி. மு. க. ஆட்சியில் இருந்தது. அந்தச் சொத்துகளை செல்வாக்கு மிக்க நபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையையும் மக்கள் நன்கு அறிவார்கள். அவ்வாறு கட்டாயமாக பிடுங்கப்பட்ட சொத்துகளை மீட்பதற்குத்தான் தனிச் சட்டம் கொண்டு வரப்படும் என்று ஆளுநர் உரையிலேயே தெரிவித்துள்ளோம். அந்தச் சட்டம் வெகுவிரைவில் இயற்றப்படும் என்ற உறுதியினை *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

கடந்த ஆட்சியில் நீராதாரம் பாதிக்கும் வகையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, இயந்திரங்கள்மூலம் வரம்பின்றி மணல் அள்ளப்பட்டு, பிற மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டதை யாரும் தட்டிக் கேட்க இயலாத சூழ்நிலை நிலவியது. இவ்வாறு மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டதன் அடிப்படையில், நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு வார காலத்திற்குள்ளாகவே மணல் கொள்ளையில் ஈடுபட்ட 897 பேர்கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள்மீது 810 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

மேலும், மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 112 லாரிகள், 74 டிராக்டர்கள், 4 தானியங்கி பளுதூக்கும் லாரிகள், 2 தானியங்கி பாரமேற்றும் இயந்திரங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

*பிற்பகல் 12–15*

காவல் துறையினர் எவ்வித பாகுபாடுமின்றி சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெற்ற இடத்தில் குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து, அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரவும் முழு மூச்சுடன் செயல்பட ஆரம்பித்துள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காவல் துறையினர் இழந்த பழம் பெருமை, விரைவில் மீட்கப்படும் என்பதையும், தமிழகம் விரைவில் முழு அமைதிப் பூங்காவாக மாறும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறை சூழ்நிலையைப் பற்றி கருத்துத் தெரிவித்தார்கள். கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தின் மின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து, மக்களுக்கு எவ்வளவு நேரம் மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத ஒரு நிலைக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டனர். சென்னை மாநகரில் ஒரு மணி நேரம், மாநிலத்தின் இதர பகுதிகளில் 3 மணி நேரம் மின் தடை என, முந்தைய தி. மு. க. அரசு அறிவித்தது. ஆனால், உண்மையில் அதற்கு மேலும் அறிவிக்கப்படாத மின் தடையாக மேலும் இரண்டு, மூன்று மணி நேரம், எல்லா பகுதிகளிலும் மின் தடை இருந்தது என்பதைத் தமிழக மக்கள் அனைவரும் அறிவர். மேலும், தொழிற்சாலைகளுக்கு 20 சதவீதம் மின் வெட்டும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்ச மின் தேவைக் காலத்தில் 90 சதவீதம் மின் வெட்டும் அமல்படுத்தப்பட்டது. தேவைக்கேற்ப மின் திட்டங்களை ஏற்படுத்தாததும், நிர்வாகச் சீர்கேடுகளும்தான் இவ்வாறு மின் வெட்டு ஏற்பட முக்கிய காரணங்களாகும். கடந்த 5 ஆண்டு முழுமையும் இவற்றையெல்லாம் மறைத்து, முந்தைய எனது ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் தீட்டப்படாததுதான் மின் வெட்டுக்குக் காரணம் என உண்மைக்கு மாறான செய்தியை முந்தைய தி.மு.க. அரசு பரப்பி வந்தது. ஆனால், உண்மை நிலை என்னவென்றால், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், வட சென்னை அருகில் வல்லூரில் ஆயிரம் மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12–7–2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதேபோன்று, தூத்துக்குடியில் ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19–6–2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த இரு மின் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கீடு பெறவும், பல்வேறு அனுமதிகளைப் பெற ஆய்வுகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், வைகைப் படுகையில் உள்ள இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி, வழுதூரில், 95 மெகா வாட் திறன் கொண்ட புதிய எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. 29–9–2004 அன்று இந்த மின் நிலையத்திற்குத் தேவையான எரிவாயுவை வழங்குவதற்கு இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தமும் கையெழுத்தானது. மார்ச் 2006–ல், இதற்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்து ஒப்பந்தமும் வழங்கும் இறுதி நிலையில் இருந்தது.



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வட சென்னை அனல் மின் நிலையத்தில் போதுமான நிலம் இருந்ததால், அங்கு 500 மெகா வாட் திறன்கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12–12–2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

500 மெகா வாட் திறன்கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைத்திடுவதற்கான கருத்துரு அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், முதற்கட்டப் பணிகளான காடுகளின் நில அளவை போன்ற பணிகளை 8–9–2005 அன்று முதல் தொடங்கியது. எனது அரசு மேற்கொண்ட முயற்சிகளை அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த தி. மு. க. அரசு தொடர்ந்திருந்தால், தற்போது மாநிலத்தில் நிலவும் மின் தட்டுப்பாட்டைச் சுலபமாகத் தவிர்த்திருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

குறைந்த விலையில் அதிக மின் உற்பத்தி ஏற்படுத்த பல மாநிலங்களில் 4,000 மெகா வாட் திறனுடைய பிரம்மாண்ட மின் திட்டங்களை அதாவது Ultra Mega Power Project–களை நிறுவுவதற்கு 2006–ல் இந்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்தது. தமிழ்நாட்டிலும், 2 பிரம்மாண்ட மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இத்திட்டங்கள் அமைவதற்கான இடங்களைத் தெரிவு செய்ய முந்தைய தி.மு.க. அரசு காலதாமதம் செய்ததால், இத்திட்டங்கள் இன்னமும் தொடங்கப்பெறாமல் உள்ளன. இந்திய அரசின் தொடர் வலியுறுத்தலின் காரணமாக, 31–3–2008 அன்று அதாவது, கிட்டத்தட்ட ஒன்றரை வருட காலதாமதத்திற்குப் பிறகு செய்யூரில் பிரம்மாண்ட மின் திட்டத்தை நிறுவ தமிழ்நாடு அரசு, அதாவது தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்தது. அப்பொழுதும் தமிழ்நாடு அரசால் captive துறைமுகத்தை உறுதி செய்ய முடியாமல், அதன்பிறகு அக்டோபர் 2009–ல் மட்டுமே முடிவெடுக்க முடிந்தது. எனவே, கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் இந்தக் காரணத்தால் வீணானது. இரண்டாவது இடத்திற்கு இந்திய அரசால் இன்னமும் ஒப்புதல் வழங்கப்படாமல் உள்ளது.

*பிற்பகல் 12–20*

மின் உற்பத்தி நிலையங்களை முந்தைய தி.மு.க. அரசு சரிவர நிருவகிக்காததால், மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான காலக் கட்டத்தில், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நம்முடைய அனல் மின் நிலையங்கள் முறையான பராமரிப்பினாலும், தகுந்த கண்காணிப்பினாலும் மிக நன்றாகச் செயல்பட்டு, மத்திய எரிசக்தித் துறையினுடைய சிறந்த உற்பத்தித் திறனுக்கான தேசிய விருதுகளைப் பெற்றன. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்தில், அதாவது தி.மு க. ஆட்சி காலத்தில் எந்தவிதமான விருதையும் இந்த அனல் மின் நிலையங்கள் பெறவில்லை. 6,000 மெகா வாட்டிற்கும் அதிகமான காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் உள்ளன. ஆனால், அந்த மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான மின் தொடரமைப்பு வசதி இல்லாததால், காற்றாலைகள்மூலம் பெறப்படும் மின்சாரத்தை முழுமையாகப் பெற இயலவில்லை. தேவையான மின் தொடர் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு விரைவில் ஏற்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

பழுதடைந்த நிலையில் உள்ள மின் நிலையங்களை உடனே சரி செய்ய போர்க்கால அடிப்படையில் எனது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜனவரி 2010 முதல் பழுதடைந்த நிலையில் இருந்த வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் இந்த ஜூன் மாதம் மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று, ஓராண்டுக் காலமாக பழுதடைந்த நிலையில் இருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையமும் இந்த மாதம் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதாவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மின் திட்டங்களும் ஓராண்டுக் காலமாக பழுதடைந்த நிலையில் இருந்தும், அவற்றைச் சரிசெய்ய தி. மு. க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டே வார காலத்திற்குள் இவற்றைச் சரி செய்து இவை இரண்டும் இன்று பயன்பாட்டிற்கு வந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய தி. மு. க. அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கடலூர் பவர் கம்பெனி என்கின்ற நிறுவனத்துடன் 1,320 மெகா வாட் அனல் மின் திட்டத்தை நிறுவ 28–9–2006 அன்று மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இத்திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தி முழுமையாக தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.



திறமையற்ற நிருவாக முடிவுகளினாலும், நிலக்கரி வினியோகிக்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பற்ற செயல்களாலும் நிலக்கரி இடப்பெயர்வு மேலாண்மை பாதிக்கப்பட்டது. இதனால் பல நேரங்களில் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாக தூத்துக்குடி, மேட்டூர், வட சென்னை மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,518 மெகா வாட் மின் நிறுவு திறன் கூடுதலாக நிறுவப்பட்டது. ஆனால், முந்தைய தி. மு. க. ஆட்சியில் வெறும் 206 மெகா வாட் மட்டுமே நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. இதேபோன்று, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,595 மெகா வாட் கூடுதல் மின் திட்டங்கள் நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய தி. மு. க. அரசு மின் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக வியாபாரிகளிடமிருந்தும், மின் சந்தையிலிருந்தும், மின் திருப்புதல் முறையிலும், மின் கொள்முதல் செய்து வந்தது. இதில் மின் கொள்முதலுக்காக சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 பைசா வரை செலவிடப்பட்டது. ஆனால், இந்திய மின்சார சட்டம், 2003–ன்படி, நீண்டகால கொள்முதல் முறையான Case 1 bidding மூலம் மின் கொள்முதல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், ஏற்கெனவே மின் கொள்முதல் செய்த விலையில் பாதி விலைக்கே மின் கொள்முதல் செய்திருக்க முடியும்.

தற்போது மாநிலத்தில் நிலவும் மின் பற்றாக்குறை நிலையை மாற்றியமைக்க குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்களின் அடிப்படையில் எனது அரசு பல்வேறு முயற்சிகளை எடுக்கும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, பழுதடைந்த மின் நிலையங்கள் உடனடியாக; சீரமைக்கப்பட்டுள்ளன. குறுகிய கால மற்றும் நீண்டகால மின் கொள்முதல் முறையை இணைத்து இலாபகரமான மற்றும் நிலையான மின் கொள்முதல் கொள்கையை எனது அரசு கடைப்பிடிக்கும். அடுத்த ஐந்தாண்டுகளில் மின் வாரியத்தின் நிறுவு திறன் மேலும் 10,000 மெகா வாட்டிற்கும் அதிகமாக அதிகரிக்க (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது, எனது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக அறிவிக்கப்படாத மின் வெட்டுகள் நிறுத்தப்பட்டுவிட்டன. மேலும், வரும் ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டு 2 மணி நேரமாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) படிப்படியாக, மின் வெட்டே இல்லா மாநிலமாக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழகம் விரைவில் மாறும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில், 2006 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாகத்தான் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் அதிகமான மின் நிறுவு திறனுடன் அதைவிட சுபிட்சமான நிலையை இந்த ஆட்சிக் காலத்தில் அடைவோம் என்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தைப் பற்றி சில உண்மைகளை இங்கே அனைவருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழக சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத் துறைகள் அனைத்தும் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்தே செயல்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டதன் அடிப்படையில், 14–வது சட்டமன்றம் தற்போது புனித ஜார்ஜ் கோட்டையில் செயல்பட்டு வருகின்றது. சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டதற்கு ஒரு சிலர் விமர்சனம் செய்து வருகின்றனர். சட்டமன்றமும், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளும் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள கட்டடத்திற்கு மாற்றி உத்தரவிடப்பட்டது ஏன் என்பதை 20–5–2011 அன்றே ஓர் அறிக்கையின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளேன். எனினும், ஒரு சில அரசியல் கட்சியினர் சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்க வேண்டும் எனவும், அந்தப் புதிய கட்டடம் முந்தைய தி. மு. க. அரசால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால்தான் நான் அதனை மாற்றுவதற்கு உத்தரவிட்டதாக தவறான கருத்தினைத் தெரிவித்துள்ளனர். அரசு நிருவாகத்தில் நான் என்றுமே அரசியலைப் புகுத்தியதில்லை என்பதை நடுநிலையாளர் அனைவரும் ஒப்புக்கொள்வர். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தலைமைச் செயலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுவதை நான் ஒருபோதும் எதிர்த்தது இல்லை. ஆனால், தற்போது கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடத்திலிருந்து பணியாற்றுவதால் நிருவாக குறைபாடு எதுவும் ஏற்படாது என்றால், நான் அங்கிருந்தே பணியாற்றியிருப்பேன். அவ்வாறு இயலாது என்பதால்தான் அங்கிருந்து பணியாற்றுவது நிருவாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதால்தான், சட்டமன்றம் மற்றும் அங்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கே மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

4–7–2007 அன்று பொதுப் பணித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையில், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில், 8 இலட்சம் சதுர அடியில், சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், தலைமைச் செயலாளர் அலுவலகம் மற்றும் பொதுத் துறை, உள் துறை மற்றும் நிதித் துறை முதலிய முக்கிய துறைகளுக்காக 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஓர் அறிவார்ந்த அரசாவது சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம், ஏனைய அமைச்சர் அலுவலகங்கள் மற்றும் 2, 3 துறைகளுக்கு மட்டும் ஒரு புதிய கட்டடத்தை, அதுவும் 2 கிலோ மீட்டர் தொலைவில் கட்டுமா? 200 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்ட இந்த பிளாக் 'A' கட்டடத்திற்கு இன்றைக்கு 600 கோடி ரூபாய்க்கு மேலான செலவுக்கு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

பிளாக் A கட்டடத்தின் மொத்த உட்பரப்பு 97,829 சதுர மீட்டர்கள் ஆகும். அதில், அலுவலக உபயோகத்திற்காகப் பயன்படுத்தக் கூடியது 47,491 சதுர மீட்டர்கள்தான். அதாவது 49 சதவீதத்திற்கும் குறைவான கட்டட உட்பரப்பையே உபயோகப்படுத்த இயலும். ஏனைய கட்டடப் பரப்பு எல்லாம் சுற்றுப் பாதை, நடைக் கூடம், வாஸ்து மீன் தொட்டி போன்ற (மேசையைத் தட்டும் ஒலி) அலுவலக உபயோகங்கள் அல்லாத வேறு உபயோகங்களுக்கான இடங்கள்தான். அந்தக் கட்டடத்தின் வடிவமைப்பு வணிகக் கட்டடங்களைப் போன்று அமைக்கப்பட்டுள்ளதால்தான், அலுவலகத்திற்காக பயன்படுத்தக்கூடிய இடம் 49 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், 624 கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தைச் செலவு செய்து கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் பாதிக்கு மேல் பயன்படுத்த முடியாத வெற்றிடமாக உள்ளது; மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–30

பிளாக் A கட்டுவதற்கு உத்தரவு வழங்கி ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு 21–5–2009–ல் அரசாணை எண் 81–ல் ஏனைய அரசுத் துறைகளுக்காக பிளாக் B கட்டடத்தைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு சில அரசுத் துறைகள் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், சட்டமன்றம் மட்டும் ஒரு இடத்திலும், ஏனைய அரசுத் துறைகள் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேறு ஒரு இடத்திலும் செயல்பட வேண்டும் என்று அறிவார்ந்த எந்த அரசும் முடிவு செய்ய இயலுமா? அரசு நிருவாகத்தைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் கட்டடம் கட்டப்பட ஆணையிடப்பட்டதால்தான், பெரும் நிருவாகச் சிக்கல் ஏற்படக் காரணமாயிற்று.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள பிளாக் A கட்டடத்தில் கட்டடப் பணிகள் முழுமையாக முடிவடையாமலேயே 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திறப்பு விழா நடத்தப்பட்டது. அந்தக் கட்டடத்தின் மேற்கூரை கோபுரம் கட்டி முடிக்கப்படாமலேயே தற்காலிக செட்டிங் போட்டு 3 கோடி ரூபாய்க்கு மேல் வீணடிக்கப்பட்டது. கட்டடத் தொடக்க விழா நடத்தப்பட்டு விட்டதால், முழுமையடையாத கட்டடத்தில் 19–3–2010 அன்று சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற வேண்டியதாயிற்று. அவ்வாறு 19–3–2010 அன்று சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றபோது சட்டமன்றத் தரையில் புதிய தரை விரிப்புதான் போடப்பட்டிருந்தது. காலரிகள் உள்ள முதல் மாடி முடிக்கப்படாததால் பெரிய திரைச்சீலை ஒன்றினால் சுவர்கள் மறைக்கப்பட்டும், தற்காலிக இருக்கைகள் அமைக்கப்பட்டும் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றப் பேரவைத் தலைவர் இருக்கையும்கூட தற்காலிகமாக உயர்த்தப்பட்ட மேடையில் நிறுவப்பட்டது.



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திறப்பு விழா நடைபெற்றும் பணிகள் முடிக்கப்படவில்லை என்று மக்கள் குறை கூறிய காரணத்தால், ஒரு சில துறைகள் மட்டும் அவசர கோலத்தில் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன.

தான் சிந்திக்காமல் கட்டடம் கட்ட எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் ஆறு துறைகளை மட்டும் புதிய கட்டடத்திற்கு மாற்றிவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. தலைமைச் செயலகம் இவ்வாறு இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இரண்டு கட்டடங்களிலிருந்து செயல்பட இயலுமா? அரசு நிருவாகத்தைப் பற்றி, தெரிந்த எவரும் இவ்வாறு இரண்டு கட்டடங்களிலிருந்து செயல்பட வேண்டும் என்று கூறமாட்டார்கள். தலைமைச் செயலகத்தில் கோப்புகளில் எவ்வாறு உத்தரவுகள் இடப்படும் என்று அறிந்த எவரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்படுங்கள் என்று கூறமாட்டார்கள். உதாரணமாக, பள்ளிக் கல்வித் துறையிலிருந்து ஏதேனும் ஒரு உத்தரவு வேண்டி கோப்பு முதலமைச்சர் வரை சுற்றனுப்பப்படுகிறது என்றால், அந்தக் கோப்பு எவ்வாறு பயணிக்கும் என்பதை இப்போது பார்ப்போம். சுற்றோட்டக் குறிப்பு அதாவது Circulation Note தயாரித்து பள்ளிக் கல்வித் துறைச் செயலர் கையெழுத்திட்ட பின், அந்தக் கோப்பு தலைமைச் செயலர் கையெழுத்திடுவதற்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தலைமைச் செயலர் கையெழுத்திட்ட பின் அந்தக் கோப்பு மீண்டும் துறைச் செயலருக்கு புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து, அதன் பின்னர் அமைச்சரின் கையெழுத்திற்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பெறப்பட்டு முதலமைச்சர் ஆணைக்காக புதிய கட்டடத்திற்கு மீண்டும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜுன் 10

அனுப்பப்பட்டு, ஆணை பெறப்பட்ட பின் *(மேசையைத் தட்டும் ஒலி)* புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள துறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அரசாணை வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு கோப்பும் இவ்வாறு பல முறை ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்தால் நிருவாகம் நடத்த இயலுமா? *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, துறை அமைச்சர் தனது துறைச் செயலாளருடன் ஏதாவது விவாதிக்க வேண்டும் என்று கருதினால், புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தனது அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். அவ்வாறு விவாதிக்கும்போது ஏதேனும் ஒரு கோப்பை அமைச்சர் பார்வையிட வேண்டும் என்று எண்ணினால், அவர் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து அந்தக் கோப்பை எடுத்துக் கொண்டு ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மீண்டும் செல்ல வேண்டும். இது நடைமுறையிலே சாத்தியமா? அரசு நிருவாகத்தைப் பற்றி கவலையேபடாதவர்கள் இரண்டு வெவ்வேறு இடங்களில் மாத்திரமென்ன, பல இடங்களில் இருந்தும் செயல்பட முடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், அரசு நிருவாகம் திறமையாகச் செயல்பட வேண்டுமென்று நினைப்பவர் யாரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்பட முடியாது. செம்மையான நிருவாகம் இருந்தால்தான், மக்கள் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதால்தான், புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட ஆறு துறைகளையும் எஞ்சிய 30 துறைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நான் மாற்றியுள்ளேன். நிருவாக வசதிக்காக எடுக்கப்பட்ட இந்த முடிவில் அரசியல் காரணம் எங்கிருந்து வந்தது?

*பிற்பகல் 12–35*

மேலும், போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னையின் மத்தியப் பகுதியில் உள்ள அண்ணா சாலையில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால், மேம்பாலங்கள் கட்டப்பட்டால்தான், அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம் என்பதை முந்தைய அரசே உணர்ந்திருந்தது. எனவேதான் அங்கே மேம்பாலங்கள் கட்டப்படும் என 2010–2011 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அறிவிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மேம்பாலங்கள் கட்டப்படவில்லை. சாலை மேம்பாலம் தொடங்கப்படாத நிலையில், ஓமந்தூரார் அரசினர் தோட்ட கட்டடப் பகுதியிலுள்ள அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவே இயலாது. இவ்வாறு முழுமையடையாத, நிருவாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய கட்டடத்திலிருந்து எவ்வாறு செயல்பட முடியும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.



2011 ஜுன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

புதிய பிளாக் A கட்டடம் பயன்படுத்தப்படாமல் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுவிடும் என்று தி.மு.க. வினர் அங்கலாய்க்கத் தேவையில்லை. இந்தக் கட்டடம் உரிய முறையில் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி, மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட அன்றே மக்கள் பயன்பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன். மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால்தான், எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மிக அதிகமாக இலவசங்கள் வழங்குவோம் என்று கூறி மக்களிடமிருந்து ஓட்டுக்களைப் பறித்துக்கொள்ளும் திட்டமாக இதை நான் கருதவில்லை. இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய திட்டம். எனவேதான், முதல் நாளிலேயே அதற்கான உத்தரவைப் பிறப்பித்தேன்.

அதைப்போன்றுதான் அன்று பிறப்பித்த ஏனைய உத்தரவுகளும். மகளிருக்கு வழங்கும் திருமண உதவித் திட்டத்துடன் தாலிக்கான 4 கிராம் தங்கம்; இளங்கலைப் பட்டம், பட்டயம் படித்த மகளிருக்கு 50,000 ரூபாய் மற்றும் தாலிக்கான 4 கிராம் தங்கம் வழங்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தேன்.

இது திருமணத்திற்காக இலவசமாக வழங்கும் பரிசு அல்ல; இதில் ஒரு பெரும் பொருள் புதைந்து இருக்கிறது. பாரதி கண்ட கனவான ‘ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை’ என்ற நிலை ஏற்பட வேண்டுமென்றால், பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். எனவேதான், இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையை இரட்டிப்பாக்கி, *50,000/–* ரூபாய் என உத்தரவிட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகப் பொருளாதாரக் காரணங்களினால் தங்கத்தின் விலை விண்ணை எட்டும் அளவு ஏறிக்கொண்டிருக்கும் நேரத்தில், திருமண உதவியாக தங்கம் வழங்க வேண்டும் என்பதால்தான் தேர்தல் அறிக்கையிலேயே அதைக் குறிப்பிட்டு அதற்கான உத்தரவையும் பிறப்பித்தேன்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவித் தொகைகளுக்கு எல்லாம் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்றே தி.மு.க. –வைச் சேர்ந்தவர்கள் தங்களது திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன, அவ்வளவுதான் என்று பொத்தாம் பொதுவாகக் கூறியுள்ளனர்.

மேலும், முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி தனது கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில், பல இலவசத் திட்டங்களை தங்கள் காலத்திலேயே ஏற்படுத்தியபோது, மக்களின் வாழ்க்கையையே பாழாக்குகிறார்கள் என்றும், மக்களை முன்னேற விடாமல் சோம்பேறி ஆக்குகிறார்கள் என்றும் சில எதிர்க் கட்சியினரும், ஏடுகள் நடத்தும் சிலரும் கண்டனம் தெரிவித்தார்கள் என்று கூறி, தற்போது இலவச அரிசித் திட்டத்தைப் பத்திரிகைகள் பாராட்டுவதற்கு தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். மக்கள் வறுமையில் இருந்து விடுபடும்வரை வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவையானவை வழங்கப்படுவதும், இலவசம் என வழங்கப்படுவதும் வேறு வேறு ஆகும். மனித வளம் மேம்பட மனிதர்கள் தங்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பெற அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை நாங்கள் என்றுமே எதிர்த்தது கிடையாது. வாழ்க்கைத்தரம் முன்னேற வழங்கப்படும் சலுகைகளுக்கும், இலவசங்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒரு சிறிய எல்லைதான். எந்த எல்லைக்குள் இருப்பது, மனித வள மேம்பாட்டிற்கு ஏற்றது என்பதும், எந்த எல்லைக் கோட்டைத் தாண்டுவது மக்களை ஏமாற்ற வழங்கப்படும் இலவசம் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு மக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக வழங்கப்படும்



இலவசங்களைத்தான் நாங்கள் எதிர்த்து வந்தோம். இலவசமாக வழங்குகிறோம் என்று இறுமாப்புடன் சொல்வது; மக்கள் நலத் திட்டங்களை ஏதோ தானமாகக் கொடுப்பதாக நினைத்துக் கொள்வது ஆகியவைதான் தவறு. ஏழைகளுக்கு வழங்கப்பட்டவைகளை முந்தைய மைனாரிட்டி தி.மு க. அரசு இலவசம் என்று கொச்சைப்படுத்தியது. ஏழைகள் உள்ளவரை இலவசங்கள் தொடரும் என்று இறுமாப்புடன் கூறினார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. இலவசங்களை வழங்கி மக்களை ஏமாற்றிவிடலாம் என்று தி.மு.க. கருதியதால்தான் இலவசங்களைப் பெற்ற மக்கள் நன்றியுடன் தங்களுக்கு வாக்களிக்கவேண்டுமென்று மக்கள் நலத் திட்டங்களை வாக்குகள் பெறப் பயன்படும் கருவியாகப் பார்த்தார்கள். மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் வரிப் பணத்தாலேயே வழங்கப்படுபவை என்பதை மறந்து, அதை மறைத்து, மக்களுக்கு ஏதோ தானம் வழங்குவதைப் போல தி. மு. க. வினர் பேசினார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–40*

இலவசங்களை மக்களுக்குப் பயன்படுபவையாகக் கருதாமல், தங்கள் சொந்த நலனையே முந்தைய தி. மு. க. அரசு கருதியது என்பதற்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டமே சிறந்த உதாரணமாகும். *2006* ஆம் ஆண்டு தி.மு.க. வின் தேர்தல் அறிக்கையில், மகளிர் பொது அறிவு வளர்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, பின்னர் அரசாணை வெளியிடப்படும்போது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு *14* inch வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என அரசாணை வெளியிடப்பட்டது. அதன் பின்னர், வாய்மொழியாக குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்களுக்கு வழங்கப்பட்டதாக முந்தைய மைனாரிட்டி தி. மு. க அரசு சொல்லும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை சுமார் *1* கோடியே *64* இலட்சமாகும். *2001* ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை *1* கோடியே *42* இலட்சமாகும். அதில் கிட்டத்திட்ட *56* இலட்சம் குடும்பங்கள் தொலைக்காட்சிப்

பெட்டி வைத்திருந்தார்கள். இதில் எவ்வளவு பேரிடம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை என்ற புள்ளிவிவரம் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இல்லை. எனினும், 50 சதவீதம் பேர் தான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தார்கள் என்று எடுத்துக் கொண்டாலும், 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பின்னர் புதியதாக ஏற்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும், 1 கோடியே 64 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்குமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் யார் என்ற முழுமையான கணக்கையே முந்தைய தி. மு. க. அரசு எடுக்கவில்லை. எந்த ஒரு அரசுத் திட்டமானாலும், எந்த ஒரு கோரிக்கையானாலும், தனக்கு என்ன தேவை என்பதை அதைக் கோருபவர் கையொப்பமிட்டு விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்பதுதான் அரசின் நடைமுறை. ஆனால் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தில் எந்த விண்ணப்பமும் பெறப்படவில்லை. முந்தைய தி. மு. க. அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் என தயாரித்த பட்டியலின் அடிப்படையிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுவிட்டன. எனவேதான், சொந்தமாக கார் வைத்திருப்பவர்கள்கூட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்க தங்கள் காரிலேயே வந்து அதனை வாங்கிச் சென்றதையெல்லாம் மக்கள் பார்த்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவ்வாறு வழங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டித் திட்டம் மக்களுக்குப் பயன் தரக்கூடிய திட்டமா? அல்லது ஆட்சியாளர்களுக்குப் பயன்படக்கூடிய திட்டமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களும், தமிழக மக்களும் தீர்மானிக்கட்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான கேபிள் இணைப்பிற்கு மக்கள் கட்டணம் செலுத்த வேண்டும். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்காக ஐந்தாம் கட்டம் வரை முந்தைய தி. மு. க. அரசு ஒதுக்கீடு செய்த தொகை, 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஆகும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒவ்வொன்றும்





பல்வேறு கட்டங்களில் 2,061 ரூபாயிலிருந்து 2,965 ரூபாய் வரை வாங்கப்பட்டு உள்ளது. அதாவது, சராசரியாக ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு 2,265 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பணம் மக்கள் வரிப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டதுதான். அவ்வாறு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட மக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக கேபிள் கட்டணம் செலுத்த வேண்டும்.

கேபிள் இணைப்புத் தொழிலில் கோலோச்சிக் கொண்டிருப்பவர்கள் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பேரன்கள் திரு. கலாநிதி மாறனும், திரு. தயாநிதி மாறனும், திரு. துரை தயாநிதியும்தான். 2,265 ரூபாய் மதிப்புள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட பொது மக்கள், திரு. கருணாநிதியின் குடும்பத்திற்குக் கேபிள் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4,000 கோடி ரூபாய் செலுத்தி வருகின்றனர். அதாவது, மக்கள் வரிப் பணத்தில் இருந்து——கவனிக்க வேண்டும்; ——மக்கள் வரிப் பணத்தில் இருந்து 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவழித்துவிட்டு, ஆண்டுதோறும் தனது குடும்பத்திற்கு 4,000 கோடி ரூபாய் வருமானத்திற்கு வழி செய்துவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. *(மேசையைத் தட்டும் ஒலி)* திரு. கருணாநிதியின் குடும்பத்திற்கு ஓராண்டிற்கு 4,000 கோடி ரூபாய் கேபிள் கட்டணமாகக் கிடைக்கிறது என்றால், 5 ஆண்டுக் காலத்திற்கு 20,000 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என்றுதான் கணக்கிட வேண்டும். எனவே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் மக்கள் நலனைக் கருதாமல் சொந்த நலனுக்காக தி.மு.க. ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் என நான் ஆணித்தரமாகக் கூறுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12—45*

எனவேதான், கடந்த ஜனவரி மாதம் முந்தைய தி.மு.க. அரசால் ஆறாம் கட்டமாக கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்ட 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில், இதுவரை கொள்முதல் செய்யப்படாத சுமார் 7 இலட்சத்து 48 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதலுக்கான உத்தரவு இரத்து செய்யப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே

கொள்முதல் செய்யப்பட்டு இன்னமும் வழங்கப்படாத 1 இலட்சத்து 27 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, அனாதை இல்லங்கள், அரசுப் பள்ளிகள், ஊராட்சிகள், அரசு மருத்துவமனைகள், சுகாதார துணை மையங்கள், அங்கன்வாடி மையங்கள் போன்ற அமைப்புகளுக்கு வழங்கவும் இந்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தி. மு. க. அரசால் கொண்டு வரப்பட்ட எல்லா இலவசத் திட்டங்களுமே இதுபோன்ற ஊழல் மலிந்த திட்டங்கள்தான். “ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்” என்பதுபோல, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை மட்டும் இங்கே சொல்லி, அத்துடன் நிறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

ஊரக வீட்டு வசதித் திட்டம்பற்றி சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் கைவிடப்படுவதைப் பற்றி இங்கே சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டது. அத்திட்டத்தில் வழங்கப்படும் மானியமான 75 ஆயிரம் ரூபாயில் ஏழையெளிய குடும்பங்கள் வீடு கட்ட இயலாத நிலையிலேயே இருந்தனர். கட்டுமானச் செலவு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில், ஏழைக் குடும்பங்கள் கடன் வாங்கித்தான் வீடு கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடன்சுமை இல்லாத வகையில் கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்பதால், சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இந்தத் திட்டத்தின்படி, சுமார் 300 சதுர அடி அளவில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் அரசே வீடு கட்டி கொடுக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போலவே, நகர்ப்புற ஏழைகளின் வீட்டு வசதிக்காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

அனைவருக்கும் பயன் அளிக்கக்கூடிய தரமான மருத்துவச் சேவையை வழங்குவதே இந்த அரசின் குறிக்கோளாகும். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைவருக்கும் பயன்படக்கூடிய வகையில் அமையப்பெறவில்லை. அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை





1 இலட்சம் ரூபாயாகும். குடும்பத்திலுள்ள ஒரு நபர் இந்தத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள முழு காப்பீட்டுத் தொகையையும் பயன்படுத்திவிட்டால், அவரோ அல்லது அவரது மற்ற குடும்ப உறுப்பினர்களோ திட்டம் அமலில் உள்ள நான்கு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின்மூலம் எந்தப் பயனையும் பெற இயலாது. மேலும், அனுமதிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான 1 இலட்சம் ரூபாய் சில உயிர் காக்கும் பெரிய அறுவைச் சிகிச்சைகளுக்குப் போதுமானதாக இல்லை. இந்தத் திட்டத்தில் மருத்துவப் பரிசோதனைகளுக்கான கட்டணங்களை வழங்கவும் வழியில்லை; ஸ்கேன் போன்ற அதிகச் செலவு ஏற்படும் பரிசோதனைகளுக்குக்கூட இந்தத் திட்டத்தில் கட்டணங்கள் வழங்க இயலாது. இதனால் ஏழை நோயாளிகள் மருத்துவ பரிசோதனைகளுக்காகக் கடன் வாங்கித்தான் செலவழிக்கும் நிலை உள்ளது. மேலும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை போன்ற அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் பிந்தைய பாதுகாப்பு மற்றும் தொடர் மருத்துவச் சிகிச்சை வழங்க இந்தத் திட்டத்தில் வழிவகை இல்லை.

*பிற்பகல் 12—50*

காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நோயாளிகள் அறுவை சிகிச்சை மேற்கொண்டாலும், அதில் சேர்க்கப்படாத இனங்களுக்கான கட்டணங்களைத் தனியார் மருத்துவமனைகள் பயனாளிகளிடம் இருந்தே பெற்றன. சில தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளிடம் பணம் வசூல் செய்தல் போன்ற முறைகேடுகளிலும் ஈடுபட்டன. அரசு மருத்துவமனைகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் பணம் வழங்கப்பட வேண்டும். எனினும், இதுவரை வழங்கப்பட்ட மொத்த காப்பீட்டுத் தொகையான 850 கோடி ரூபாயில் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட தொகை வெறும் 10 கோடியே 49 இலட்சம் ரூபாய்தான். அதாவது, 1.2 சதவிகிதத் தொகையே அரசு மருத்துவமனைகளுக்குச் சென்றுள்ளது. மொத்தத்தில் இந்தக் காப்பீட்டுத் திட்டம் தனியார் மருத்துவமனைகள் அதிகம் வளர்ச்சி அடையவே பயன்பட்டது. எனவேதான், இந்தத் திட்டத்தை கைவிட இந்த அரசு முடிவு செய்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக்கூடிய வகையில்

ஒரு புதிய “பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை” இந்த அரசு அறிமுகப்படுத்தி. *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைவரும் தங்களுக்குத் தேவையான மருத்துவ வசதி பெறுவதை இந்தத் திட்டம் உறுதி செய்யும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்தபடியாக, சமச்சீர் கல்வி பற்றிய அரசின் கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். சமச்சீர் பள்ளிக் கல்வி முறையினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே எதிர்த்தது இல்லை. 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை சட்டமுன்வடிவு 2010 குறித்து இப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது, கொள்கையளவிலே சமச்சீர் கல்வி முறையை ஏற்றுக்கொள்வதாகத்தான் தெரிவித்தோம். சமச்சீர் கல்விக்கு இந்த அரசு எதிராக இருப்பதுப்போல சிலர் தவறாகச் சித்தரிக்க முயல்வது மக்களை திசைத் திருப்பும் முயற்சிதான். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சீரான, செம்மையான கல்வி பெறவேண்டும் என்பதும், தனியார் பள்ளிகளிலே வழங்கப்படும் உயர்தர கல்வி ஏனைய பிரிவினருக்கும் கிடைக்க வேண்டுமென்பதும்தான் எங்கள் கொள்கை.

மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பயன்படக்கூடிய சீரான, செம்மையான கல்வி முறை பாடத் திட்டத்தை வழங்காமல், பெயரளவிலே சமச்சீர் கல்வி என்று வழங்குவது தமிழ்நாட்டு மாணவர்களைப் பல ஆண்டுகள் பின்னோக்கி இழுத்து சென்றுவிடும் என்பதால்தான், தமிழ்நாட்டு சிறுவர் சிறுமியர் மேல் உள்ள அன்பினாலும், அக்கறையினாலும்தான் நாங்கள் முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட பாடப் புத்தகங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று அதனை மாற்ற முடிவு செய்தோம்.

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தன்னுடைய கவிதை இருப்பதால் இந்தப் பாடத் திட்டத்தையே நாங்கள் எதிர்க்கிறோம் என்றும், வேண்டுமென்றால் அந்தக் கவிதையை எடுத்துவிட்டு சமச்சீர் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு கூறியிருப்பதன்மூலம் ஏதோ ஒருசில பாடங்கள் இருப்பதால்தான் இந்த அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்கிறது என்று கூறி மக்களை திசைத் திருப்பப் பார்க்கின்றார்.





சமச்சீர் கல்வித் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டுமென்பதை முந்தைய அரசால் நியமிக்கப்பட்ட டாக்டர் முத்துக்குமரன் குழு தெளிவாக எடுத்துரைத்துள்ளது. சமச்சீர் கல்வி என்பது பல்வேறு வகை கல்வி முறைகளில் காணப்படும் குறைகள் களையப்பெற்று, நிறைகளை அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரே சீராக வழங்குவது என்று அந்த அறிக்கையின் முன்னுரையிலேயே டாக்டர் முத்துக்குமரன் குழு குறிப்பிட்டுள்ளது. ஆனால், தற்போது முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் சமச்சீர் கல்வி என்பது அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதற்குப் பதிலாக, அனைவருக்கும் ஒரே பாடப் புத்தகம் என்ற நிலையிலேயே நின்றுவிடுகிறது. இங்குள்ள பள்ளி சிறுவர், சிறுமியர் அறிவு வளர்ச்சி அடையவும், சிந்தனை மேம்படவும், ஏனையரோடு போட்டி போடும் தகுதியை வளர்த்துக்கொள்ளவும், தரம் வாய்ந்த கல்வியறிவு பெறுவதே சமச்சீர் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லாமல், அனைவருக்கும் ஒரே பாடப் புத்தகம் என்ற அளவிலேயே முந்தைய அரசின் சமச்சீர் கல்விக் கொள்கை நின்றுபோய்விட்டதுதான் பெரும் தவறு.

*பிற்பகல் 12—55*

சமச்சீர் கல்வி வெறும் ஒரே பாடப் புத்தகத்தால் ஏற்படுத்தப்படுவது அல்ல. சமமான தரம் உருவாக்குவதும், செயல்படுத்துவதும், பாடத்திட்டம் மட்டுமல்லாது, பள்ளி வசதிகள், ஆசிரியர் எண்ணிக்கை, அவர்தம் திறமை, பாட நூல்கள், தேர்வு முறைகள், பள்ளி நிருவாகம், பள்ளிக் கல்வி நிருவாகம் ஆகிய பள்ளிக் கல்வியின் அங்கங்கள், அவற்றின் தொடர்பாக யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெரும் திட்டம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் கலைத் திட்டம், நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உள் கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர், மாணவர் விகிதம் இவற்றுள் ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் மட்டும் சமச்சீர் கல்வியை உருவாக்க முடியாது என டாக்டர் முத்துக்குமரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, பல்வேறு சட்டங்கள் சில, ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன என்று டாக்டர் முத்துக்குமரன் அறிக்கை தெரிவித்து, “முரண்பாடுகளைச் சரிசெய்தும், தொகுத்தும், ஒரே சட்டமாக, சட்டமன்றத்தில் இயற்றப்படுவதே தமிழகக் கல்வியின் வளர்ச்சிக்கும், உறுதித் தன்மைக்கும் உதவும்.

*எனவே, அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும் ஒரு பொதுச் சட்டமாக ‘தமிழ்நாடு கல்விச் சட்டம்’ என்ற தலைப்பில் ஒரு சட்டம் இயற்ற பரிந்துரைக்கப்படுகிறது” எனக் குறிப்பிட்டு, அச்சட்டத்தில் பள்ளிகள் தொடங்குதல், ஆசிரியர் தகுதி, உள் கட்டமைப்பு வசதி, பள்ளிக் குழுக்கள், கலைத் திட்டம், தேர்வுகள், மாணவர் ஒழுக்க விதிகள், ஆசிரியர்கள் நடத்தை விதிகள், நெறிகள், போன்ற பல அம்சங்களும் இடம்பெற வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது.* இத்தகைய ஒரு comprehensive விரிவான சட்டம் இயற்றப்பட்டால்தான், சமச்சீர் கல்விமூலம் சிறப்பான கல்வியை அனைவருக்கும் அளிக்க இயலும்.

சமச்சீர் கல்வி முறை வெற்றிபெற வேண்டுமெனில், டாக்டர் முத்துக்குமரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, சமச்சீர் கல்வி வாரியம் அமைக்கப்பட்டு, அதன்கீழ் தேவைப்படும் கல்விக் குழுமங்களும் அமைக்கப்பட்டு, அவை உயிர்ப்புடன் செயல்பட தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் முடியும். ஒரேமாதிரி புத்தகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அதுதான் சமச்சீர் கல்வி என்று கூறுவது எத்தகைய கேலிக்கூத்து என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சமச்சீர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும்முன் இத்திட்டம் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கும் வகையிலும், புதிய பாடத் திட்டத்தில் அமைந்த பாடங்களைக் கற்பிக்க வழிகாட்டும் வகையிலும் நூல்கள் எழுதி வெளியிடுவது இத்திட்டம் சிறப்பாக நிறைவேற மிக அவசியம்.

உயர் நீதிமன்றம் தனது உத்தரவில், பத்தி 61—ல், ஆசிரியர்கள் தேர்வு முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

“The ambitious effort undertaken on the part of this State to bring in social justice and to have quality education will all come to naught if the selection of teachers is not made properly. The selection and appointment of teachers cannot be made just like selection and appointment of a clerk. A teacher must love teaching; she must love children. We come across horrible new items of physical violence committed by teachers on children. If the teacher imparts joy and inculcates confidence in the child, the child will willingly go to school. Therefore, definitely the



State will have to look at amendments to the rules relating to the recruitment of teachers, if it seriously intends this Act to transform the lives of the children across the State, whether they are poor, disabled, living in tribal areas, whether they are girl children or children from downtrodden sections of society or any child who does not have certain potential plus points, whom the State wants to uplift and in order to attain a quality of excellence, we hope therefore the State will address its attention in this regard also. Recently we read in the newspapers, the findings of an N.G.O. after a survey of schools in the country that our State has a very high percentage of student enrolment but the quality of teachers is low. This may be challenged as inaccurate but we insist that the State shall take steps to ensure that the teachers are of high quality.
”

உயர் நீதிமன்றத்தின் இந்த அறிவுரைபற்றி முந்தைய தி.மு.க. அரசு கவலைப்படவேயில்லை. ஆசிரியர் தேர்வுபற்றி சரியான முடிவு எடுக்கப்படாமல், தரமான கல்வி வழங்குவது என்பது இயலாத காரியமாகும். இந்தச் சட்டத்தின்மூலம் தற்போது நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி ஒரேவிதமான பாடப் புத்தகங்கள் கொண்டு வருவதோடு நின்றுவிடுகிறது என்பதால்தான், இதை அவசரக் கோலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது என நாங்கள் கருதுகிறோம். இவ்வாறு அரைகுறையாக நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி, சமமான கல்வியாகவும் இருக்காது; சீரான கல்வியாகவும் இருக்காது *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதால்தான், சமச்சீர் கல்வித் திட்டம் நிறைவேற்றப்படுவதை நாங்கள் தள்ளி வைத்து, அதற்காக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நமது மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலம் அமையப்பெற, அதற்கான கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று தீர்மானித்து, சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான நடைமுறைகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைக்கவுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1—00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சில புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

**அறிவிப்பு ஒன்று** : ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளைப் பதனிடுவதை முக்கியப் பணியாக இந்த ஆலை கொண்டுள்ளது. ஒரு மாதத்தில் சுமார் 18 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது இந்த ஆலை. ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்ட சாயக்கழிவு நீரால் ஏற்பட்ட மாசுக்கு அபராதத் தொகை செலுத்த வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அபராதத் தொகையான 1 கோடியே 11 இலட்சத்து 46 ஆயிரத்து 363 ரூபாயைச் செலுத்தத் தவறியதால், 15–12–2010–ல் ஆலையை மூடுவதற்கு அறிவிப்பு அனுப்பியது. அதனை இரத்துச் செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், இதற்காகக் கண்காணிப்புக் குழு அமைத்து, அதன் அறிவுரையின் பேரில் ஆலையைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உத்தரவின்படி, 23–2–2011 முதல், தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை மூடப்பட்டது. உயர் நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழு மார்ச் மாதம் ஆலையை ஆய்வு செய்து தெரிவித்த அறிவுரைகளை ஆலை நடைமுறைப்படுத்தியது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மீதமுள்ள அபராதத் தொகையான 1 கோடியே 11 இலட்சத்து 46 ஆயிரத்து 363 ரூபாயை உடனடியாகச் செலுத்த வேண்டுமென்பதுடன், மேலும் சில நிபந்தனைகளை விதித்தது. மூடப்பட்டுள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையைத் திறப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டதன் அடிப்படையில், அபராதத் தொகை முழுவதும் 30–5–2011–ல் செலுத்தப்பட்டுவிட்டது. நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் முறையான ஆய்வுக்குப் பிறகு 1–6–2011–ல் இந்த ஆலையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆலையை இன்று Video Conferencing முறைமூலம் நான் திறந்து வைக்கவுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் மூடப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையை இன்று திறப்பதன் மூலம், 300 தொழிலாளர்களும், அவர்தம் குடும்பத்தினரும் வாழ்வு



பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பள்ளிக் குழந்தைகளுக்கான இலவசச் சீருடையை உரிய காலத்தில் வழங்கவும் இயலும்.

**அறிவிப்பு இரண்டு** : தீ விபத்தினால் முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு 2 ஆயிரம் ரூபாயும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ஆயிரம் ரூபாயும் தற்போது நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்யும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும்போது, முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு 5 ஆயிரம் ரூபாயும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு 2,500 ரூபாயும் நிவாரண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதே அடிப்படையில், தீ விபத்துகளினால் முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு 5 ஆயிரம் ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு 2,500 ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது உடனடியாக அமல்படுத்தப்படும்.

**அறிவிப்பு மூன்று** : ஒவ்வொரு கிராமத்திலும் நில உரிமையாளர்களைக் காட்டும் பதிவேடுகள் சரியானதாகவும், தற்போதுள்ள நிலையைக் குறிப்பிடுவதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு உண்மையான உரிமையாளர்கள் மற்றும் உண்மையான அனுபவதாரர்களின் பெயர்கள் நில உரிமைப் பதிவேட்டில் பதியப் பெற்றிருந்தால்தான், நில உரிமைதாரர்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட இயலும். தற்போதுள்ள விதிமுறைகளின்படியும், மக்கள் சாசனம், அதாவது, Citizen Charter–ன்படியும், பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தினை வட்டாட்சியர் மற்றும் மண்டலத் துணை வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிலங்கள் உட்பிரிவு செய்து, பட்டா மாறுதல் செய்யப்பட வேண்டிய இனங்களில் 30 நாட்களிலும், உட்பிரிவு செய்யப்படத் தேவையற்ற இனங்களில் 15 நாட்களிலும் பதிவு மாறுதல் செய்யப்பட வேண்டும். ஆனால், தற்போது பல்வேறு காரணங்களினால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது.

பட்டா மாறுதல் விண்ணப்பங்கள்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எனவே, பட்டா

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

மாறுதலுக்கான விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் கொண்டுவரப்படும். பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொதுமக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களை கிராம நிர்வாக அலுவலரிடம் V.A.O.–விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும். வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோர் ஒரு குழுவாகச் செயல்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள்மீது விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள். பட்டா மாறுதலுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு, அதிகாரிகள் அளவில் நில நிர்வாக ஆணையர் மட்டத்திலும், வருவாய்த் துறை அமைச்சர் அளவிலும் ஆய்வு செய்யப்படும். வருவாய் நிலை ஆணையில், அதாவது Revenue Standing Order–ல், தக்க மாறுதல் செய்யப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படும்.

*பிற்பகல் 1–05*

இதைப்போன்ற முதியோர் உதவித் தொகை உட்பட அரசின் மாதாந்திர ஓய்வூதியத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களும் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், அடங்கிய குழுவால் சரிபார்க்கப்பட்டு, ஓய்வூதிய ஆணைகள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சுதந்திரம் அடைந்துவிட்டதாகத் தமிழக மக்கள் அனைவருமே உணர்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுக் காலமாக மக்களுடைய அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் பறிக்கப்பட்டிருந்தன. கடந்த 5 ஆண்டுக் காலமாக பத்திரிகைகளும், ஊடகங்களும்கூட இந்த அடக்குமுறையை அனுபவித்தன. உண்மையான விவரங்கள்கூட வெளியிடுவதற்கு அனுமதி வழங்காத ஒரு நிலைமை இருந்தது. உண்மையை வெளியிட பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும் அனுமதி தேவையில்லை. அதுதான் ஜனநாயகம்; ஆனால், அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை சூழ்நிலை நிலவியது. உதாரணத்திற்கு ஒருசிலவற்றை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

இதே சட்டமன்றப் பேரவையில், கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒருமுறை நான் இங்கே பேசியபோது, புரட்சித் தலைவர்



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எம். ஜி. ஆர். அவர்களின் பாடல் வரிகளைக் குறிப்பிட்டேன். “என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! இருட்டினில் நீதி மறையட்டுமே! தன்னாலே வெளிவரும் தயங்காதே! ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!” என்று சொல்லிவிட்டு, அதன்பிறகு நான் வெளியேறிவிட்டேன். நான் சென்றபிறகு, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, இந்தப் பாடலைக் குறிப்பிட்டு, “ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!” என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடியது தன்னைத்தான் —அதாவது, திரு. கருணாநிதியைத்தான் என்று குறிப்பிட்டு—அவர் என்னைச் சொல்லவில்லை—ஏனென்றால், ஒரு தலைவி இருக்கிறாள் என்று சொல்லவில்லை; ஒரு தலைவன் இருக்கிறான் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஜெயலலிதாவை அவர் குறிப்பிடவில்லை என்று அவர் சொன்னார். நான் வெளியே சென்றபிறகுதான் இதைக் கேள்விப்பட்டேன். அதற்கு நான் பதிலளித்து ஒரு அறிக்கை வெளியிட்டேன். புரட்சித் தலைவர் என்னைப் பார்த்து, “திருவளர் செல்வியோ, நான் தேடிய தலைவியோ!” என்று பாடியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதில் என்னைத்தான் குறிப்பிடுகிறார். அவருடைய அரசியல் வாரிசு நான்தான் என்பதை அனைவருக்கும் அடையாளம் காட்டியிருக்கிறார் என்று நான் பதிலடி கொடுத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், இது திரு. கருணாநிதிக்குப் பிடிக்கவில்லை. இப்படிப் புத்திசாலித்தனமாகச் சொன்னதற்கு, உடனடியாக ஜெயலலிதா பதிலடி கொடுத்துவிட்டாரே என்று அனைத்துப் பத்திரிகைகளையும் மிரட்டி இந்தச் செய்தியை வெளியிடக்கூடாது என்று கட்டாயப்படுத்தி, என்னுடைய அறிக்கை எந்தப் பத்திரிகையிலும் வெளியிடப்படவில்லை என்பதுதான் உண்மை. ஆக, இந்த அளவிற்கு அற்பத்தனமான காரியங்களில், அற்பத்தனமான சிந்தனையில் அந்தக் காலக்கட்டத்தில் முதலமைச்சரே செயல்பட்டிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொல்கிறேன்.

கடந்த ஆண்டு நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, வரிசையாக பல பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்களை நடத்தினேன். கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரம்மாண்டமான கூட்டம் திரண்டுவிட்டது. அனைத்துப் பத்திரிகைகளும் அந்தக் கூட்டத்தைப்பற்றிப் பிரமாதமாகச்

செய்திகளை வெளியிட்டன. உண்மையைச் சொன்னார்கள். *8* இலட்சம் பேருக்குமேல், *9* இலட்சம் பேருக்குமேல் அங்கே கூடிவிட்டார்கள் என்ற உண்மையைச் சொன்னதால், திரு. கருணாநிதிக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது. அடுத்து, ஒன்றரை மாத காலத்திற்குள் திருச்சியிலே ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடத்தினேன்.

கோவையில் திரண்ட கூட்டத்தைவிட மூன்று மடங்கு அதிக கூட்டம் அங்கே திரண்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* கோவையிலே ஏழு இலட்சம் பேர் திரண்டார்கள் என்றால், திருச்சியிலே *21* இலட்சத்திற்குமேல் கூட்டம் கூடிவிட்டது என்று எல்லோரும் சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், அன்றைய காலக்கட்டத்தில் திரு. கருணாநிதி அனைத்துப் பத்திரிகைகளையும் மிரட்டி, கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதால், ஒரு பத்திரிகைகூட திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தைப்பற்றி செய்தியே வெளியிடவில்லை. ஒருசில பத்திரிகைகளில் ஜெயலலிதா திருச்சிக்கு சென்றார்; பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார்; சென்னை திரும்பினார் என்று மட்டும் போட்டார்களே தவிர, சில பத்திரிகைகளில் செய்தியே வெளியிடவில்லை. எந்தப் பத்திரிகையிலும் உண்மையை வெளியிடவில்லை. இங்கே பிரம்மாண்டமான மக்கள் கூட்டம், மகத்தான மக்கள் கூட்டம் கூடியது என்ற செய்தியை வெளியிடவில்லை. அதையே இருட்டடிப்பு செய்துவிட்டார்கள். ஆகவே, அந்த அளவிற்கு ஒரு பயம், ஓர் அச்ச உணர்வு, ஓர் அடக்குமுறை இருந்தது. பத்திரிகைகள் ஏன் பயப்படவேண்டும்? பத்திரிகை முதலாளிகள் முதலமைச்சரைக் கண்டு ஏன் பயப்படவேண்டும் என்று கேட்டால், அது அவர்களுக்குத்தான் தெரியும். என்ன காரணம் என்று அவர்களுக்குத்தான் தெரியும். அப்படிப்பட்ட ஓர் அடக்குமுறை அப்போது நிலவியது.

*பிற்பகல் 1–10*

அதுமட்டுமல்ல, நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவரை, எனக்குச் சாதகமான, கழகத்திற்குச் சாதகமான எந்தச் செய்தியும் வெளியிடக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு ஒரு Standing order போடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல; சட்டமன்றத்திற்கு நான் எப்போது வந்தாலும், என்னைப் பேசவிடாமல், முதலமைச்சரும் சரி, அத்தனை தி. மு. க. அமைச்சர்களும் சரி,





அடிக்கடி எழுந்து குறுக்கிடுவது மட்டுமல்ல; அவமானப்படுத்தி, கொச்சைப்படுத்தி, அசிங்கப்படுத்திப் பேசினார்கள்.

அதுமட்டுமல்ல; அன்றைய சபாநாயகர் திரு. ஆவுடையப்பன் அவர்கள், நான் ஆரம்பத்தில் சட்டமன்றத்திற்கு வந்தபோது அவருக்கு வணக்கம் தெரிவித்தபோது, மரபுப்படி பதில் வணக்கம் தெரிவித்தார். அதுகூட அன்றைய முதல்வருக்குப் பொறுக்கவில்லை. தனியாக அழைத்து திரு. ஆவுடையப்பன் அவர்களை, வாங்கு வாங்கு என்று வாங்கிவிட்டார் போலும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதன்பிறகு நான் சட்டமன்றத்திற்கு வந்து வணக்கம் தெரிவித்தால்கூட பதில் வணக்கம் கூட தெரிவிக்காமல் சபாநாயகர் முகத்தைத் திருப்பிக்கொள்வார். *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படி ஒரு சூழ்நிலையை ஒரு ஜனநாயக நாட்டில் தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்தச் சட்டமன்றத்திலாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றையதினம் நீங்கள் எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுகிறீர்கள், கண்ணியத்துடன் பழகுகிறீர்கள். ஆனால் அன்றைய நிலைமை என்ன? அதை நீங்களே கண்கூடாகப் பார்த்திருக்கிறீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதையெல்லாம் இன்றைக்கு எதற்காகச் சொல்கிறேன் என்றால், அனைவரும் வெறுப்படையக்கூடிய ஒரு சூழ்நிலைதான் கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக இங்கு தமிழகத்தில் நிலவியது. சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்; அனைவரையும் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன். நான் ஒரு முன்னாள் முதலமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், எனக்கே இந்த நிலைமை என்றால், சாமானிய மக்களின் நிலை என்ன? அதனால்தான் மக்கள் இந்தக் கொடுங்கோல் குடும்ப ஆட்சி எப்போது ஒழியும்? *(மேசையைத் தட்டும் ஒலி)* இதற்கு எப்போது நாம் வழிசெய்யலாம் என்று காத்திருந்தார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை, யாருக்கும் எந்தவிதமான சுதந்திரமும் இல்லை. மக்கள் வேறு எதை விரும்புகிறார்களோ இல்லையோ, எந்த நாட்டிலும் சரி, பொதுமக்கள் சுதந்திரத்தை விரும்புவார்கள். இந்தியா என்று மட்டுமல்ல; எந்த நாட்டிலும் அதேதான். அதனால்தான் முசோலினி, ஹிட்லர், இடிஅமீன் போன்ற சர்வாதிகாரிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குமேல் அவர்களுடைய நாட்டு மக்களாலேயே தூக்கியெறியப்பட்டார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

(மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, கொடுங்கோல் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி திரு. கருணாநிதியின் குடும்ப ஆட்சியைத் தமிழக மக்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து தூக்கியெறிந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இனி தமிழ்நாட்டில் அத்தகைய ஒரு நிலைமை எந்தக் காலத்திலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக மக்களுக்கு நான் அளிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் தெரிவித்தவாறு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதேநேரத்தில் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், அதாவது inclusive growth அமையும்வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

பிற்பகல் 1–15

மனித வளம் மேம்பாடு அடையச் செய்யும் நடவடிக்கைகளை எனது அரசு முனைப்போடு செயல்படுத்தும். மனித வள மேம்பாட்டில் முழு முதல் நடவடிக்கையாக பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982—லேயே கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள். அப்போது சத்துணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினராக இருந்தவள் நான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் காட்டிய வழியில் அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து, அரசின் கொள்கைகளை வகுத்து வருகிறோம். அந்த அடிப்படையிலேதான் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக பாட நூல்கள் வழங்கும் திட்டம், +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் ஆகிய முன்னோடித் திட்டங்களை நான் செயல்படுத்தினேன். அதேபோலதான், இப்போது +1, +2 பயிலும் மாணவ, மாணவியருக்கும், கல்லூரி மாணவ, மாணவியருக்கும் இலவச மடிக் கணினி வழங்கப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மனித வள மேம்பாட்டில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டுள்ளோம்.



2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை துறைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், முதன்மைத் துறையான விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் எங்கள் அரசு எப்போதும் முன்னுரிமை அளிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எதிர்மறையாக உள்ள வேளாண் வளர்ச்சியை சரி செய்து, விரைவான வளர்ச்சிப் பாதையில் வேளாண் துறையைக் கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

2005 ஆம் ஆண்டில் உழவர் பெருமக்களின் உன்னத வாழ்விற்காக, அதாவது, கருவறை முதல் கல்லறை வரை பயன்படக்கூடிய வகையில், “தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின் வந்த தி. மு. க. அரசு, நான் தொடங்கிய அந்தத் திட்டத்தையே பெயர் மாற்றம் செய்து, விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2006 எனச் சட்டம் இயற்றி நல வாரியம் ஒன்றையும் அமைத்தது. இதன்மூலம் விவசாயிகளுக்கு முழுமையான நன்மை கிடைக்கப்பெறவில்லை. எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் முழுமையான பயன் அடையும் வகையில் பல புதிய அம்சங்களை உள்ளடக்கிய புதிய உழவர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள், முந்தைய தி. மு. க. ஆட்சியில் ஏற்பட்ட நிருவாகச் சீர்கேடுகளை உடனடியாகக் களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில், மக்கள் கொந்தளிப்பார்கள் என்றும்கூட குறிப்பிட்டார்கள். இத்தகைய கருத்துகளைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 3 வாரங்களுக்குள்ளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சீரற்ற மின் விநியோகத்தை சீர்படுத்துதல், விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், மணல் கொள்ளையைத் தடுத்தல், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் என பல உறுதியான நம்பிக்கை தரும் நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருவதை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

அனைவரும் அறிவர். Breakneck speed என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதைப்போன்ற வேகத்தில் நாங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், எங்களிடம் வேகம் மட்டும் அல்ல, விவேகமும் உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, முந்தைய தி. மு. க. ஆட்சியின் அவலங்களைக் கண்டு கொந்தளித்த மக்கள் தற்போது அமைதியாகவும், வளமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்த நான்கு நாட்களாக மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, ஆக்கப்பூர்வமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு, ஐயங்களுக்கு எனது பதிலுரையின்மூலம் நான் தெளிவான விளக்கங்களை அளித்துள்ளேன். என்னுடைய பதிலுரையின்மூலம் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மன நிறைவு அடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான் இந்த அரசினுடைய குறிக்கோள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தக் குறிக்கோளை, இலட்சியத்தை, இலக்கினை அடைய இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முழு ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தீர்மானத்தை, ஏகமனதாக, ஒருமனதாக, நிறைவேற்றித் தருமாறு தங்கள்வாயிலாக அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



2011 ஜூன் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

*"2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் அன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களால் 7–6–2011 ஆம் நாள் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

## 2. அறிவிப்புகள்

### பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

### (அ) மதிப்பீட்டுக் குழு

*2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:*

1. திரு. பி. ஜி. நாராயணன்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. செ. தாமோதரன்
4. திரு. தங்க தமிழ்ச் செல்வன்
5. திரு. ஆர். சாமி
6. திரு. வி. மூர்த்தி

7. திரு. ப. தன்சிங்
8. திரு. வ. நீலகண்டன்
9. திருமதி. த. இந்திரா காந்தி
10. திரு. ஆர். சுந்தர்ராஜன்
11. திரு. டி. ஆர். பி. ராஜா
12. செல்வி கே. பாலபாரதி
13. திரு. எம். ஆறுமுகம்
14. திரு. ஜே. ஜி. பிரின்ஸ்
15. முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா
16. டாக்டர் க. கிருஷ்ணசாமி

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196–ன்கீழ் திரு. பி.ஜி. நாராயணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு

2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திருமதி. ஆர். ராஜலட்சுமி
2. திரு. கே.பி. அன்பழகன்
3. திரு. வி.பி. கலைராஜன்
4. திரு. ஒ.கே. சின்னராஜ்





5. திரு. இரா. துரைக்கண்ணு
6. திரு. ம. குணசேகரன்
7. திரு. பூ. செந்தூர் பாண்டியன்
8. திரு. கடம்பூர் ராஜூ
9. திரு. அ. முஹம்மத் ஜான்
10. திரு. மு. சு. மு. ஆனந்தன்
11. திரு. க. பாண்டியராஜன்
12. திரு. ச. இராமச்சந்திரன்
13. திரு. கோவி. செழியன்
14. திரு. ஆர். ராமமூர்த்தி
15. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
16. திரு. பி. வி. கதிரவன்

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204–ன்கீழ் திரு. ச. இராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## (இ) பொது நிறுவனங்கள் குழு

2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. வி. சோமசுந்தரம்
2. திரு. தா. மலரவன்

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 10

3. டாக்டர் சி. விஜயபாஸ்கர்
4. திரு. எஸ். கே. செல்வம்
5. டாக்டர் வைகைச்செல்வன்
6. திரு. எம். ரெங்கசாமி
7. திரு. பு. வெற்றிவேல்
8. திருமதி எல். ஜெயசுதா
9. டாக்டர் ச. துரையப்பா
10. திரு. எல். வெங்கடேசன்
11. திரு. ப. பார்த்தசாரதி
12. திரு. மு. திராவிடமணி
13. திரு. க. அன்பழகன்
14. திரு. டி. இராமச்சந்திரன்
15. திரு. ம. கலை அரசு
16. திரு. ரா. சரத்குமார்

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 1–25

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213–ன்கீழ், திரு. வி. சோமசுந்தரம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஈ) அவை உரிமைக் குழு

2011–2012 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:



2011 ஜூன் 10] [பேரவைத் தலைவர்]

1. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்
2. திரு. நயினார் நாகேந்திரன்
3. திரு. இரா. காமராஜ்
4. திரு. கே. எஸ். என். வேணுகோபாலு
5. திரு. ஜே. சி. டி. பிரபாகர்
6. திரு. பி. ஜி. இராஜேந்திரன்
7. திருமதி எஸ். கணிதா சம்பத்
8. திரு. ஆர். மனோகரன்
9. திரு. இரா. இராஜேந்திரன்
10. திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்
11. திரு. நா. இராமகிருஷ்ணன்
12. திரு. கே. தங்கவேல்
13. திரு. கு. லிங்கமுத்து
14. திருமதி எஸ். விஜயதரணி

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 227 (3)–ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்கள்.

## 3. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*6. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/2009) 1–9–2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 25–8–2009 ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*





*7. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (ஐந்தாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/2008) 1–9–2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 9–6–2009 ஆம் நாளிட்ட 94 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*8. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி. ஜே. 1) துறையின் 17–2–2011 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு [தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சியினை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறையின் 2–9–2010 ஆம் நாளிட்ட 208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*10. வேலூர் மாவட்டம், மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்டது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறையின் 5–1–2011 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. ]*

[2011 ஜூன் 10

*11. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*12. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–